# flex அருள்

டிசம்பர் 2018 கடவுளை வணங்குவோம் அருளினை பெறுவோம் விலை ரூ.50





முகூர்த்தப் பட்டுப்புடைவைகளுக்கு
ராசியான ஒரே இடம்


JEYECHANDRANS
The Art of Fashion

No. 433, Galle Road, Wellawatte, Colombo 06
Tel: 011 4528438/5 Fax: 011 2362822
New Branch: 194, Main Street, Colombo 11 Tel: 011 2438870
Web: www.jeyechandrans.com Skype: jeyechandrans 888





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




317, 317A, Galle Road, Wellawatte, Colombo 06. | T: +94 11 250 4470, 250 0098 | F: +94 11 2508934 E: info@littleasia.lk
| www.littleasia.lk | skype: little.asia.emporium 73, Main Street, Colombo 11.
| T: +94 11 2391592, 2391593 | F: +94 11 2391745 E: info@littleasiasilk.com
| www.littleasiasilk.com | Skype: little.asia.silk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Mcsons Organics (Pvt) Ltd. 672/3, Galle Road, Off Mayura Mw, Ratmalana.
Phone: 2636818 பிரபா டிரேடிங் கம்பனி 31, கபோஸ் லேன், கொழும்பு 11
Tel: 2329426, 2422750Tel: 2329426, 2422750
Tel: 263 6818 Shop: 232 9426 | Fax: 263 5399 | Email: mcsons@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





SPAN GROUP

Span Tower
Striving for Excellence

www.spantower.com

Head Office : No.48/3A & 3B, Dharmarama Road, Colombo 06, Sri Lanka.
Call : 0112 507 997, Email : Info@spantower.com, Web : www.span.lk

0777 415 662


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


**18-20** சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்



**21-25** அற்புத ஆலயங்கள் இலங்கை/ இந்தியா



**36-38** ஆனந்த ராமாயணத்தில் சீதையின் கதை



**65-68** சித்திரக்கதை (நாமதேவர்)



| | |
|---|---|
| 07 | எமது நோக்கம் |
| 08-09 | 63 நாயன்மார்கள். |
| 10-11 | சமய சம்பிரதாயங்கள் |
| 12-13 | மார்கழிப் பூவே |
| 14-16 | கிருஷ்ண லீலை |
| 17 | பாவை நோன்பின் விளக்கம் |
| 26 | இதனை பக்தியுடன் படியுங்கள் |
| 27 | ஐயப்ப விரதம் |
| 28 | சபரிமலை யாத்திரை |
| 31 | அருள் மொழிகள் |
| 32 | இந்து தர்ம சாஸ்திரம் |
| 34-35 | தற்கொலை எனும் மூடத்தனம் |
| 39-40 | தன்னம்பிக்கை |
| 41 | தினமும் ஒரு விரதம் |
| 42 | அர்த்தமுள்ள இந்துமதம் |
| 43 | யோகா கற்றுக் கொள்ளுங்கள் |
| 44 | பூச்சரம் |
| 50 | முத்திரை சாஸ்திரம் |
| 51 | ஷீரடி சாய்பாபா |
| 52 | மார்கழி ஸ்பெஷல் கோலங்கள் |
| 53-54 | பிரச்சனைகளை கண்டு பயப்படாதீர்கள் |
| 56 | ராஜ ராஜ சோழன் |
| 57 | மகாபெரியவரின் நகைச்சுவை |
| 58-59 | சைவநெறி/திருக்குறள் தெளிவு |
| 60 | பொருள் ஈட்ட மட்டுமா கல்வி? |
| 61 | சைவ சமையல். (உளுந்தோரை) |
| 62 | சிரி... சிரி... சிரி.. சிரிப்பு... |
| 70-72 | பஞ்சாங்கம்/ விரதங்கள் |
| 74 | மன்னா ஹ ஹ் ஹா! |
| 75-78 | 2018 ராசிபலன்கள் |
| 79 | சுவாமி விவேகானந்தர் |
| 80 | ஹைக்கூ கவிதைகள் |
| 81-85 | பக்தி/ நீதிக் கதைகள் |
| 86 | Flex அருள் தகவல்கள் |



**விளம்பரக் கட்டணங்கள்**

| | |
|---|---|
| முழுப்பக்கம் (வர்ணம்) | ரூபா 6,000/= |
| முழுப்பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (வர்ணம்) | ரூபா 4,000/= |
| ½ பக்கம் (கறுப்பு, வெள்ளை) | ரூபா 3,000/= |
| 1 BOX (கறுப்பு, வெள்ளை) | ரூபா 500/= |
| 1வது, 2வது, 3வது அல்லது கடைசி இரு பக்கங்களைக் கொண்ட வர்ண விளம்பரம் | ரூபா 15,000/= |

மேலதிக விபரங்களுக்கு
அழையுங்கள்: 0777 614 186

flex அருள்
ஆன்மீகம் மணக்கும் மாத இதழ்

சந்தா செலுத்துங்கள் அருள் இதழ்
உங்கள் முகவரிக்கே வந்துவிடும்



விபரங்கள் 88ம் பக்கம்



"like" us on facebook
https://www.facebook.com/flexarul




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது நோக்கம்

**"இந்து மதத்தின் பல அரிய தகவல்களை அறியத் தருவதே"**

ஒரு புகழ்பெற்ற நகைச்சுவைப் பேச்சாளர் ஒரு பள்ளி ஒன்றில் உரையாற்றினார். அவர் தனது பேச்சில் நகைச்சுவைத் துணுக்குத் தோரணங்களை இடைவெளி இல்லாமல் வரிசையாகக் கட்டித் தொங்கவிட்டார். ஆனால் மாணவர்கள் மறந்தும் கூடச் சிரிக்கவில்லை. ஒருவேளை அனைத்து மாணவர்களுக்கு அன்னியமொழி தாய் மொழியாக இருக்குமோ என்றெல்லாம் பேச்சாளர் மனதுக்குள் குழம்பினார்.

உண்மையில் நடந்தது என்னவென்றால் அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர். "நாளைக்கு எங்கள் பள்ளிக்கூடத்துக்குப் பேச ஒரு பெரிய பேச்சாளர் வாறார், நீங்க யாராச்சும் கெக்கே பிக்கேன்னு சிரிச்சிங்களோ தோலை உரிச்சிடுவன்" என முந்தைய நாளே மாணவர்களிடம் எச்சரித்து வைத்திருந்தார். புதுப் பிரம்புடன் இரண்டு வாத்தியார்கள் அதற்கான வேலையிலும் ஈடுபடுத்தியிருந்தார். பிறகு எந்த மாணவனுக்காவது சிரிப்பு வருமா?

நம்முடைய மனமும் பலநேரம் இந்த தலைமை ஆசிரியரைப் போன்றே வாழ்க்கையை ரசிக்க வேண்டிய நேரத்தில் ரசிக்காமல் எப்போது பார்த்தாலும் செய்யவேண்டிய வேலைகளை, அடையவேண்டிய லட்சியங்களை, கட்ட வேண்டிய மாதத் தவணைகளைப் பற்றி மட்டுமே நினைத்துக் கொண்டு சிரிப்பதைத் தள்ளிப் போட்டுவிடுகிறோம். இந்த விஷயங்களெல்லாம் நடந்தால்தான் சிரிப்பேன் என மகிழ்ச்சியாக இருப்பதற்குச் சில முன் நிபந்தனைகளை வேலை வெட்டியில்லாமல் விதித்துக் கொள்கிறோம். அந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதிலேயே எமது மகிழ்ச்சியையும் தொலைத்து விடுகிறோம்.

எனவே நாம் எப்போதும் கவலையில்லா மனதோடு சந்தோஷ மனப்பான்மையில் தன்னம்பிக்கை கொண்டவராக இருக்க பழகவேண்டும்.

கே. யோகேந்திரன்

- ஆசிரியர்

நல்வழி அருள்வழி.. அதுவே நம்வழி!




கௌரி
ஜுவலர்ஸ்

4/A, Fussels Lane, Galle Road,
Wellawatte.
(Close to Wellawatte Market)
Tel: 2360132 | Fax: 0094 1 2503471
Mobile: 077 5415526


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3.அமர்நீதி நாயனார்

குலம் - வணிகர்
பூசைநாள் - ஆனிபூரம்
அவதாரத் திருத்தலம் - பழையாறை
முக்தித் தலம் - திருநல்லூர்

அமர்நீதி நாயனார் தனது தொழிலான வாணிபத்தை மிக நேரத்தியாகவும், நேர்மையுடனும் ஆற்றிவந்தார். அறத்தின் வழியே பொருள் ஈட்டிய இவர் தன்னால் ஆன தர்மமாக சிவனடியார்களுக்கு உண்பதற்கு உணவும், உடுப்பதற்கு கோவணமும் தருமம் செய்து வந்தார்.

பழையாறு எனும் ஊரிலே பிறந்த இவர் எம்பெருமானின் திருவிழாக் கண்டு தரிசிப்பதற்காக திருநல்லூர் எனும் ஊரில் குடியேறினார். இத்தகைய மெய்யன்பரோடு ஈசன் திருவிளையாடல் புரிய எண்ணினார். உடனே ஈசன் பிரம்மச்சாரிய வேடம் பூண்டு அமர்நீதி நாயனார் இல்லம் வந்தார். பிரம்மச்சாரியார் நாயனாரை நோக்கி நீர் சிவனடியார்களை திருவமுது செய்வித்து அவர்களுக்கு வஸ்திரங்களும், கோவணமும் கொடுக்கின்றீர் என்பதைக் கேள்வியுற்று, உம்மைக்காண வந்தேன் என்றார் ஈசன். அதைக்கேட்ட அமர்நீதி நாயனார், இந்த திருமாடத்தில் நீரும் தங்கி அமுதுண்டு செல்வாயாக என்றார்.

சரி என்ற பிராமணர் ஐயனே அமுதுண்ண முன்னர் காவேரியில் நீராடி வருகிறேன் என்றார். தற்சமயம் மழை பெய்வதாலும் நான் தரும் இந்த கோவணத்தை பாதுகாத்து தாரும் என்றார். தான் கொண்டு வந்த உலர்ந்த கோவணத்தை நாயனாரிடம் கையளித்துச் சென்றார். நாயனார் அந்த பிராமணனின் கோவணத்தை மிக கவனமாக, பத்திரமாக, தனியே ஓர் இடத்தில் பாதுகாப்பாக வைத்து விட்டு வந்தார்.

கங்கையையே சடைமுடியால் தரித்த ஈசன் காவேரியில் நீராடச் சென்றாராம். எப்படி இருக்கிறது சிவனின் திருவிளையாடல். சிவன் காவேரியில் நீராடவே மழையும் வந்து தண்டில் கட்டியிருந்த காய்ந்த கோவணமும் நனைந்து விட்டது. ஈரஉடம்போடு ஐயன் நாயனாரின் இல்லம் விரைந்தார்.

நான் பாதுகாப்பாக வைக்க தந்த கோவணத்தை உடனடியாக தாருங்கள் என நனைந்து ஈரமாக நின்ற பிராமணர் கேட்டார். நாயனார் உள்ளே விரைந்து கோவணத்தை வைத்த இடத்தில் தேடினார். எங்கும் தேடியும் கோவணத்தைக் காணவில்லை. பதறிப் போனார் நாயனார். தயங்கிய வண்ணம் வெளியே வந்த நாயனார் ஐயனே தாங்கள் தந்த கோவணத்தை மிக கவனமாகத் தான் வைத்தேன். ஆனால் என்ன சோதனையோ! அதை எங்கு தேடியும் காணவில்லை மன்னித்தருள்க! வேறு நல்ல கோவணம் தருகிறேன் என நயமுடன் வேண்டினார். கோபம் கொண்ட ஈசன் இதுதானா நீ சிவனடியார்களுக்கு பணி செய்யும் அழகு? உமது வியாபாரம் மிக நன்றாகவிருக்கிறது என சீறினார். நாயனார் ஐயனே என்னை மன்னித்தருளி உமது கோவணத்திற்கு பதிலாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொன்னும், மணியும், பணமும் தருகிறேன் ஏற்றுக் கொள்க என நயமுடன் வேண்டினார்.

உடனே பிரம்மச்சாரிய வேடம் பூண்ட ஈசன் நான் ஒரு பிரம்மச்சாரியன் எனக்கெதற்கு பொன்னும் பொருளும் எனது இந்த கோவணத்தின் எடைக்கு சமமான எடையில் ஒரு கோவணம் தாரும் பெற்றுக் கொள்கிறேன் என்றார்.

நாயனார் அகமகிழ்ந்து வியப்பும் அடைந்தார். உடனடியாக அங்கு ஒரு துலாக் கோல் கொண்டுவரப்பட்டது. பிரம்மச்சாரியர் தனது கோவணத்தை ஒருதட்டில் இட்டார். மறுதட்டில் நாயனார் தன்னிடமிருந்த ஒரு புதிய கோவணத்தையிட்டார். அதுமேல் எழுந்தது. இன்னும் கோவணங்களையும் இட்டார் தட்டு சமமாகவில்லை! மேலும் விலையுயர்ந்த பொருட்கள் அனைத்தையும் இட்டார் ஆனால் துலாக்கோல் சமமாகவில்லை.

நாயனார் அந்த பிரம்மச்சாரியனை நோக்கினார். அவர் புன்முறுவல் பூத்தார். என்ன யோசிக்கிறீர் நீர் உமது மனைவி, பிள்ளைகள் எல்லோரும் தட்டில் ஏறி நின்று பாருங்கள் சில வேளை தட்டுக்கள் சமநிலைக்கு வரக்கூடும் என்றார். இது என்ன விளையாட்டு. ஆனால் அவர் உரைத்த வண்ணம் நாயனார் குடும்பமே தட்டில் ஏறி நின்றனர். என்ன ஆச்சரியம் தட்டுகள் சமநிலைக்கு வந்தன ஆனால் அந்த இளைஞனைக் காணவில்லை. சிவனார் இடபரூபராக அம்மையுடன் காட்சி தந்து, அமர் நீதியே நினது தொண்டின் பெருமையை உலகறியச் செய்யவே யாம் உம்முடன் விளையாடினோம். நீ குடும்பத்தோடு சிவபுரம் வந்து என்னை அடைவாயாக!
என சிவபெருமான் அருளினார்.

அந்த துலாவே தேவ விமானமாக மாறி நாயனார் குடும்பத்தோடு சிவலோகத்தை அடைந்தார். அமர்நீதி நாயனார் 63 நாயன்மார்களில் ஒருவரானார். அமர்தல் என்றால் விரும்புதல் என்று பொருள் இந்த நாயனாரை நீதி விரும்பியது! எனவே அமர்நீதி நாயனார் ஆனார்.

*தொடரும்*



# மார்கழி மாத சிறப்புகள்!

மார்கழிமாதம் தனூர் மாதம் என்றும் அழைக்கப்படுகிறது. மாதங்களில் நான் மார்கழியாகவே இருக்கிறேன் என பகவான் கிருஷ்ணர் கூறினார். அவ்வளவு சிறப்புக்கள் வாய்ந்தது இம்மார்கழி மாதம்.

இம்மாதம் முழுவதும் அதிகாலையில் எழுந்து குளிர்ந்த நீரில் நீராடி வாசலில் வண்ணக் கோலம் இட்டு இறைவழிபாடு செய்வது வழக்கமாக மேற்கொள்ளப்படுகிறது.

இம்மாதத்தில் மேற்கொள்ளப்படும் இறை வழிப்பாடு பற்றி மாணிக்கவாசகர், திருவெம்பா வையிலும், ஆண்டாள் நாச்சியார் திருப்பாவை யிலும் போற்றியுள்ளார்.

மார்கழி அதிகாலை வழிபாட்டில் கோவில் களில் தேவாரங்களுக்கு பதிலாக திருப்பாவை, திருவெம்பாவை, திருப்பள்ளியெழுச்சி, ஆழ்வார் பாசுரங்கள் பாடப்படுகின்றன. இம்மாதத்தில் மிருகசீரிட நட்சத்திரத்தில் என்றும் பதினாறு மார்க்கண்டேயர் பிறந்தார். எனவே மரணத்தை வெல்லும் மாதம் மார்கழி என்று மார்கண்டேயர் புராணம் குறிப்பிடுகிறது.

ம்ருத்யுஞ்ச ஹோமம் செய்ய இம்மாதம் சிறந்தது. மார்கழி மாதத்தில் திருவாதிரை, வைக்குண்ட ஏகாதசி, அனும ஜெயந்தி, பாவை நோன்பு, திருவெம்பாவை, விநாயகர் சஷ்டி விரதம். சபரிவாசன் நோன்பு என் பல விரதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இம்மாதத்தில் 63 நாயன்மார்களில் சடைய நாயனார், இயற்பகை நாயனார், மானக்கஞ்சாற நாயனார், சாக்கிய நாயனார் ஆகியோரின் குரு பூஜைகள் நடத்தப்படுகின்றன. மார்கழி- பிள்ளையார், திருவாதிரை- சிவபெருமான், வைகுண்ட ஏகாதசி- திருமால், பாவை நோன்பு- ஆதிசக்தி, என அனைத்து கடவுள்களையும் ஒரு சேர வழிப்படும் மிகவும் சிறப்பான மாதம் மார்கழி மாதம்.

நாமும் மார்கழியில் அனைத்து கடவுள் களையும் ஒரு சேர வணங்கி நற்பேறு பெறுவோமாக!

*திருமதி.பவானி பாலசுப்ரமணியம்- வெள்ளவத்தை*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜெய் ஸ்ரீ நரஸிம்மா

# சமய சம்பிரதாயங்கள்

இப் பிரபஞ்சத்தில் இறை சிந்தனையுடன் வாழ்வதற்கான பாக்கியத்தை எனக்கருளிய இறைவனுக்கு எனது நன்றிகள். குருவருளும், திருவருளும் அனைவருக்கும் கிட்டட்டும்.

சமயங்கள், சம்பிரதாயங்கள் அனைத்துமே மனிதனை நல்வழிப்படுத்துவதற்கும், சீராக வாழ வைப்பதற்குமாக உலகிற்களிக்கப்பட்டவையே. அத்தகைய சம்பிரதாயங்களை முறையாகக் கடைப்பிடிப்பவர்கள் இறைவனின் துணையுடன் இப்பிறவிக் கடலை எளிதாகக் கடந்துவிடு கின்றனர். எனெனில் வாழ்வினை அறம், தருமம், தானம், ஒழுக்கம் போன்றவற்றுடன் ஒருங்கி ணைத்து வாழ்பவர்களுக்கு இறைவனின் வழிகாட்டல் நிச்சயம் கிடைக்கின்றது. ஆனால், எம்மில் பலருக்கு ஏனோ இந்த சம்பிரதாய ங்களைக் கடைப்பிடிப்பதென்பது அனா வசியமானதொன்றாகிவிட்டமை வேதனைக்கு ரியது. இவையெல்லாம் ஏதோவொரு காரணத்துடன்தான் கடைப்பிடிக்கப்பட்டிருக்கு மென்ற சிந்தனை சிறிதுமின்றி இவையெல்லாம் தேவையற்றவை, இந்தக் காலத்தில் இவற்றை யெல்லாம் செய்ய முடியாது. எந்தக் காலத்தில் நீங்கள் இருக்கிறீர்கள்? என்ற வினாக்களை முன்வைப்பவர்கள் எம்மத்தியில் அதிகமாக இருக்கின்றனர். எம்மால் கடைப்பிடிக்க முடியவில்லை என்பதற்காக அது தேவையற்ற தொன்றாகிவிடுமா? அது தேவையற்றது என்று காரணம் கூறுவதால் மட்டும் காலங்காலமாகப் பேணப்பட்டு வரவில்லை என்றாகிவிடுமா? இந்த சமய சம்பிரதாயங்கள் இக்காலத்திற்கல்ல எக்காலத்திற்குமாகத்தான் ஆக்கப்பட்டுள்ளன, காலகாலமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வந்தவை என்பதை நினைவில் கொள்வோம்.

சமயம் சார்ந்த சம்பிரதாயங்கள் இன்று அருகி வருவதை நாம் கண்கூடாகப் பார்க்கின்றோம். எல்லாவற்றிற்கும் காலத்தைக் காரணமாகக் காட்டுவதை நிறுத்திவிட்டு நாம் கோலம் மாறி நிற்பது பற்றி ஒரு நிமிடமாவது சிந்தித்துப் பார்ப்போம். சமயத்துடன் நெருங்கிய தொடர்பி னைக் கொண்டுள்ளது ஆலயமாகும். இந்த ஆலயத்திற்கு நாம் எவ்வாறு செல்லுதல் வேண்டும்? இந்த வினாவைப் பார்த்ததும் எம்மனதில் எழுவது ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடையணிந்து செல்லுதல் வேண்டும் என்பதுதான். அதாவது புறத்தூய்மை பற்றிக் குறிப்பிடுவதுதான் வழமை. இவைகூட இன்றைய கால கட்டத்தில் பின்பற்றப்படு கின்றனவா என்றால், பின்பற்றப்படாத சந்தர்ப்பங்களும் நிறையவேயுண்டு.

எனெனில் ஆலயத்திற்குச் செல்வதாக இருந்தால், வீட்டிலிருந்து நேரடியாக ஆலயத்திற்குச் செல்லுதல் வேண்டுமென்று எவரும் குறிப்பிடுவதில்லை. அவ்வாறு செல்லாதபோது புறத்தூய்மை எந்தளவிற்கி ருக்கும்? அலுவலகம் முடித்து கோவிலுக்குச் செல்வோரின் எண்ணிக்கை இன்று அதிகரித்து வருகின்றது. எங்கெங்கோவெல்லாம் சென்று விட்டு ஆலயத்திற்குள் செல்லும் முன்னர் கால் கழுவினால் மட்டும் ஆலயத்திற்குள் செல்வதற்கான அருகதை வந்துவிடுகின்றதா? இவ்வாறு செய்ய மனம் இடங் கொடுக்காததால் விசேட தினங்களுக்கு மட்டுமே ஆலயத்திற்குச் செல்ல முடிவதாக மனம் வருந்துவோரும் சிலருள்ளனர். இந்த சம்பிரதாயங்களைப் பின்பற்றுவதில் ஒவ்வொருவரினது மனங்களும் என்னதான் தொடர்பு பட்டிருருப்பினும் இவற்றையெல்லாம் செய்தலாகாதென்று தடுப்பது யார்? அவ்வாறு செல்பவர்களுக்கு சொல்வதற்கு ஆயிரம் காரணங்கள் இருக்கக்கூடும்.

ஆனால் இவையெல்லாம் இறைவனைத் தரிசிப்பதற்குச் செல்வதாகக் கூறி நாம் செய்கின்ற பாவக் காரியங்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. என்னதான் இறைவன் எதிர்பார்ப்பது அகத் தூய்மை யொன்றே என்றாலும், புறத் தூய்மையுடனும் ஆலயத்திற்கு வருதல் வேண்டும் என்ற சம்பிரதாயம் எங்கே போய்க்கொண்டிருக் கின்றது? இது ஆலயத்திற்குள்ளிருப்பவர்களின் மனநிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்து கின்றதொரு செயலல்லவா? ஆலயத்திற்குச் செல்வதன் அர்த்தமே மாறிப்போய்விடுகின்ற அளவிற்கு எமது சமய சம்பிரதாயங்களில் அத்துமீறல்கள் அதிகரித்துக்கொண்டே வருகின்றன. தூய்மையின்றி ஆலயத்திற்குள் வருபவர்களை தெய்வ சக்திகள் தடுக்கும் நிலையொன்று வருமேயானால் அனைத்து ஆலயங்களிலும் நெரிசலின்றி வழிபடுவதற்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்பு நிச்சயம் கிட்டும். வீட்டிலிருந்து நேரடியாக ஆலயத்திற்குச் செல்ல முடியாத சந்தர்ப்பங்களில் ஆலயத்திற்குச் செல்வதைத் தவிர்ப்பதற்கு நாம் முயற்சிக்க முடியும். வீடு சுத்தமாக இல்லாது நாம் சுத்தமாக ஆலயத்திற்குச் செல்வதிலும் அர்த்தம் எதுவுமில்லை.

இதைவிட ஒரு படி மேலாகச் சென்று, கோவிலுக்குச் சென்றுவிட்டு வந்த பின்னர் அசைவ உணவு உண்ணலாமா? என்ற பெரியதொரு விவாதமே இன்று எம்மவர் மத்தியில் இருக்கின்றது. இதற்கு உதாரணத் திற்கு கண்ணப்பநாயனார் இறைவனுக்கு அசைவம் படைக்கவில்லையா? என்று கண்ணப்ப நாயனாரின் வரலாற்றைக் காட்டுவது வேறு. இந்த கலியுகக் கண்ணப்பநாயனார்கள் தமது கண்களை இறைவனுக்கு வழங்க முன்வருவார்களா? கண்ணப்பநாயனார் இறைவன் மீது வைத்த அன்பை விளக்கிய வரலாற்றை எம்மவர்கள் தமக்கு வசதியாக எப்படித் திருப்புகின்றார் என்பதைப் பார்க்கை யில் சம்பிரதாயங்கள் உயிர் வாழ்வது நிச்சயமாகக் கடினம்தான்.

கோவிலுக்குச் செல்கின்றபோது உணவருந்தாது செல்கின்ற வழக்கமொன்று இருந்தது. ஆனால் இன்று பலரும் இயலாமை என்பதைக் காரணம் காட்டி அதனையும் தவிர்த்து வருகின்றனர். அதற்கும் இறைவன் நேரில் வந்து பதில் தருதல் வேண்டும் என்பது போல் கடவுள் சாப்பிடாது கோவிலுக்கு வரவேண்டுமென்று சொல்கின்றாரா? என்ற கேள்வி வேறு. இவர்களைக் கடவுள் கோவிலுக்கு வரச்சொல்லிக் கேட்டுத்தான் இவர்கள் கோவிலுக்குப் போகின்றார்களா? இத்தகைய மனக்கட்டுப்பாடு அற்றவர்கள் கோவிலுக்கு வரவில்லையென்று கடவுள் கவலைப்படப்போகின்றாரா என்ன? எதுவித சம்பிரதாயங்களையும் கடைப் பிடிக்க முடியாத, மனக்கட்டுப்பாடற்றவர்களால் இன்று அரிய சம்பிரதாயங்கள் சீரழிந்து கொண்டிருக்கின்றன. கோவிலுக்குச் சென்ற அன்றைய தினத்தில் புனிதமான சைவ உணவைத்தான் உண்ண வேண்டுமென்ற மனக்கட்டுப்பாடற்ற நாம் கோவிலுக்கு ஏன் செல்ல வேண்டும்? இந்து சமய முறைப்படி நடைபெறுகின்ற திருமண வைபவத்தில் அசைவம் வழங்கும் அதி உச்ச அசிங்கம் அரங்கேற அரம்பித்துள்ளதாகவும், ஆலயத்திற்குச் சென்றுவிட்டு அசைவக் கடைக்குச் செல்வதாகவும், அர்ச்சனைப் பிரசாதப் பையுடன் வாங்கிய அசைவத்தை ஒன்றாகச் சேர்த்துக்கொண்டு செல்வதாகவும் அறியக் கிடைக்கின்றது. இந்த வேற்றுக் கிரகவாசிகள் ஏன் அர்ச்சனை செய்கின்றார்கள்? இந்து சமய திருமணச் சடங்கின் அர்த்தம் தெரிந்தவர்கள் இந்த போலியான, பகட்டான அறிவீனச் செயல்களில் ஈடுபடுவார்களா?

முன்னைய காலங்களில் ஒரு வீட்டில் துக்க நிகழ்வொன்று நடந்தால், குறிப்பிட்டதொரு காலத்திற்கு, அதாவது ஒரு வருடத்திற்கு அந்த வீட்டார் ஆலயங்களுக்குச் செல்வதில்லை என்றதொரு சம்பிரதாயம் இருந்தது. இன்று அப்படியொன்று இருந்ததா என்று கேட்கு மளவிற்கு, ஒரு மாதம் வரையேனும் கோவிலுக்கு செல்லாதிருக்க முடியாதளவிற்கு அதற்கு பரிகாரம் தேடி அலைவோருமுள்ளனர். எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தால்போல் மரண வீட்டுக்குச் சென்றுவிட்டு கோவிலுக்குச் செல்வோரும் மற்றும் திருமண வீட்டுக்குச் செல்வோரும் உள்ளதாக அறியக்கிடை க்கின்றது. அதிலும் சிலர் ஸ்நானம் செய்யாது செல்கின்றனரென்பது கலியுகத்தின் சாபக்கேடு. இப்படிச் செய்யலாமா என்று யாரையும் வினவ வேண்டிய அவசியமேயில்லை. இந்து சமய சம்பிரதாயத்தின்படி அவை தவிர்க்கப்பட வேண்டியவை என்பதில் எந்த சந்தேகமு மில்லை. இவையெல்லாம் எப்படி நடக்கின்றன? எப்படியும் வாழலாம் என்ற எண்ணமா? சமயத்தில் இறுக்கமான கட்டுப்பாடுகள் இன்மையா? இப்படிச் செய்தால் அது தவறு என்று வழிநடத்துவதற்குப் பொருத்தமான வர்கள் எம்மிடம் இன்மையா? எதனால் இவை இடம்பெறுகின்றன? இங்கு எம்மை நாமே திருத்திக் கொண்டாலன்றி பிறர் எம்மை வழிநடத்த முடியாது. சம்பிரதாயங்கள் எமது அடையாளங்கள் என்பதை நினைவில் கொள்வோம். சம்பிரதாயங்கள் கடைப்பிடி ப்பதற்கு கடினமானவையல்ல, எமது மனங்க ளுக்கு நாம் கடிவாளம் இட்டிருக்கும் வரை. ஆன்மீகத்தில் இந்த சம்பிரதாயங்களுக்குப் பாரிய பங்குண்டு என்பதை உணர்ந்து சம்பிரதாயங்களை முறையாகக் கடைப்பிடித்து இறைவனைச் சரணடைவோமாக.

அன்பு மலரட்டும். ஆன்மீகம் மலரட்டும்.

*திருமதி.எஸ்.சுரேஸ்குமார்,தெஹிவளை*

**ஆதாயம் தேடாதே ஆண்டவன் வழிபாட்டில்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன்-" என்பது கண்ணன் வாக்கு.

விதவிதமான கோலங்கள் வீட்டை அலங்கரிக்க, சில வீடுகளில் அக்கோலங்களின் மீது பரங்கிப்பூவை (பூசணிப்பூ) சாணத்தின் மீது செருகி வைத்திருப்பார்கள்.

வீதிகளில் ஒரு கூட்டம், இசைக்கருவிகளுடன் பஜனை செய்தபடி வரும். அநேகமாக, அந்த பஜனை முடிந்த பின் தான், சூரிய பகவானே உதயமாவார். மார்கழியில் இதெல்லாம் எதற்காக? விஞ்ஞான ரீதியாகவே, மார்கழி மாதத்தில் மட்டும், அதுவும் அதிகாலையில் ஏராளமான சக்திகள் (குறிப்பாக வைட்டமின்) வெளிப்பட்டு காற்றில் தவழ்ந்து கொண்டிருக்கும். சூரியன் வெளிப்பட்டு வெம்மையை வீசத் தொடங்கியதும் அந்த சக்திகள் அனைத்தும் அப்படியே கரைந்து போய்விடும்.

ஆராக்கியத்தை அளிக்கும் அந்த சக்திகளை நாம் அடைய வேண்டும் என்பதற்காகவே, மார்கழி அதிகாலையில் வீதி பஜனை, கோலமிடுதல் என்றெல்லாம் ஏற்படுத்தி வைத்தார்கள். அதெல்லாம் சரி... கோலத்தின் மேல் ஏன் பரங்கிப்பூவை வைக்க வேண்டும்? சூட்சுமமான தகவல் அது. முற்காலத்தில், இப்போது இருப்பது போல மணமகன், மணமகள் தேவை போன்ற மேட்ரிமோனியல் பகுதிகளோ, தரகர்களோ இருந்தது கிடையாது. அதனால்... எந்தெந்த வீடுகளில் மகனோ.. மகளோ திருமணத்திற்கு தயாராக இருக்கிறார்களோ, அந்த வீட்டுக் கோலங்களில் பரங்கிப்பூவை வைத்து விடுவார்கள். ஊர்க்காரர்கள் தெருவில் பஜனை செய்தபடி வரும் போது, அந்தப் பூவைப் பார்ப்பார்கள். பூ இருக்கும் வீட்டில் பூவை இருக்கிறாள் என்று புரிந்து கொள்வார்கள். தை மாதம் பிறந்ததும், அந்த வீட்டிற்குப் போய் பெண்ணையோ, மாப்பிள்ளையையோ பேசி முடித்து விடுவார்கள்.

ஆனால், இப்போதோ, இந்த சூட்சுமத்தை உணராமல், எல்லா வீடுகளிலும் கோலத்தின் மேல் அழகுக்காக பூ வைக்கிற வழக்கம் வந்து விட்டது. அதிலும், இன்னும் சிலர் "சார்... இது முன்னோர் செய்த முட்டாள்தனமான வழக்கங்களில் ஒன்று" என சொல்லி, அநேகமாக இந்த வழக்கத்தை கைகழுவியே விட்டார்கள். இப்போதுதான் கம்ப்யூட்டரிலேயே கல்யாணம்

# மார்கழிப்பூவே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்து விடுகிறதே! அதுவும் இந்த வழக்கங்கள் நின்று போனதற்கு காரணமாக இருக்கலாம்.

அந்த பழைய வழக்கத்தில் வேறொரு அற்புதமான நிகழ்ச்சியும் உண்டு. கோலங்களின் மீது பரங்கிப்பூக்களை வைத்தார்கள் இல்லையா! அதிலுள்ள தேனைக் குடிக்க கருத்த வண்டுகள் மலர்களைச் சுற்றி வட்டமிடும். குழந்தைகள் அந்தக் கோலத்தைச் சுற்றி அமர்ந்து, அந்த வண்டுகளை வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள். சூரியன் உச்சியை அடையும் முன் சின்னஞ்சிறு கிண்ணங்களில் பாலைக்கொண்டு வந்து அந்த மலர்களுக்குள் ஊற்றி நிரப்புவார்கள். அதை அப்படியே சூரிய பகவானுக்கு நைவேத்யம் செய்வார்கள். கிண்ணத்தில் மீதியிருக்கும் பாலைத் தாங்களே குடித்து விடுவார்கள். இதற்குள் சூரியன் உச்சியைத் தாண்டி சென்று விடும். உடனே, அந்தப் பூவை சாணத்திற்குள் அழுத்தி, 'பூ வரட்டி' தட்டி வெயிலில் காய வைத்து விடுவார்கள்.

தினமும், இப்படியே 'பூ வரட்டி' தட்டி, குட்டிப் பொங்கல் (குழந்தைகளுக்காக தை மாதத்தின் ஏதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமையில் வைக்கும் சிறு வீட்டுப்பொங்கல்) வைக்க சேகரித்து வைத்துக் கொள்வார்கள். சில குழந்தைகள் பொங்கல் அன்று தாங்களாகவே, சிறிய அளவில் பொங்கல் வைத்து விடுவார்கள். இதெல்லாம் எவ்வளவு ஆனந்தமாயிருக்கும் தெரியுமா!

தொலைந்து போன, அந்த ஆனந்தம் நமக்கு மறுபடியும் கிடைக்க, அந்த மாதவனையும், மாதேவனையும் வேண்டுவோம்.

# நோய் தீர்க்கும் வேம்பு

விருட்சங்களில் வேம்புக்கு தனி மகத்துவம் உண்டு. அம்மை நோய் வந்தால், வேப்பிலையைப் பரப்பி அவர்களை படுக்கவைப்பதும், அம்மைக் கொப்புளங்கள் மீது வேப்பிலையை அரைத்துப் பூசுவதும், அம்மை பரவாமல் இருக்க, வீட்டு வாசலில் வேப்பிலைக் கொத்துகளை செருகி வைப்பதும் வழக்கம். நச்சுக்கிருமிகளை அழிக்கும் வல்லமையும் வேம்புக்கு உண்டு என உலக அளவிலான ஆய்வுகளில் தெரிய வந்துள்ளது.

வேப்பம்பூ பசியைத் தூண்டும், நா வறட்சி, வாந்தி, ஏப்பம் மற்றும் வாய்வுப் பிரச்சினையைத் தீர்க்கும். அந்தக் காலத்தில் பல வீடுகளில் அடிக்கடி வேப்பம்பூ ரசம் வைத்துச் சாப்பிடுவார்கள். வேப்பெண்ணெய் சிறந்த பூச்சிக் கொல்லி மருந்து. தலையில் உள்ள பொடுகு, சிரங்கு, சொறி, கரப்பான் ஆகியவற்றை தீரக்கவல்லது. வேப்பங்குச்சியால் பல் துலக்கினால், பல் நோய்கள் வர வாய்ப்பே இல்லையாம்! வந்துவிட்ட பல் நோய்களையும் வேப்பங்குச்சி அடித்து விரட்டும் என்பர். தினமும், வேப்பந்தளிர் இரண்டை மென்று விழுங்க, சர்க்கரை நோயைத் தவிர்க்கலாம்.

கசப்பு சுவையுடைய எந்த உணவும் உடலுக்கு நன்மையைத் தரும் என்றனர் முன்னோர். வேம்பின் கசப்பும் லேசான புளிப்பும் கண்டு கொசுக்கள் தலைதெறிக்க வேறு திசை நோக்கி பறந்துவிடுமாம்! கொசுவில் இருந்து விடுதலை பெற, வீட்டுக்கு ஒரு வேம்பை வளர்ப்போம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கிருஷ்ண லீலை

இதிகாசங்களில் அதிக சுவையும் பல்வேறு திருப்பங்களும், பல நிலைகளையும் உடையது மகாபாரதம். அந்த மகாகாவியத்தின் நோக்கம் நிறைவேற முயன்ற ஒரு பாத்திரம் ஸ்ரீகிருஷ்ணன். அவனை தமிழில் கண்ணன் என்பர்.

கிருஷ்ணன் கம்சனின் மருமகன். ஆவணி மாதம் கிருஷ்ணபட்சம் அஷ்டமி திதி ரோகிணி நட்சத்திரத்தில் வசுதேவருக்கும் தேவகிக்கும் மகனாக அவதரித்தார். அவதரித்த இடம் சிறைச்சாலை.

சிறைச்சாலையிலேயே தனது பஞ்சாயுதத்துடன் தரிசனம் காட்டி, அவர்களின் முற்பிறப்பினை உணரத்தி, தன் அவதார நோக்கத்தினையும் கோடிட்டுக் காட்டி ஆயர் பாடியில் உள்ள நந்தகோபர் மனையில் தன்னை விட்டுவரக் கூறினார். நந்தகோபர் மனையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பல்வேறு திருவிளையாடல்கள் புரிந்து வளர்ந்தார் கிருஷ்ணன். கார்க்கிய முனிவர் இவர் கருநிறம் கண்டு கிருஷ்ணன் எனப் பெயரிட்டார்.

ஆயர்பாடியில் மற்ற கோபியரின் இல்லங்களில் வெண்ணெய் திருடி உண்டான். கம்சன் உத்தரவின்படி விஷ முலைப்பால் ஊட்ட வந்த பூதகியைக் கொன்றான். மற்றும் சகடாசுரன் திருணாவர்த்தன் ஆகியவர்களைக் கொன்றான். மற்ற குழந்தைகளைப் போல மண் அள்ளித் தின்றான். தாய் பயந்து, 'வாயைக் காட்டு' எனக்கூற, திறந்த வாய்க்குள் அண்டங்கள் அனைத்தையும் காட்டினான்.

வீட்டை விட்டு வெளியே தவழ்ந்து செல்லக்கூடாது என உரலில் தாம்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கயிற்றில் கட்டினாள் தாய். அதனோடு இழுத்துச் சென்று, இரு மரங்களுக்கு இடையே தவழ்ந்து சென்று, நளகூபர, மணிக்கிரீவர்களுக்கு முக்தி தந்தான். மேலும் வாயிலில் வந்த நாவற் பழக்காரியிடம் நாவல் பழம் தரக் கேட்டான். உண்ண அரிசி போட்டால் தருவதாக கூறினாள். நாவற் பழத்தைத் திருடித் தின்று, அவள் கூப்பாடு போட, அவனோ அரிசியைக் கையில் பிடித்துப் போட, அனைத்தும் மாணிக்கமாகக் கொட்டியது.

**அசுரர்களை அழித்தவன்:**

கன்றுருவில் வந்த வற்காசுரன் என்னும் அரக்கனை விளாமரத்தில் மோதிக் கொன்று விளாங்கனி எடுத்து உண்டான்.

**புள்வாய் கிழித்தவன்:**

கொக்கின் உருவில் வந்த பகாசுரனின் வாயைப் பிளந்து கொன்றான். மலைப்பாம்பு உருவில் வந்த அகாசுரன் வாயில் புகுந்து வயிற்றைப் பிளந்து வெளி வந்து கொன்றான்.

**காளிங்க நர்த்தனன்:**

யமுனை நதியில் காளிங்கன் என்னும் கொடிய விஷம் பொருந்திய நாகம் வசித்த காளிங்கன் மடுவின் நீரை அருந்தி உயிர் துறந்த யாதவர்களை உயிர்ப்பித்தான். பின்னர் தானே அந்த மடுவில் குதித்து காளிங்கனுடன் யுத்தம் செய்து அடக்கினான்.

**கோவர்த்தனகிரியை குடையாக்கியவன்:**

காளியன் என்னும் காட்டுத்தீ அனைவரையும் துன்பப்படுத்தியது. பயந்த ஆயர்பாடி வாழ் மக்களைக் காப்பதற்காக, அனைவரையும் கண்மூடச் சொல்லி தீயை விழுங்கிக் காப்பாற்றினான். அந்நேரத்தில் அனைவரையும் காக்க வேண்டிய இந்திரன் காப்பாற்றாததால் அனைவரையும் இந்திர வழிபாடு செய்வதை நிறுத்தச் செய்தான்.

கோபப்பட்ட இந்திரன் கல்மழை பெய்யச் செய்தான். கிருஷ்ணனோ கோவர்த்தன கிரியை குடையாகத் தூக்கிப் பிடித்து அனைவரையும் காப்பாற்றினான்.

இந்திரன் நந்தகோபரை மறைத்து விட அவ்வுலகம் சென்று அவரை மீட்டு வந்தான். அம்பிகை பூஜை செய்யச் சென்ற நந்தகோபரை விழுங்கிய பாம்பை காலால் உந்தித் தள்ளி நந்தகோபரை மீட்டவன் கண்ணன்.

**கம்சனை அழித்தவன்:**

மேலும் சங்கசூடன், ரிஷப உருக்கொண்ட அரிஷ்டன், கழுதை வடிவில் வந்த தேனுகன், குதிரை உருக்கொண்ட கேசி மற்றும் கம்சனின் வீட்டு சலவைத் தொழிலாளி என கம்சனுக்கு உதவி செய்தவர்களைக் கொன்றான். அவனது ஆயுதசாலைக்குச் சென்று அவனது வில், குவலயாபீடம் என்னும் பட்டத்து யானை மற்றும் அவனது பரிவாரங்களையும் அழித்தான். தோல்வியில் பயந்த கம்சன், கண்ணனது பெற்றோரை சிறை செய்யக் கட்டளையிட்டான். அவனைத் திடீரென பாய்ந்து தாக்கி அழித்தான். இன்னும் பாஞ்சகன், ஜராசந்தன், உருக்மி ஆகியோரையும் வென்றான்.

**பலரை மணந்தவன்:**

கண்ணன் ருக்மிணி, சத்யபாமா, சாம்பவதி, காளிந்தி, மித்திரவித்தை, சத்தியவதி, பத்திரை, லட்சுமனை, நாகாசுரன் பட்டினத்தில் இருந்து வந்த 17000 பெண்கள், சததி என்னும் நப்பின்னை, முராசுரன் நரகாசுரனின் 10 பெண்கள், பகதத்தன் என்னும் மன்னனுக்கு அபயம் தந்து அங்கு சிறையில் இருந்த 11600 ராச கன்னிகள் ஆகியோரை திருமணம் செய்து கொண்டான் எனப்படுகிறது. பின்னர் அவனது சுற்றத்தினர்கள் அநிருத்தன், பிரத்தியும்னன், சாம்பன் ஆகியோருக்கும் மணம் செய்து வைத்தவன் ஸ்ரீகிருஷ்ணனே எனப்படுகிறது.

**பாண்டவதூதன் - பாரத அச்சு:**

சிசுபாலனை வதைத்தது, திரௌபதிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்திரம் வளரச்செய்து மானங்காத்து, திரௌபதி ஆடிய சூதாட்டத்தில் அவளை வெல்லச் செய்து, அர்ச்சுனனுக்கு தேரோட்டி கீதை உபதேசித்தது, அரவானுக்காக பெண்ணுருவாகியது, பாண்டவர்களுக்காக துரியோதனனிடம் தூது சென்றது, விதுரன் இல்லத்தில் விருந்து உண்டது, குந்தியை கர்ணனிடம் அனுப்பி, 2ம் முறை நாகாஸ்திரத்தினை அர்ச்சுனன் மீது ஏவக்கூடாது என சத்தியம் பெறச் செய்தது, கர்ணனின் கவச குண்டலங்களை இந்திரன் மூலம் தானமாகப் பெற்றது, தனது சக்கரத்தால் சூரியனை மறைப்பித்தது, பல உதவிகளை பாண்டவர்களுக்குச் செய்தது ஆகியவை மூலம் மகாபாரத பிரதான அங்கமாகச் செயல்பட்டவன் பகவான் கிருஷ்ணனே!

**சுற்றங்கள்:**

இவரது தேர்ப் பாகன், தாருகன் என்பவனாவான். இவரது குதிரைகள் சைனியம், சுக்கிரீவம், மேகபுஷ்பம், வலாகம். இவரது குமாரர்கள் என பிரத்தியும்னன், அநிருத்தன், தீப்திமான், பானுதேவன், சாம்பன், மித்திரன், விருகத்பாநு, பாநுவிந்தன், உருகன், அருணன், புஷ்கரன், தேவபாகு, சுருததேவன், சுநந்தனன், சித்துபாகி, வரூதகன், மது, விநிக்குரோதனன், உபசுலோகர் என்கின்றனர்.

**விஸ்வேஸ்வர வரப்பிரசாதி:**

உபமன்யு முனிவரால் சிவதீட்சை வழங்கப்பட்டவர் கண்ணன். சிவபூஜை செய்கையில் சிவ பெருமான் எழுந்தருளி பல வரங்கள் அளித்து விஸ்வரூபனாகிய கண்ணனுக்கு 'விஸ்வேஸ்வரன்' எனப் பல வரங்கள் அளித்தார் என சிவ மகாபுராணம் கூறுகிறது.

**தேவியர் உரிய இடம் சேர்தல்:**

கிருஷ்ணனின் தேவியருள் சிலர் அவருடன் பலகாலமிருக்க சிலர், உரிய உலகம் நாளடைவில் சென்று சேர்ந்தனர். ராதையின் கோபத்தால், 'சோபை' என்னும் கோபி சந்திரமண்டலம் சென்று ஒளியாய் மறைந்தாள். 'பிரமை' என்பவள் தேஜோரூபமாய் சூரியனிடம் மறைய, 'சாந்தி' என்பவள் கிருஷ்ணனிடமே மறைந்தாள். 'க்ஷமை' என்பவள் பூமியில் மறைந்து பொறுமை அடைந்தாள் என தேவி பாகவதம் கூறுகிறது.

**அந்திமம்:**

பலவகைப்பட்ட சாபங்களால் யாதவர்கள் மெல்ல மெல்ல மறையத் துவங்கினர். கண்ணன் தனித்து இருந்தார் இமயமலைக்குச் செல்லும் வழியில் ஒரு மலையடிவாரத்தில் ஆலமரத்தடியில் தபமும் யோகமுமாய் இருந்து யோகநித்திரையில் ஆழ்ந்தார். தான் இருக்குமிடம் அர்ச்சுனனுக்கு மட்டும் தெரிவித்து, அவன் வரவுக்காகக் காத்திருந்தார். முன் ஜென்மத்தில் சரன் என்னும் வேடன் துர்வாசரிடம் பெற்ற சாபத்தின் காரணமாக மரத்தில் இருந்த பறவை ஒன்றிற்கு குறிவைத்து அம்பெய்தான். அது கண்ணனின் காலில் தைத்தது. அவசரப்பட்டு செய்த அபச்சாரத்திற்கு மன்னிப்புக் கோரி, அவரது காலில் இருக்கும் அம்பினை எடுக்க முயன்றான் வேடன் சரன். அனால் கண்ணனோ அவனை தடுத்து, அவ்வழி வந்த தேவர்களுடன் மேலேறிச் சென்று பரமபதம் அடைந்தார்.

## அனுக்ரகம் செய்ய வேண்டிய ஆண்டவன் அழித்தல் தொழிலில் ஈடுபட்டதன் காரணம் என்ன?


**கண்ணன் காட்டும் வழி என்ன?**

சுகமான வாழ்வு, சுதந்தரமான செயல்பாடுகள், களிப்புக்கு கோபியர் என வாழ்ந்த கண்ணன், கம்சன் முதல் பல அசுரர்களை அழித்தான். குருக்ஷேத்திர யுத்தத்தில் தர்மத்தின் பக்கம் நின்று பஞ்சபாண்டவர்களை வழி நடத்தியுள்ளார்.

இருபக்கமும் சேதம் அதிகம். ஆள்படை, பணம், பலம் என ஒவ்வொரு வகையிலும் இழப்புகள் அதிகம். ஏன் இந்தச் செயல்பாடுகள்? அனுக்ரகம் செய்ய வேண்டிய ஆண்டவன் அழித்தல் தொழிலில் ஈடுபட்டதன் காரணம் என்ன? ஆராய்ந்தவர்களுக்கு கண்ணன் சொன்னது, 'பூபாரம் குறைக்கச் செய்தேன்' என்பது. இது ஏற்கத்தக்க பதில் என கருதப்படுவதுடன், அவதார நோக்கம் வெளிப்பட வேண்டும் என்பதே ஆகும்.

'துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம்' என்பதே அவதாரங்களின் நோக்கம். **எங்கெங்கு தர்மம் தலை குனிந்து அதர்மம் மேலோங்குகிறதோ அங்கெல்லாம் அவதாரம் எடுப்பேன்** எனச் சொன்ன கண்ணன், வாக்கை உறுதி செய்வதற்காக எடுத்த அவதாரம் கிருஷ்ணாவதாரம் ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாவை நோன்பின் விளக்கம்

**திருவெம்பாவை பூஜை ஆரம்பம் - 14 டிசம்பர் 2018**

ஆண்டாள் அருளிய திருப்பாவையும் மணிவாசகர் அருளிய திருவெம்பாவையும், பல நூற்றாண்டுகளாக, மார்கழி மாதத்தில், இந்துக்களால் பாடப்பட்டு வருகின்றன.


இந்த இரண்டு பதிகங்களும் சைவ வைணவ பக்திப் பாடல்களின் தொகுப்பாகி பன்னிரு திருமுறை மற்றும் நாலாயிரம் திவ்யபிரபந் தத்தில் சேர்க்கப்பட்ட நிலையே, பதிகங்களின் பெருமையை பறை சாற்றுகின்றது.

கன்னிப் பெண்கள் ஒருவரை மற்றொருவர் துயிலெழுப்பி அனைவரும் ஒருங்கே சேர்ந்து நீர்நிலைகளுக்குச் சென்று கூட்டமாக நீராடியவாறு தாங்கள் வழிபட்டு வந்த பாவைத் தெய்வத்திடம் தங்களது வாழ்வு வளமாக இருக்க வேண்டும் என்றும் தங்களுக்கு கண் நிறைந்த கணவன் வேண்டும் என்றும் வேண்டியபடி பாடுவதாக அமைந்த பாடல்கள் இவை.

திருவெம்பாவை மொத்தம் இருபது பாடல்கள் கொண்டவை. முதல் எட்டு பாடல்கள் மகளிர்கள் ஒருவரை ஒருவர் எழும்பிக்கொண்டு எல்லோருமாக இறைவனின் புகழினை பாடியவாறு நீராடச் செல்லுதலையும், ஒன்பதா வது, பாடலில் இறைவனைப் புகழ்ந்து பாடும் தன்மையை கேட்டு அறிவதையும் உணர்த்துவ தாகவும் அமைந்துள்ள பாடல்கள்.

திருவெம்பாவையின் இருபது பாடல்களும் திருப்பள்ளியெழுச்சி பதிகத்தின் பத்து பாடல்களையும், மார்கழி மாதத்தில் பாடுவது சைவர்களின் மரபு. இந்த இரண்டு பதிகங்களும் மணிவாசகர் அருளிய திருவாசகத்தில் இடம் பெறுகின்றன. சிறு பெண்களுக்கு இடையில் நடைபெறும் உரையாடலாக பல பாடல்கள் அமைந்துள்ளதையும், ஒத்த வயதினர் பேசும் போது அவர்களுக்குள்ளே எழும் கேலியும் பரிகாசமும் ஆங்காங்கே தொனிப்பதையும் நாம் உணரலாம். ஒவ்வொரு பாடலின் இறுதியில் வரும் ஏலோல் எம்பாவாய் என்ற தொடரை, பொருள் ஏதும் இல்லாத அசைச் சொல்லாக சிலர் கருதுகின்றனர்.

சிலர் பாவை போன்ற பெண்ணே, நீ சிந்திப்பாயாக என்று பொருள் கொள்கின்றனர். இந்த பாடல்களில் பல தத்துவக் கருத்துகள் புதைந்து கிடைக்கின்றன. அவற்றை விரித்தால் உரையின் நீளம் பெருகும் என்பதை கருத்தில் கொண்டு எளிமையான உரை கொடுக்கப்படுகின்றது. திருவெம்பாவை பதிகம் திருவண்ணாமலையில் அருளியது. திருப்பள்ளியெழுச்சி பதிகம் திருப்பெருந்துறையில் அருளியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாஸ்திரங்களும் சம்பிரதாயங்களும்


## (ஆன்மிக ஐயம்)



## கோயில் கொடிமரத்தின் பீடத்தில் சில இடங்களில் ஆமை வடிவமைக்கப்பட்டுள்ளது ஏன்?

ஆமை தன் உடலை ஓட்டுக்குள் அடக்கி வைத்துக் கொள்வது போல, இந்தக் கோயிலுக்கு வழிபாட்டுக்காக வந்துள்ள நீயும் உன் ஐம்புலன்களையும் அடக்கி இறைவனை வணங்கிச்செல்.

இந்த பயிற்சியை வெளியுலகிலும் செய். நன்மை அடைவாய் என்பதன் தாத்பர்யமே அது.





## ஹோமம் முடிந்த பின் எத்தனை நாள் கழித்து ஹோம குண்டத்தைக் கலைக்க வேண்டும்?

ஹோமத்தில் இட்ட பொருட்கள், பழங்கள் யாவும் பஸ்மமாக வேண்டும். அதன் நெருப்பு தானாக அணைந்து சாம்பலாக வேண்டும். மூன்றாம் நாள் அல்லது ஐந்தாம் நாள் குண்டத்தை கலைத்து விடலாம். சாம்பலை எடுத்து விபூதியுடன் கலந்து இட்டுக் கொள்ள வேண்டும். மீதமுள்ளதை செடி கொடிகளுக்குப் போட்டால் நல்லது. ஆறு, குளங்களிலும் போடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சலோக விக்ரகம் என்றால் என்ன?

தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம், பித்தளை ஆகியன பஞ்சலோகங்கள் ஆகும். இவை ஐந்தையும் சேர்த்து செய்யப்படும் விக்ரஹங்களை பஞ்சலோக விக்ரஹம் என்பர்.





# மூன்றாம் பிறையின் மகிமை என்ன?

மூன்றாம் பிறையை தாராளமாக பார்க்கலாம். இதையே "சந்திரதரிசனம்" என்பர். இதனால், செல்வவளம் பெருகும் என்பர். சிவன் மூன்றாம் பிறையைத் தன் தலையில் சூடிக் கொண்டிருப்பதை சுந்தரர், "பித்தா பிறைசூடி" என்றே சுந்தரர் தேவாரத்தில் போற்றுகிறார். நான்காம் பிறையைத்தான் (சதுர்த்தி திதியன்று) பார்க்கக்கூடாது. ஒருவேளை அன்று கண்ணில் சந்திரன் பட்டு விட்டாலும், விநாயகரை வணங்கி விட்டால் தோஷம் நீங்கிவிடும்.


# பெற்றோர் செய்யும் பாவபுண்ணியம் பிள்ளைகளையும் சேருமா?

பெற்றோர் சேர்க்கும் சொத்து பிள்ளைகளுக்குத் தானே! அது போல, பாவ புண்ணியமும் பிள்ளைகளையே சேரும். ஒரு சில இடங்களில் இந்நிலை மாறுபடுகிறது. எப்படி என்றால் முற்பிறவியில் பிள்ளைகள் செய்த புண்ணியம் பலம் மிகுதியாயிருந்தால், பெற்றோர்களின் பாவம் அவர்களைத் தாக்குவதில்லை. பாவ பலம் மிகுதியாயிருந்தால் பெற்றோர்களின் புண்ணியம் கூட காப்பாற்றுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஷ்ணபட்சம், சுக்லபட்சம் என்றால் என்ன?



"கிருஷ்ண" என்றால் கறுப்பு. இது இருளைக் குறிக்கும். "சுக்ல" என்றால் வெண்மை. ஒளியைக் குறிக்கும். அமாவாசையின் மறுநாள் துவங்கி பிறைநிலா கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து ஒளிவீசும். பௌர்ணமியன்று முழுநிலாவாக பிரகாசிக்கும். இரவில் வெண்மையாக ஒளிவீசும் வளர்பிறை நாட்களுக்கு "சுக்லபட்சம்" என்ற பெயர். "பட்சம்" என்றால் பதினைந்து நாட்கள். பௌர்ணமியின் மறுநாள் தேய்பிறை தொடங்கி இரவில் இருள் சூழ்ந்து வருவதால் அமாவாசை வரையிலான பதினைந்து நாட்களுக்கு "கிருஷ்ணபட்சம்" என்று பெயர்.




# குருமார்களுக்கு அரிசி ,காய் தானமாக வழங்குவது ஏன்?


குருமார்கள் மூன்றுவித தீட்சை பெற்று ஆசார்யாபிஷேகம் செய்திருப்பார்கள். அவர்கள் எல்லா இடங்களிலும் சாப்பிட முடியாது. எனவே அரிசி, காய்கறி தானமாகக் கொடுத்தால் அவர்கள் உரிய முறையில் சமைத்து உண்பார்கள்.

# பெண்கள் கோயிலில் முடிக்காணிக்கை செலுத்தலாமா?



பெண்குழந்தைக்கு ஏழு வயதுக்குள் முடியிறக்கும் வேண்டுதல்களை நிறைவேற்றி விட வேண்டும். முடியாத பட்சத்தில் ஒன்பது வரை செய்யலாம். அதற்குப்பிறகு பெண்கள் முடியிறக்குவது கூடாது. அதுவும் திருமணமான பெண்கள், சுமங்கலிகள் என்று பெயர் பெற்று விடுவதால் கண்டிப்பாக முடியிறக்கக் கூடாது என சாஸ்திரங்கள் கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேரையர் சித்தர் தவமிருந்த தோரண மலை

ராமர், அகத்தியர், தேரையர் பாதம் பதிந்த பூமி: மூலியைச்செடிகள் வளர்ந்துள்ள வனப்பகுதி: அறுபத்து நான்கு சுனைகள் கொண்ட அழகிய மலை... இப்படிப் பல சிறப்புகளோடு அங்கு ஆறுமுகனும் அருள்பாலித்தால் அதுவொரு அற்புதத்தலமாகத்தானே இருக்க முடியும்! அதுதான் தோரணமலை!

தென்றல் தழுவும் தென்பொதிகை மலைத் தொடரில், யானை அமர்ந்துள்ள தோற்றத்தில் அமைந்துள்ளது தோரண மலை. வாரணம் என்றால் யானையைக் குறிக்கும். வாரணமலை என்பதுதான் மருவி தோரணமலையாகி இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

மலையேறி மயில்வாகனனை தரிசிப்பதற்கு முன், இங்கு தவமியற்றி முக்தியடைந்த, அகத்தியரின் பிரதான சீடர்களுள் ஒருவரான தேரையர் சித்தர் குறித்த தகவல்களைப் பார்த்துவிடுவோம்.

### அகத்தியர் ஆசிரமம்

உலகைச் சமப்படுத்த சிவபெருமான் கட்டளைப்படி பாரதத்தின் தென்பகுதியான பொதிகைமலைக்கு அகத்தியர் வந்தபோது, உலகம் சமநிலையடைந்தது. அவரது காலடிபட்ட தோரணமலையும் புனித பூமியானது. இப்பகுதியில் ஆசிரமம் அமைத்து பலகாலம் மூலிகை ஆராய்ச்சியில் ஈடுபட்டு வந்தார் அகத்தியர். அவருக்கு ராமதேவன் என்ற சீடன் உதவி புரிந்து வந்தான். பேச்சாற்றலை இழந்தவன் அவன்.

ஒருசமயம், பாண்டிய மன்னரின் கூன் முதுகை சரி செய்வதற்கான மூலிகை மருந்தை அகத்தியர் தயாரித்துக்கொண்டிருந்தார். அப்போது அரண்மனையிலிருந்து அவசரமாக அழைப்பு வர, 'அடுப்பைப் பார்த்துக்கொள்' என்று சீடனிடம் சைகை காட்டிவிட்டு அகத்தியர் புறப்பட்டுச் சென்றார்.

சில நிமிடங்களுக்குப் பிறகு, கொதிக்கும் மூலிகைச்சாறு பட்டு ஆசிரமத்தின் மேல் கட்டப்பட்டிருந்த வளைந்த மூங்கில் நிமிர்ந்தது. உடனே அதுதான் சரியான பதம் என்று உணர்ந்த ராமதேவன், அடுப்பிலிருந்து மூலிகைச்சாற்றை இறக்கி வைத்தான். ஆசிரமம் திரும்பிய அகத்தியர், சரியான பதத்தில் மூலிகைச்சாறு இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார். 'என்ன நடந்தது?' என்று கேட்டார். ராமதேவனோ, வளைந்த மூங்கில் நிமிர்ந்திருப்பதைச் சுட்டிக்காட்டினான். சீடனது சமயோசித புத்தியை அறிந்து வியந்தார், அகத்தியர். அந்த மூலிகைச் சாற்றால் பாண்டிய மன்னனின் கூன் முதுகு சரியானது.

### தேரையர் சித்தர்

கடும் தலைவலியால் அவதிப்பட்ட காசிவர்மன், தன் நோய் நீங்க அகத்தியரை நாடினான். அவரை பரிசோதித்த அகத்தியர், மன்னர் உறங்கும்போது தேரைக்குஞ்சு ஒன்று அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூக்கினுள் நுழைந்து மூளைக்கு அருகில் தங்கிவிட்டதை அறிந்தார்.

சிகிச்சை தொடங்கப்பட்டது. மன்னர் மயக்க நிலையில் ஆழ்த்தப்பட்டார். சில நிமிடங்களில் மன்னரின் கபாலம் திறக்கப்பட்டது. உள்ளே இருக்கும் தேரைக்குஞ்சை எப்படி எடுப்பது என்று அகத்தியர் யோசிக்கும்போது, ராமதேவன் ஓர் உபாயம் செய்தான். வாயகன்ற பாத்திரத்தில் நீரை நிரப்பி, தேரையின் கண்ணில் படுமாறு வைத்தான். தண்ணீரைக் கண்ட சந்தோஷத்தில், தேரை பாத்திரத்திற்குள் துள்ளிக்குதித்தது. பிறகு அபூர்வ மூலிகையைக் கொண்டு மன்னரின் கபாலத்தை மூடினார் அகத்தியர். காசிவர்மனின் கடும் தலைவலி தீர்ந்தது. இந்தச் சம்பவத்திற்குப் பின்னர் ராமதேவன், தேரையர் சித்தர் என அழைக்கப்பட்டார். அவரது ஊமைத்தன்மையைப் போக்கி, தனக்கு தெரிந்த வித்தைகளையெல்லாம் சொல்லிக் கொடுத்து, தேரையர் சித்தரை தன் பிரதான சீடராக ஆக்கிக் கொண்டார் அகத்தியர். இப்பகுதியில் நீண்டகாலம் மருத்துவச் சேவை செய்த தேரையர், பொதிக மலையைச் சேர்ந்த இந்தத் தோரணமலையில் ஜீவசமாதியடைந்ததாக நம்பப்படுகிறது.

**அழகின் அரசன்.**


ராமநதி, ஜம்புநதி என்ற இரு நதிகளுக்கு இடையில் மலைமேல் அமைந்துள்ளது தோரண மலை முருகன் ஆலயம். அடிவாரத்தில் வல்லப விநாயகர், கன்னிமார் அம்மன், வியாழபகவான், நவகிரகங்களுக்கு தனி சன்னதி அமைந்துள்ளது. அடிவாரத்தில் இரு சுனைகளும், சுதையாலான சிவபெருமான், கிருஷ்ணர், சரஸ்வதி, மகாலட்சுமி ஆகியோரின் தரிசனமும் கிட்டுகிறது. அருகே அரசமரத்தடியில் சப்த கன்னியர் வீற்றிருக்க, மரத்தில் வளையல்களும், தொட்டிகளும் பிரார்த்தனைக்காகக் கட்டப்பட்டுள்ளன. மலைக்குச் செல்லும் படிக்கட்டுகள் தொடங்கும் இடத்தில் தனிச்சன்னதியில் சுதையாலான பாலமுருகன் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். மலை ஏறி மூலவரை தரிசிக்க முடியாதவர்கள் கீழே இவரை தரிசித்து அருள்பெறலாம். உச்சியை அடைய 926 படிக்கட்டுகள் ஏறவேண்டும். வழியில் இரண்டு இடங்களில் மொட்டைப் பாறை உள்ளது. அங்கு படிக்கட்டுகளைப் பிடித்து ஏற வசதியாக கம்பிகளும் ஊன்றப்பட்டுள்ளன. அதன் வழியாகச் செல்வது, இந்தப் பிறவியில் ஏற்பட்ட கஷ்டங்களை நாம் கடந்துவிட்டதை உணர்த்துகிறது. வழியில் சுயம்பாக அமைந்த சிவபெருமானை தரிசிக்கலாம். மேற்குத் தொடர்ச்சி மலையின் இயற்கை அழகையும், அதில் தவழ்ந்து வரும் மேகக்கூட்டங்களையும், புறப்பட்டு வரும் ஆறுகளையும் ரசித்துக் கொண்டே உச்சியை அடையலாம்.

உச்சியில் உள்ள குகையில் மூலவரான தோரணமலை முருகன் அருள்பாலிக்கிறார். கையில் வேல் ஏந்தி, மயில் வாகனத்தோடு நின்ற கோலத்தில் அழகின் அரசனாகத் திகழ்கிறார் ஆறுமுகக் கடவுள். அவருக்கு இடதுபுறம் சற்று உயரமான இடத்தில் சுனை ஒன்று உள்ளது. மருத்துவ குணம் வாய்ந்த இந்தச் சுனையில் நீராடி, முருகப்பெருமானை தரிசித்தால் உடல் பிணிகள் சீராகும்: கவலைகள் பஞ்சாய்ப் பறந்து, உள்ளத்தில் உற்சாகம் பெருகும்: நம்மனதில் ஆனந்தம் குடிகொள்ளும். இதை அனுபவத்தால் மட்டுமே உணரமுடியும். இதுபோன்று இப்பகுதியில் 64 சுனைகள் இருக்கின்றனவாம் உச்சியில் பத்ரகாளியம்மனுக்கு தனிச் சன்னதியும், ராமர் பாதமும் உள்ளது.

மாயமானை துரத்திக் கொண்டு ராமர் இப்பகுதிக்கு வந்தபோது ஓரிடத்தில் மான் மாயமாக மறைந்ததாம். ஆலங்குளம் அருகேயுள்ள அந்த இடம் மாயமான்குறிச்சி என்றழைக்கப்படுகிறது. ஓரிடத்தில் மான் தலை கீழாக (குத்தரை) பாய்ந்ததால் அந்த இடம் குத்தரை பாய்ஞ்சான் என்று வழங்கப்படுகிறது. இந்த இடங்களைத் தாண்டி தோரணமலைக்கு ராமர் வந்ததாக ஒரு தகவல் சொல்லப்படுகிறது. தோரணமலை முருகனுக்கு தினமும் ஒரு கால பூஜை நடக்கிறது. தைப்பூசம், வைகாசி விசாகம் பெரிய உற்சவமாக நடக்கிறது. அப்போது பொங்கலிடுதல், காவடி எடுத்தல், பால் குடம் எடுத்தல், முடிகாணிக்கை செலுத்துதல் போன்ற நேர்த்திக்கடன்கள் செலுத்தப்படுகின்றன. அது தவிர முருகனுக்குரிய அனைத்து விசேஷ தினங்களிலும், தமிழ் மாதத்தின் கடைசி வெள்ளிக் கிழமைகளிலும் சிறப்பு வழிபாடுகள் உண்டு. முகூர்த்த நாட்களில் அடிவாரத்தில் ஏராளமான திருமணங்கள் நடத்தப்படுகின்றன. மணப்பேறு, மகப்பேறு கிட்ட, குடும்பப் பிரச்சினைகள் தீர, தொழில் சிறக்க, கடன்தொல்லை நீங்க, எதிரிகளின் தொல்லை அகல என பக்தர்களின் பல வேண்டுதல்களை தோரணமலை முருகன் நிறைவேற்றி வைக்கிறார். திருச்செந்தூர் முருகனை நோக்கி இவர் காட்சி தருவது சிறப்பு. கடல் அரசனாக திருச்செந்தூரிலும், மலை அரசனாக தோரண மலையிலும் முருகப் பெருமான் ஆட்சி செய்து வருகிறார்.

**திருநெல்வேலி மாவட்டம், தென்காசி கடையம் வழியில், மாதாபுரம் என்ற ஊருக்கு மேற்கு 3 கி.மீ தொலைவில் தோரணமலை உள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் கோவில்

## இணுவில்

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை நெடுஞ் சாலையில் வடக்கே காங்கேசன்துறை நோக்கி நான்கு மைல் தூரம் சென்றால் இணுவிலைச் சென்றடையலாம். பேருந்துகள் மூலம் பயணிக்கலாம். இணுவிலில் கோவில் வாசல் சந்தி என்னுமிடத்திலிருந்து மேற்கு நோக்கிச் செல்லும் மானிப்பாய் வீதியில் 200 மீற்றர் தொலைவில் இணுவில் கந்தசுவாமி கோயிலையடுத்து இருப்பதே ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம்.

இவ்வாலயம் இலங்கையின் வடபுலத்தை ஆட்சி செய்த ஆரியச் சக்கரவர்த்திகளாகிய தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்து வந்தனர். அப்பரம்பரையில் பதினோராவது மன்னனாக விருந்து அரசாண்டவன் பரராசசேகர மன்னன்.. இவனே இவ்வாலயத்தை கட்டுவித்தவனாவான். இக்கோவிலின் கிழக்கே இருகுளங்கள் அக்காலத்தில் காணப்பட்டன. இக்கோயிலை கி.பி 1475ம் ஆண்டளவில் கட்டுவித்தான். எனவும் இவ்வாலயம் 525 தென்னிந்திய சிற்பக்கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டு எடுத்துவரப்பட்டு பிரிதிஷ்டை செய்யப்பட்டதாக கூறுவர். இவ்விடத்தில் பெரியமடம் ஒன்றும் இருந்ததாகவும், அடியார்கள் தங்கள் நேரத்திக்கடனுக்காகப் பொங்கல் இம்மடத்தில் பொங்குவதுடன் இளைப்பாறிச் செல்வதாகவும் கூறுவர். போர்த்துகேயர் இவ்வாலயத்தைத் தகர்க்க வந்தபொழுது இது கோவில் அல்ல மடம் என்று கூறி பேரழிவிலிருந்தும் காப்பாற்றினார்கள். இப்போது மாலையில் வீதி உலாவரும் விநாயகர் விக்கிரகத்தை மடத்து வாசலில் புதைத்து வைத்துக் காப்பாற்றி னார்கள்.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆதியில் சுண்ணச்சாந்துக் கட்டடமாக இருந்ததினால் கற்கோவிலாக கட்டும் நோக்குடன் சிறு குடிசையில் விக்கிரகங்களை பாலஸ்தாபனம் செய்தனர். ஆனால் நிதிநிலை அவர்கட்கு கைகொடுக்கவில்லை. அத்துடன் கோவில் பூசைகளும் ஒழுங்கீனமாகவிருந்தது. இதனால் கோவிலுக்கருகில் இருந்த இருவர் குருக்களை அணுகி கோவில் பூசைகளை ஒழுங்காக நடாத்துமாறு வேண்டினர். ஆனால் சிவாச்சாரியரோ மக்கள் ஒரு ரூபா கொடுத்து பூசை செய்ய முன்வராத நிலையில் எப்படி ஒழுங்காகப் பூசை செய்வதென்றும் நாங்களும் சீவிக்க முடியாத நிலையில் உள்ளோம் என எடுத்தியம்பியதுடன் நீங்கள் பூசைக்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்து தந்தால் பூசை செய்யலாம் எனக் கூற கோவிலின் நிலையை உணர்ந்த அவர்கள் வேறு சிலருடன் கலந்தாலோசித்து பிடியரிசித்திட்டத்தைச் செயற்படுத்தினார்கள். இதன் பிரகாரம் 40 கொத்து அரிசி கிடைத்தது. இதில் 20 கொத்து அரிசியைப் பூசைக்கென சிவாச்சாரியரிடம் கையளித்தனர். இதனால் சிவாச்சாரியரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சி யெய்தினார். மிகுதி 20 கொத்து அரிசியையும் மற்றவர்களின் முன்னிலையில் விற்று பணமாக்கி கோவில் நிதியில் வைப்புச் செய்தனர். கோவில் நித்திய பூசை நடைபெறும் நோக்கில் வடக்கு வீதியில் பொதுமக்களின் பணத்தில் கடையமைத்து கூட்டுறவுப் பண்டகசாலைக்கு வாடகைக்கு கொடுத்தனர். வரும் பணத்தில் பூசை செலவுகளை நிறைவு செய்தனர்.


முதலாவது கும்பாபிஷேகம் முடிவுற்ற பின் சேர்ந்த நிதிகளையும் மற்ற நிதிகளையும் சேர்த்து சேமிப்பாக வங்கியிலிட்டார்கள். பலரின் ஆலோசனையின் பெயரில் வசந்த மண்டபத்தைப் புதுபித்தனர். இதன் பின் பல புனருத்தானங்கள் செய்யப்பெற்று 1961, 1972, 1984 ல் கும்பாபிஷேகங்கள் நடைப்பெற்றன. 1966ம் ஆண்டில் எம்பெருமானுக்கு தேர்த்திருவிழா உபயகாரரினாலும் ஏனைய குடும்ப உறுப்பினர்களின் உதவியுடன் தேர் உருவானது. 1975ம் ஆண்டு முருகப்பெருமானுக்கும் 1976ம் அண்டு சண்டேஸ்வரருக்கும் அடியார்களினால் தனி உபயமாக வழங்கப்பட்டது. இரண்டாம் திருவிழாக்காரரினால் அவர்களது உறவினர்களின் உதவியுடன் 1982ம் ஆண்டு கைலாய வாகனம் உருவாக்கப்பட்டது. இதேபோல் ஆறாம் திருவிழாக்காரர் தமது சொந்த திருப்பணியாக ஓர் சித்திரத் திருமஞ்சத்தை உருவாக்க உதவினார்கள். ஒன்பதாந் திருவிழாக்காரர் தமது குடும்ப உபயமாக ஒரு சப்பைரதத்தினைக் கொடுத்தார்கள். கஜமுகசூரன் போர் செய்வதற்கு ஏதுவாக அடியார்களினால் கஜமுகாசூரன் ஒன்றையும் அன்பளிப்புச் செய்தார்கள். 1972ம் ஆண்டு இராச கோபுரமும் மெய்யடியார்களினால் நிர்மாணிக்கப்பட்டது. இராச கோபுரத்திற்கு வடக்கில் காண்டாமணி கோபுரத்துடன் அமைக்கப்பட்டுள்ளது.

1996ம் ஆண்டு சித்திரை மாதம் மக்கள் மீள்குடியேறியவுடன் திருப்பணி வேலைகள் ஆரம்பமாகி உள்ளும் புறமும் புதிய சந்நிதிகள் அமைக்கப்பெற்று 1997ம் ஆண்டு தை மாதம் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 1997ல் கும்பாபிஷேகம் நடைபெற்ற பொழுது யுத்த நெருக்கடி காரணமாக மக்கள் நடமாட முடியாத சூழ்நிலையில் 33 ஓமகுண்டம் அமைத்து கும்பாபிஷேக நிகழ்வுகள் யாவும் நிறைவேறிய நிலையில் அமைதியாகக் கும்பாபிஷேகம் செய்யத் துணிந்தனர். வழக்கமாக பல்லப்பை வைரவர் ஆலயத்திலிருந்து 108 காவடிகள் கும்பாபிஷேக தினத்தில் எடுத்து வருவார்கள். ஆனால் பயத்தினால் 108 காவடிகளும் இணுவில் கந்தசுவாமி கோவிலிருந்து எடுத்து வந்து தம் நேர்கடனை நிறைவேற்றினர். அன்று இரவு எம்பெருமான் வீதி உலா வந்தார். மண்டலாபிஷேக இறுதி நாளன்று 10008 சங்காலும், 1008 இளநீராலும், 108 குடம் பாலுடன் இதர கும்பதிரவியங்களுடனும் அபிஷேகம் நடைபெற்றது. 2002ல் பாலுடனும் இதர கும்பதிரவியங்களுடனும் அபிஷேகம் நடைபெற்றது. 2002ல் தீர்த்தக்கேணியின் அருகில் சுவாமி இளைப்பாறும் மண்டபமும் அடியார்களின் உதவியுடன் அமைக்கப்பட்டது. இங்கு பரிவார மூர்த்திகளாக பால விநாயகர், பாலமுருகன், சூரிய சந்திரர், நான்முக விநாயகர், பஞ்சமுக விநாயகர், தெட்சணா மூர்த்தி, சந்திரசேகரர், அம்பாள், இராஜேஸ்வரி அம்பாள், சந்தான கோபாலர், வைரவர், வள்ளி தெய்வயானை சமேத முருகன், வரலட்சுமி, நடராசப் பெருமான், சமய குரவர்கள் நால்வர், நவக்கிரகங்கள், சண்டேஸ்சுவரர், கொடித்தம்ப விநாயகர் என்பன தனித்தனியே அமைக்கப்பட்டுள்ளன. இதைத்தவிர எழுந்தருளி விக்கிரகங்கள் வசந்த மண்டபத்தை அலங்கரிக்கின்றன.

இவ்வாலயத்தை நான்கு காலப் பூசைகள் நடைபெறுகின்றன. வருடாந்த மகோற்சவமாக வைகாசி மாதத்தில் வரும் சதய நட்சத்திரத்தில் கொடியேறி பதினோராந் திருவிழா புனர்பூசத்தில் தீர்த்த திருவிழாவாக நடைபெறும். விசேட தினங்களாக பிரதோஷம், சித்திரா பூரணை, நடேசர் அபிஷேகம், சமயகுரவர் குருபூசைகள், ஆடிப்பூரம், ஆவணிச்சதுர்த்தி, ஆவணிமூலம், நவராத்திரி, விநாயகர் கதை, 21ம் நாள் கஜமுக சூரசங்காரமும், விநாயகர் சஷ்டி, திருவெம்பாவை, சிவராத்திரி, மாதப்பிறப்பு சங்கிராந்தி, கார்த்திகை உற்சவம், சதுர்த்தி எனபனவும் நடைபெறும். இங்கு புராணபடணம் தொன்று தொட்டு நடைபெற்று வருகின்றது. கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம், விநாயகர் புராணம், படிக்கப்பட்டு பலன் சொல்லி வருவார்கள். பங்குனி சித்திரை மாதங்களில் ஏற்படும் வெம்மை காரணமாக முற்காலத்தில் ஆலய முன்றலில் கஞ்சி காய்ச்சி விஷேட பூசைகள் படையல்கள் நடாத்தி கஞ்சி வார்ப்பார்கள். தற்பொழுது வருடா வருடம் பங்குனி மாதத்தில் உத்தரநட்சத்திரத்தை அடுத்த நாட்களில் அன்னதானம் நடைபெறுகின்றது. இவ்வாலயத்தில் 200 வருடங்களுக்கு முன் பாவனையில் உள்ள மூஷிகம் திருத்தம் செய்யப்பட்டு இப்பொழுதும் பாவனையில் உள்ளது. வெள்ளியினாலான எலி வாகனத்துடன் 23 வாகனங்கள் இவ்வாலயத்தில் உள்ளதுடன் அவை மிகவும் கவனமாகப் பேணி பாதுகாக்கப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதனை பக்தியுடன் படியுங்கள்..



சபரிமலையில் தந்திரி ஓதுகிற ஐயப்ப மூல மந்திரமாவது:

**ஓம்! க்ரும் நம: பராய**
**கோப்த்ரே நம**

கலியுகத்தில் எல்லாவிதமான துன்பங்களிலிருந்தும், ஆபத்துகளிலிருந்தும் மக்கள் அனைவரையும் ரட்சித்து காப்பாற்றும் சக்தியுடைய ஒரே கடவுள் ஐயப்பன்தான் என்பதே இம்மூல மந்திரத்தின் பொருள்.

### சாஸ்தா காயத்ரீ

ஓம் பூத நாதாய வித்மஹே
பவநந்தனாய தீமஹி
தந்நோ: ஸாஸ்தா ப்ரசோதயாத்

ஓம் தத் புருஷாய வித் மஹே
பூத நாதாய தீமஹி
தந்நோ ஸாஸ்தா ப்ரசோதயாத்

### ஸ்ரீ தர்ம ஸாஸ்தா காயத்ரீ

ஓம் பூதாதி பாய வித் மஹே
மஹா தேவாய தீமஹி
தந்நோ ஸாஸ்தா ப்ரசோதயாத்

### ஐயப்பன் மகா மந்திரம்

புதநாத ஸதானந்தா
ஸர்வபூத தயாபரா
ரக்ஷ ரக்ஷ மஹா பாஹோ
சாஸ்த்ரே துப்யம் நமோ நமஹ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பெண்கள் அனுஷ்டிக்க வேண்டிய ஐயப்ப விரதம்

பஞ்சால நாட்டை மன்னன் வீரசேனன் ஆட்சிபுரிந்து வந்தான். அவனது இரு மனைவியருள் இளையவள், மூத்த ராணியிடம் மிகுந்த பொறாமை கொண்டு, அவளை நாட்டை விட்டு வெளியேற்றத் திட்டம் தீட்டினாள்.

அந்த நேரத்தில் ஆண் மகனை பிரசவித்தாள் பட்டமகிஷி. விதிவசமாய் அக்குழந்தை பெருநோயுடன் பிறந்தது. இளையராணி அதை காரணமாக்கி, இத்தகைய குழந்தைகளால் தேசமே அழிந்துவிடும் என அரசரை நம்ப வைத்து, ராணியையும் குழந்தையையும் நாட்டைவிட்டு வெளியேற்றினாள்.

மூத்த அரசி, சாஸ்தா மீது மிகுந்த பக்தி கொண்டவள். எந்த நிலையிலும் சாஸ்தா மீதான நம்பிக்கையைக் கைவிடவில்லை.
காசிராஜனின் நாட்டையடைந்து, தான் அரசி என்பதை மறந்து, ஒரு வீட்டில் பணிப்பெண்ணாய் வேலை பார்த்து வந்தாள். குழந்தையும் நோயுடனேயே வளர்ந்து வந்தது. மகன் ஜெயதேவனுடன் பல இன்னல்களை அனுபவித்தாள். ஒரு முறை அந்த ஊருக்கு வந்த மகரிஷி ஒருவர், அரசியின் மீது கருணை கொண்டார். சாஸ்தா மீது அவள் வைத்திருந்த பக்தியை அறிந்தார். சாஸ்தாவுக்கு உகந்த உத்திர நட்சத்திர விரதத்தின் பெருமையை அவளுக்கு எடுத்துரைத்தார். ஹரிஹரசுதன் ஐயன் ஐயப்பஸ்வாமியின் ஜன்ம நட்சத்திரமான உத்திர நட்சத்திர நாளில் துவங்கி, ஒரு முழுவருடம் முழுமையாய் இவ்விரதம் கடைப்பிடித்தால் நினைத்த வேண்டுதல்கள் கைகூடும். பீமன் இந்த விரதத்தை அனுஷ்டித்ததன் பலனாய் பகாசுரனை அழித்தான். அர்ஜுனன் இவ்விரதத்தை கடைப்பிடித்து துரியோதனாதிகளை வென்றான் எனக் கூற, அரசியும் அந்த விரதம் இருந்தாள். அனைவரும் ஆச்சரியப்படும் விதத்தில் ஜெயதேவனின் பெருநோய் குணமாகி, அவன் அழகனாய் பிரகாசித்தான்.

சாஸ்தாவின் அருளால் நடந்த இந்த அதிசயத்தை காசிராஜன் கேள்விப்பட்டு, ஜெயதேவனுக்கு தன் மகளை மணமுடித்துத்தர விரும்பினான். ஜெயதேவன் பாஞ்சால இளவரசன் எனத் தெரிந்து கொண்டு வீரசேனனை சந்தித்தான். அதுவரை வேறு பிள்ளைப் பேறில்லாமல் தவித்துக் கொண்டிருந்த மன்னன், தன் தவறை உணர்ந்து, மன்னிப்புக் கேட்டு உரிய நாளில் ஜெயதேவனுக்கு இளவரசியை மணமுடித்தான். இவ்விரதம் அனுஷ்டித்ததால் மூத்த அரசி நல்ல பலன்களைப் பெற்றாள். இந்தக் கலியுகத்தில் ஐயப்பனை நினைத்து ஆண்கள் விரதம் இருந்து சபரிமலைக்குச் செல்வது போல், பெண்கள் அவரவர் வீட்டில் இருந்து ஐயப்பனை நினைத்து இந்த விரதத்தினைக் கடைப்பிடித்தால் குழந்தைகள் நலம் சிறக்கும். குடும்பத்தில் நன்மைகள் பல உண்டாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சபரிமலை யாத்திரை

### மாலையணிய மந்திரம்

ஞானமுத்ராம் சாஸ்த்ரு முத்ராம்
குருமுத்ராம் நமாம் யஹம்
வனமுத்ராம் சுத்த முத்ராம்
ருத்ர முத்ராம் நமாம் யஹம்
சாந்தமுத்ராம் சத்தியமுத்ராம்
வ்ருதுமுத்ராம் நமாம் யஹம்
சபரர்யாஸ்ரம சத்யேன முத்ராம்
பாது ஸதாபிமே
குருதக்ஷிணயா பூரவம்
தஸ்பா நுக்ரஹ காரிணே
சரணாகத முத்ராக்யம்
த்வன் முத்ராம் தாரயா

### 41 நாள் விரதமிருங்க

கார்த்திகை மாதம் முதல்நாளில் ஐயப்ப பக்தர்கள் மாலை அணிந்து விரதம் மேற்கொள்வர். இந்நாளில் வாய்ப்பு கிடைக்காவிட்டால் வரும் சனிக்கிழமைகளில் அல்லது உத்திர நட்சத்திரத்தன்று மாலை அணியலாம். அர்ச்சகர் அல்லது குருசாமியின் கையால் ருத்ராட்சமாலை அல்லது துளசிமணி மாலை அணிந்தபின் கோயிலை வலம் வந்து தேங்காய் உடைத்து சுவாமிகளை வழிபட வேண்டும். பதினெட்டாம் படியேறி சுவாமியை தரிசிக்க விரும்புவோர் கண்டிப்பாக 41 நாள் விரதமிருப்பது அவசியம்.

### பக்தர்கள் கவனிக்க...

கருப்பு அல்லது நீலவண்ண ஆடை அணிய வேண்டும், செருப்பு அணிய கூடாது. கட்டில், மெத்தை, தலையணை பயன்படுத்தக் கூடாது. மது, மாமிசம், தாம்பத்யம் தவிர்க்க வேண்டும். பொய் பேசக் கூடாது. உறவினர் வீட்டில் மரணம் நேர்ந்தால் செல்வது கூடாது.
மீறினால் மாலையை கழற்றுவதோடு மலைக்கு செல்வதையும் தவிர்க்க வேண்டும். சவ ஊர்வலத்தை காண நேர்ந்தால் வீட்டில் கோமியம் தெளித்து நீராடிய பின்னரே பூஜை செய்ய வேண்டும்.

### கன்னி சாமிகளே... கவனம்!

சபரிமலைக்கு முதல்முறையாக செல்லும் சிலர், பதினெட்டுபடிகள் ஏற வேண்டும் என்னும் ஆசையில் பம்பை நதிக்கரையில் நீராடி அங்கேயே இருமுடி கட்டுகின்றனர். பம்பையில் நீராடி மாலையணிந்து உடனே மலையேறுவது பெரும்பாவம்.

### மறந்துடாதீங்க பக்தர்களே!

#### இருமுடி பொருட்களின் லிஸ்ட்...

1. மஞ்சள் பொடி - 100கிராம் (மலைநடை பகவதி, மஞ்சன்மாதாவுக்காக)
2. சந்தன பாக்கெட்
3. குங்குமம் பாக்கெட்
4. நெய் தேங்காய் - 1
5. பசுநெய்
6. விடலைத் தேங்காய் - 5 (எரிமேலி, சபரிபீடம், சரங்குத்தி, பதினெட்டாம் படி, ஆலி )
7. சிறிய பன்னீர் பாட்டில்
8. கற்பூர பாக்கெட்
9. பச்சரிசி

### அப்படி பார்க்காதீங்க!

மலைக்கு கிளம்பும் போது, வீட்டையோ, மனைவி, குழந்தைகளையோ, பெற்றோரையோ திரும்பி திரும்பிப் பார்க்காமல் செல்வது அவசியம். பக்தர்கள் தங்களின் ஆன்மாவை கடவுளிடம் சமர்ப்பிக்க வேண்டும். சுவாமி ஐயப்பனின் திருவடியில் மனம் முழுமையாக ஒன்றுபட வேண்டும் என்பதன் அடிப்படையில், இந்த நடைமுறை பக்தர்களால் பின்பற்றப்படுகிறது.

### அம்மனுக்கும் ஆபரணம்

ஐயப்பனுக்கு மட்டுமன்றி மாளிகைப் புறத்தம்மனுக்கும் திருவாபரணம் பந்தளம் அரண்மனையில் இருந்து கொண்டு வரப்படும். ஐயப்பனுக்கு ஆபரணம் சாத்தி பூஜை நடக்கும் போது, மாளிகைப்புறத்தம்மனுக்கும் பூஜை நடத்துவர். மகரஜோதி விழா முடிந்த பிறகும் ஆறுநாள் நடை திறந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள் மொழிகள்



எண்ணெய் இல்லாது போனால் விளக்கு எரியாது. அதுபோல இறைவன் இல்லாது போனால் மனிதன் உயிர் வாழ முடியாது.

ஒருவன் எப்போதும் உண்மையையே பேசுபவனாக இருந்தால் அல்லாமல் உண்மையே உருவான இறைவனைக் காண முடியாது.

*- ராமகிருஷ்ணர்*

விருப்பு மற்றும் விருப்பற்ற நிலை ஆகிய இரண்டு நிலைகளையும் கடந்து, மிகவும் உயர்ந்த நிலையில் அடையப் பெற்ற பற்றற்ற தன்மை மற்றும் பயம்- பயமின்மை, கோபம்- கோபமின்மை ஆகிய இரண்டையும் கடந்து, நிலைத்த உணர்வுடன் அதாவது. அகங்காரத்தைத் தவிர்த்து என்னுடைய சரணத்தை அடைந்து எண்ணற்றோர் ஞானம் என்னும் தவத்தால் புனிதமடைந்து என்னுடைய ஆன்ம வடிவத்தை அடையப் பெற்றுள்ளனர்.

*-பகவத்கீதை*





நோக்கம் எதுவென்பதை முதலில் தீர்மானி. அதுவே இலக்கு என்பதை உறுதி செய்து கொள். கையில் பணமில்லையே... உடலில் வலுவில்லையே... உதவி செய்ய நண்பர்கள் இல்லையே.. என்றெல்லாம் யோசித்து நேரத்தை வீணாக்காதே. எதற்கும் பயப்படாதே தயங்காதே..! இலக்கை நோக்கி அடியெடுத்து வை. தொடர்ந்து முன்னேறு. சோதனைகள் விலகும். பாதை தெளிவாகும். நோக்கத்தை அடைந்தே தீருவாய் அதை யாராலும் தடுக்க முடியாது.

*- சுவாமி விவேகானந்தர்*

நீங்கள் லட்சியத்தை நோக்கிச் செல்வது என்று தீர்மானித்தால் அதனால் என்ன நஷ்டமானாலும், என்ன கஷ்டம் வந்தாலும், எத்தனை கசப்பான விஷயங்களைச் சந்திக் வேண்டியிருந்தாலும் மேலே செல்ல உறுதி கொண்டால் எவ்வளவோ தொல்லைகள் குறையும். அச்சமின்றி உறுதியோடு நில்லுங்கள். தடைகளெல்லாம் மறைந்துவிடும்

*- ஸ்ரீ அன்னை*





தீமையை நன்மையால் வெல்லுங்கள், பொய்யினை உண்மையால் வெல்லுங்கள்

உலகத்தில் நடமாடும் எதிரிகளை மடக்குவது வீரமிக்க செயல் தான் ஆனால் உன் உள்ளத்தில் நடமாடும் எதிரிகளை மடக்குவதே அதை விட சிறந்த வீரம்

*- கௌதம புத்தர்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து தர்ம சாஸ்திரம்

ஒருவனுடைய பொருளைக் கண்டு அதிக பொறாமை கொள்பவன், ஒருவனது முன்னேற்றத்தைக் கண்டு பொறுக்காதவன், அழகைக் கண்டு அசூயைப் படுபவன், வீரத்தைக் கண்டு வெறுப்பவன், பெருமையைக் கண்டு தூற்றுபவன், பூஜையைக் கண்டு தூஷிப்பவன் ஆகியோர் எப்பொழுதும் பிணியுற்று இருப்பார்கள். அவர்களுக்கு ஆரோக்கியம் கிடைக்காது.

தரித்திரம் அதிகமுள்ளவர்களுக்கு பசியும் அதிகமிருக்கும். அவன் தரித்திரமாயிருப்பதே, கடவுள் தண்டனை. அதிலும் அதிகப் பசியைக் கொடுப்பது தண்டனைக்கு மேல் தண்டனை ஆகும். அவன் போன ஜன்மத்தில் யாருடைய உணவைப் பறித்தானோ! அப்படியெல்லாம் அவன் எண்ணிப் பார்த்து இப்பொழுதேனும் நேர்மைக்குத் திரும்ப வேண்டும்.

தரித்திரக்காரனுக்கு உணவும் அதன் ருசியும்தான் முக்கியமாகும். ஆனால் பணக்காரர்களுக்கு இந்தப் பசியும், ருசியும் அதிகமிருக்காது. இவர்களுக்கு பணத்தின் மீது பசியும், சொத்தின் மீது ருசியும்தான் இருக்கும். பணம் அதிகமுள்ளவர்கள் சாப்பிட்டால் ஜீரண சக்தி அதிகம் இருக்காது. கஷ்டப்படுகிறவன் மரக்கட்டை சாப்பிட்டாலும் ஜீரணமாகிவிடும். இதுதான் உலக நீதி. இதன் தாத்பர்யம் என்னவென்றால் பண வசதி படைத்தவன் தரித்திரர்களின் அன்னத்திற்கு உதவவேண்டும் என்பதே ஆகும்.

மன நிம்மதி தருவதும், சந்தோஷத்தைக் கொடுப்பதும் பாவத்தை நீக்கி புண்ணியத்தைத் தருவதும் தர்மம் ஆகும். தர்மம் என்றும் அழியாதது. மனிதன் இறந்த பின்பு காதில் உள்ள கடுக்கனையும் கையில் உள்ள மோதிரத்தையும் கூட கழட்டி வைத்துக் கொண்டுதான் மயானத்துக்கு அனுப்புகிறார்கள். ஆனால் அவன் செய்த தர்மத்தை எவராலும் கழட்ட முடியாது. இவ்வுலகத்தில் பணத்தைச் சேர்ப்பதைவிட, தர்மத்தை சேர்க்க வேண்டும். மேலுலகம் போனால் அது உதவும். ஆனால் இந்தப் பணம் அங்கு செல்லாது. அதனால் அப் பணத்தை இங்கு தர்மமாகவும், பிறருக்கு உதவியாகவும் செய்து அனுப்ப வேண்டும். மேலுலகத்தில் இவைகளைச் செலவழித்துக் கொண்டு சௌக்கியமாக இருக்கலாம். மனிதா! உன் நிலையை நன்கு யோசித்துப் பார்.

எவ்வளவு விறகுக் கட்டைகளைப் போட்டாலும், அக்னி திருப்தி அடையாது. எத்தனை நதிகள் கலந்தாலும் சமுத்திரம் திருப்தி அடையாது. எவ்வளவு பணம் வந்தாலும் கஞ்சன் திருப்தி அடைவதில்லை. அதுபோல மனிதர்களும் பெண் ஆசையில் திருப்தி அடைய மாட்டார்கள். இதை ஜெயித்தால் மனிதன் எதையும் ஜெயித்து விடுவான். கடவுள் பக்தியினால் அது கைகூடும். கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.

நல்ல ஆகாரத்தை விரும்பும் ஒருவன் வீட்டில் பசு இல்லாமல் இருக்காது. தாமதமில்லாமல் ஒரு காரியத்தை முடிக்க எண்ணுபவன் வாகனம் இல்லாமல் இருக்க மாட்டான். இவ்விரண்டும், பூர்வ புண்யத்தால் ஒருவனுக்கு வருபவை ஆகும்.

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தற்கொலை எனும் மூடத்தனம்

நீங்கள் முற்றிலும் மனம் தளர்ந்து, நம்பிக்கை இழந்து இருக்கும் பொழுது, நமது மறை நூல்களின் பக்கம் உங்கள் கவனத்தைத் திருப்புங்கள். அல்லது மகான்களின் சிறந்த நூல்களைப் படியுங்கள். அல்லது ஒரு மாதம் விடுமுறை எடுத்துக் கொண்டு ஒரு யாத்திரையை மேற்கொள்ளுங்கள், அல்லது ஒரு புனித இடத்திற்கு விஜயம் செய்து அங்கே பதினைந்து நாட்களோ, அல்லது ஒரு மாதமோ தங்குங்கள். நேரத்தை பிரார்த்தனை, ஜபம், கீர்த்தனை, தியானம், நீண்ட நடைப் பயணங்களில் செலவிடுங்கள். சிதறுண்ட உங்கள் மனத்தையும், உடலையும் சீர்படுத்தி, உங்களிடம் புதிய தெம்பினையும், மகிழ்ச்சியினையும் ஏற்படுத்த இவையெல்லாம் சிறந்த வழிமுறைகளாகும்.

சிலர் மது அருந்துதல் மற்றும் தவறான வழிகளில் சென்று அம்முறைகளால் தங்களது கவலைகளை மறக்கலாம் என்று தப்புக் கணக்குப் போடுகின்றனர். அது முடியவே முடியாது. அவர்களது இந்த தீர்ப்பு வியாதியைக் காட்டிலும் மிகவும் மோசமான மருந்தாகும். தூக்க மாத்திரைகள் பிரச்சினையைத் தீர்க்க மாட்டா. அவை உண்மை நிலையை உங்களால் எதிர்கொள்ள முடியாத அளவுக்கு உங்களிடம் மனத் தளர்ச்சியை உண்டாக்கும்.

தற்கொலையோ மகா முட்டாள்தனம்! நீங்கள் பிசாசக மாறுவீர்கள். மனிதனாக இருக்கும் நிலையைக் காட்டிலும் அது அதிகம் தொல்லை நிறைந்தது.

**மன அமைதியை பெருக்கமுடியும்**

உங்கள் மன அமைதியைப் பெருக்கிக் கொண்டே போக முயலுங்கள். இடையில் தயங்க வேண்டாம். மேலும் மேலான நிலைக்குப் போக முடியும். தயங்கி நின்றால்தான் மோசமானது. ஏனெனில் அது சில சமயங்களில் நிலைமையை மோசமாக்கிவிடும். உங்கள் அக வாழ்க்கையின் தரத்தை உயர்த்துங்கள். அகத்தேயுள்ள செல்வ நிலையே (மனநிறவே) உண்மையான செழிப்பாகும். உங்கள் குழந்தைகளின் செல்வம் அகத்தே உருவாக்கப்படட்டும். இது நிச்சயம் புறவாழ்விலும் செல்வத்தை கொணர்ந்து விடும். ஒரு மனிதனை அவனது செயலால் தீர்மானிக்காதது, அவன் எப்படி இருக்கிறான் என்பதைக் கொண்டு தீர்மானிக்க வேண்டும் என்று ஆச்சார்யப் புருஷர்கள் சொல்கிறார்கள். அனைத்து லௌகீக ஆவல்களையும் விடுங்கள். அதன் இடத்தில் ஆன்மீகத்தில் வளர்ச்சி அடைய, துறவில் வளர்ச்சி அடைய விரும்பும் ஆவலை வளருங்கள். எல்லா சிறிய ஆசைகள் மற்றும் ஆவல்களை இந்த ஒரு இலட்சியத்தால் இடப்பெயர்ச்சி செய்யுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு முறையான இலட்சியத்தை உங்கள் முன் வைத்துக் கொண்டால், அதன்பின் உங்களுக்கு நீங்களே உண்மையாக இருக்க ஆரம்பியுங்கள். உங்கள் சிந்தனை, சொல், செயலுக்கிடையே மேலும் மேலும் ஒற்றுமையாகக் கொண்டு வாருங்கள்.

நீங்கள் சொல்வதைச் செய்யுங்கள். எல்லாப் போலித்தனத்தையும் விடுங்கள். உங்கள் வாழ்விலிருந்து எல்லா போலித்தனத்தையும் அகற்றுங்கள். மன அமைதியின் முக்கிய பகைவன் போலித்தனமாகும்.

**ஆன்மீக ஒப்பிடலும் லௌகீக ஒப்பிடலும்**

லௌகீக அளவில் உங்களைவிட கீழான நிலையில் இருப்போருடனும், ஆன்மீக அளவில் உங்களைவிட மேல் நிலையில் உள்ளோருடனும் ஒப்புநோக்குங்கள். இது உங்களிடம் லௌகீக திருப்தியையும், ஆன்மீக அதிருப்தியையும் தூண்டும் அதில்தான் முன்னேற்றமும் அமைதியும் அடங்கியுள்ளது. ஆனால், இதற்கு மாறாக ஆன்மீகத்தில் கீழ்நிலையில் உள்ளோருடனும், லௌகீக நிலையில் மேலான நிலையில் உள்ளோருடனும் நீங்கள் உங்களை ஒப்புநோக்கினால் (அநேகர் இப்படித்தான் செய்கின்றனர்) அது பயங்கர விளைவுகளாக லௌகீக அதிருப்தியையும் ஆன்மீக கர்வத்தையும் கொணரும். மன உளைச்சல் நரகத்திற்கு இதுதான் நேர்வழி.

**யாருடன் நட்பு?**

ஒரு சில நம்பகமான நண்பர்களிடம் மட்டுமே பழகுங்கள். பழக்கத்தைப் பெருக்கவேண்டாம். எவருடனும் அதிகமாக நெருங்கிப் பழக வேண்டாம். அதிக நெருக்கம் அலட்சியத்தை உருவாக்கி உணர்ச்சிகளை உருகுலைத்து, மன அமைதியைக் கெடுக்கிறது.

காரணத்துடன் மட்டும் பேசுங்கள். எல்லாவிதமான தேவையற்ற பேச்சையும் தவிருங்கள். அளந்தே பேசுங்கள், களக்கமற்ற, நல் நோக்கம் கொண்ட வார்த்தைகளே சில வேலைகளில் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, பிரிவை உண்டாக்குகின்றது. எதிலும் எவருக்கும் புத்திமதி சொல்லப் போகாதீர்கள், நீங்கள் கேட்கப்பட்டாலன்றி, நாம் நமது வேலையைப் பார்ப்போம்.

**வேண்டாம் விவாதம்**

விவாதம் செய்யாதீர்கள். ஒருபொழுதும் தர்க்கத்தில் ஈடுபடாதீர்கள். விவாதத்தில் வெற்றி பெறவேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களா, அது உங்களுக்கு எந்தவிதமான உருப்படியான விளைவுகளையும் தராது. அது உங்கள் ஆணவத்தைப் பெருக்கும். மற்றவரைப் புண்படுத்தும். நண்பர்களுக்கிடையே பிளவை உண்டாக்கும். அடுத்த நபர் அவரது கொள்கையில் நிற்கட்டும். திருத்தவே முடியாத மகா முட்டாள்களும், நியாயத்தைப் பார்க்க வைக்க முடியாத பரம மூடர்களும் இந்த உலகில் உள்ளனர். உங்களது காலத்தையும், பிராணனையும் அவர்கள் விஷயத்தில் வீணாக்காதீர்கள். சோர்வுதான் உங்களுக்கு மிஞ்சும், பகைமையும் வளரும். நமக்கு இது வேண்டுமா?

# மருத்து நீர் ஸ்நானம்



தமிழ் வருடப் பிறப்பன்றைய ஸ்நானத்தில் முக்கிய இடம்பெறும் மருத்து நீர். சகல தோஷங்களையும் நீக்க வல்ல மருத்து நீரை சுத்தமான நீரில், தாழம்பூ தாமரைப்பூ, மாதுளம் பூ, துளசி, விஷ்ணுகிராந்தி, சீதேவியால் செங்கழு நீ, வில்வம், அறுகு பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திப்பிலி, சுக்கு ஆகியவற்றை இட்டு நன்கு காய்ச்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லத்திலே இதனைக் காய்ச்சிக் கொள்ள இயலாதவர்கள் இப்புனித மருத்து நீரை, ஆலயங்களிலே அந்தணப் பெரியோர் மூலம் பெற்று ஸ்நானம் செய்தாக வேண்டும். இவ்வருடத்திற்குரிய தோஷ நட்சத்திரத்தில் பிறந்தவர்கள் தவறாது மருத்து நீர் ஸ்நானம் செய்தாக வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்த ராமாயணத்தில்
# சீதையின் கதை



பத்மாட்சன் என்ற மன்னன் சிறந்த விஷ்ணு பக்தன். அவன் மகாலட்சுமியை தன் மகளாக அடையவிரும்பி, தாயாரை நோக்கி கடுந்தவம் மேற்கொண்டான்.

மன்னனது தவத்தில் திருப்தியுற்ற மகாலட்சுமி மன்னன்முன் தோன்றி, "வேண்டும் வரம் யாது?" என்று கேட்க, "அன்னையே, தாங்கள் என் மகளாகப் பிறக்கவேண்டும்" என வேண்டினான். "நான் மகாவிஷ்ணுவை எப்போதும் பிரியாமல் வாழ்பவள். நான் உனக்கு மகளாக பிறக்க வேண்டுமெனில் அவரது அனுமதி வேண்டும். எனவே நீ மகாவிஷ்ணுவைக் குறித்து பிரார்த்தனை செய்" என்று கூறி தேவி மறைந்தாள்.

பத்மாட்சன் மகாவிஷ்ணுவைக் குறித்து தவம் மேற்கொண்டான். மகாவிஷ்ணு மன்னன் எதிரில் காட்சிகொடுத்தபோது தன் விருப்பத்தைக் கூறினான்.

மகாவிஷ்ணு ஒரு மாதுளம் பழத்தை மன்னனிடம் கொடுத்துவிட்டு மறைந்தார். மன்னன் அப்பழத்தைப் பிளந்து பார்த்தபோது அதில் ஒரு பாதியில் விதையும் மற்றொரு பாதியில் தங்கநிறப் பெண் குழந்தையும் இருந்தது. அதைக் கண்டு மகிழ்ந்து மன்னன் குழந்தைக்கு பத்மா என்று பெயரிட்டு வளர்த்துவந்தான்.

பத்மா திருமண வயதை அடைந்தபோது, அவளுக்குத் திருமணம் செய்ய முடிவுசெய்து சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்தான் மன்னன். சுயம்வர நாள் குறித்து அனைத்து நாட்டு மன்னர்களுக்கும் அழைப்புவிடுத்தான். சுயம்வர நாளில் எல்லா மன்னர்களும் வந்திருந்தனர். அவர்களில் இலங்காதிபதி இராவணனும் ஒருவன். பத்மாட்சன் அங்கிருந்த மன்னர்களைப் பார்த்து, "ஆகாயத்திலுள்ள நீலநிறத்தை எடுத்து தன் உடலில் பூசிக்கொள்பவருக்கே பத்மாவைத் திருமணம் செய்துகொடுப்பேன்" என அறிவித் தான். யாராலும் செய்யமுடியாத ஒன்றை நிபந்தனையாகக் கூறிய பத்மாட்சன் மேல் கோபம் கொண்ட மன்னர்கள் அவனுடன் போரிடத் தொடங்கினர். பத்மாட்சனும் அவர்களை எதிர்த்துப் போரிட்டான். முடிவில் பத்மாட்சன் கொல்லப்பட்டான். அடுத்து பத்மாவைத் தூக்கிச் செல்வதற்காக மன்னர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அவளைத் தேடியபோது, அவள் அக்னியில் இறங்கி மறைந்துவிட்டாள். இது தெரியாமல் அவளைத் தேடியலைந்த மன்னர்கள், அவள் கிடைக்காததால் ஆத்திரத்தில் அரண்மனையை இடித்துத் தரைமட்டமாக்கி, நகரத்தையும் பாழ்படுத்திவிட்டுச் சென்றனர். பத்மாட்சனின் மனைவி உடன்கட்டை ஏறி உயிர்துறந்தாள். மன்னனுக்கு ஏற்பட்ட இந்த முடிவைக் கண்டு வருந்திய மக்கள், "மகாலட்சுமியை மகளாக அடைந்த மன்னன் கதி இப்படியானதே. இதனால்தான் ஞானம்பெற்ற மகரிஷிகள் லட்சுமியை விரும்புவதில்லைபோலும்" எனப் பேசிக் கொண்டனர்.

அக்னி குண்டத்துக்குள் வெகுகாலம் இருந்த பத்மா பின்னர் வெளிப்பட்டு குண்டத்துக்கு அருகில் அமர்ந்திருந்தாள். அச்சமயம் இராவணன் ஆகாயமார்க்கமாக வந்துகொண் டிருந்தான். அவனது புஷ்பகவிமானம் அக்னி குண்டத்துக்கு மேலே வந்தபோது, இராவணனின் மந்திரியான சாரணன் பத்மாவைப் பார்த்துவிட்டு இராவணனிடம் காட்டினான். இராவணன் விமானத்தை பத்மா இருக்குமிடம் நோக்கி செலுத்தி அவளைப் பிடிக்கமுயன்றான். இராவணனைப் பார்த்த பத்மா மீண்டும் அக்னி குண்டத்துக்குள் மறைந்து கொண்டாள். இதையறிந்த இராவணன் அரக்கர்களைக் கொண்டு தீயை அணைக்கச் செய்தான். தீ அணைந்தபிறகு சாம்பலைக் கிளறிப்பார்த்த போது அதில் ஒளிவீசும் ரத்தினங்கள் கிடந்தன. அவற்றை எடுத்து ஒரு பெட்டியில் வைத்துக்கொண்ட இராவணன் இலங்கை திரும்பினான்.

அன்றிரவு இராவணன் தன் மனைவி மண்டோதரியிடம் பேசிக் கொண்டிருந்தபோது, அவளுக்கு அற்புதமான பரிசு கொண்டு வந்திருப்பதாகக் கூறி பூஜாகிரகத்தில் இருக்கும் சிறுபெட்டியை எடுத்து வருமாறு கூறினான்.

மண்டோதரி உள்ளே சென்று பெட்டியை எடுக்க முயன்றபோது அதை அசைக்கக்கூட முடியவில்லை. இராவணனிடம் வந்து அவள் கூறியபோது, அவளை கேலி செய்தபடி சென்ற இராவணனாலும் அதைத் தூக்க முடியவில்லை. எனவே இராவணன் பெட்டியின் மூடியைத் திறந்தான். உள்ளே ரத்தினங்களுக்கு பதில் பத்மா உட்காந்திருந்தாள். இராவணன் மண்டோதரிக்கு பத்மா யார் என்பதையும், பின்னர் நடந்த சம்பவங்களையும் விவரமாகக் கூறினான்.

பத்மாவின் வரலாற்றைக் கேட்ட மண்டோதரி, "தன் குடும்பத்தையே நாசம் செய்தவளை ஏன் இங்கு கொண்டுவந்தீர்கள்? இவளைப் பெட்டியோடு எங்கேனும் காட்டில் விட்டுவிடச் சொல்லுங்கள்" என்றாள். இராவணனுக்கும் மனதில் பயம் ஏற்பட்டது. சேவகர்களை அழைத்து, "பெட்டியை புஷ்பக விமானத்தில் எடுத்துச் சென்று காட்டில் எறிந்துவிட்டு வாருங்கள்" என்று கட்டளையிட்டான். மண்டோதரி சேவகர்களிடம், "பெட்டியை வெளியே எறிந்துவிடாமல் பூமிக்குள் புதைத்துவிட்டு வாருங்கள்" என்று கூறி அனுப்பினாள்.

அரக்கர்கள் கடல், மலை, காடுகள் பலவற்றைக் கடந்துசென்று, ஓரிடத்தில் பள்ளம் தோண்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டியைப் புதைத்து விட்டு நாடு திரும்பினர். அரக்கர்கள் பெட்டியைப் புதைத்த இடம் மிதிலை. மிதிலையை ஆண்ட ஜனக மன்னர் பெட்டி புதைக்கப்பட்ட நிலத்தை அந்தணர் ஒருவருக்கு தானம் செய்திருந்தார். குடியான வர்கள் அந்த நிலத்தை உழுதபோது கலப்பை நுனியில் பெட்டி ஒன்று தட்டுப்படவே, அதை எடுத்துச்சென்று அந்தணரிடம் கொடுத்தனர். அப்பெட்டி நிலத்தை தானம் செய்த ஜனக மன்னருக்கே சொந்தமானது என்று கருதிய அந்தணர் அதை எடுத்துச்சென்று மன்னனிடம் கொடுத்தார்.

மன்னரோ, "நிலத்தைக் கொடுத்த பின்னர், அதிலிருந்து கிடைக்கும் பொருளை நான் ஏற்றுக்கொள்வது தர்மமல்ல. அது உமக்கே உரியது" என்றார். சபையோர், "பெட்டியைத் திறந்து பார்த்து அதைப் பற்றி முடிவு செய்துகொள்ளலாம்" என்று கூற, அனைவர் முன்னிலையிலும் பெட்டி திறக்கப்பட்டது.

அதற்குள் பிரகாசத்துடன்கூடிய ஒரு சிறுமி இருப்பதைக்கண்டு அனைவரும் வியந்தனர். ஜனகர் சிறுமியை அரண்மனைக்கு அழைத்துச் சென்றபோது, தேவதுந்துபிகள் முழங்க, விண்ணிலிருந்து பூமாரி பொழிந்தது. ஜனகர் மகிழ்ச்சியடைந்து அந்த சிறுமியை தன் மகளாக ஏற்றுக்கொண்டார். அவளுக்கு சீதா எனப் பெயரிட்டு அன்புடன் வளர்த்து வந்தார். சீதா திருமண வயதடைந்தபோது ஜனகர் சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்தார். பல தேசத்து மன்னர்களும் வந்திருந்தனர். விசுவாமித்திரர் ராம- லட்சுமணர்களை அழைத்து வந்திருந்தார். சுயம்வர மண்டபத்தில், "யாராலும் வளைக்கமுடியாத இந்த வில்லை வளைப்பவருக்கே என் மகளைத் திருமணம் செய்து கொடுப்பேன்" என்று ஜனகர் அறிவித்தார். அந்த வில் சிவபெருமானால் பரசுராமருக்கு அளிக்கப்பட்டது. யாராலும் அதைத் தூக்கவே முடியாத நிலையில், ராமர் அந்த வில்லை முறித்து சீதாவுக்கு மாலையிடும் தகுதியைப் பெற்றார்.

திருமணத்தின்போது சதானந்த முனிவர் தசரதரிடம், "மகாராஜாவே, 'ஆகாய நிறத்தை தேகத்தில் பூசிக்கொள்பவனுக்கே என் மகள்' என்று முன்னர் பத்மாட்சன் சொன்னது இப்போது பலித்துவிட்டது. ஆகாய நிறம் கொண்ட தங்கள் திருக்குமாரரே சீதாதேவியின் மணாளனாகிறார்" என்று கூறினார். இவ்வரலாற்றை ஆனந்த ராமாயணம் மூலம் அறிகிறோம். பார்வதிதேவி ஈசனிடம் ஸ்ரீராம சரிதத்தைக் கூறுமாறு கேட்க, அவர் மனமுவந்து கூறி அருளியதே ஸ்ரீ ஆனந்த ராமாயணம்.

## துர்க்கை வழிபாட்டில்

# தேசிக்காய் விளக்கின் தத்துவம்

துர்க்கைக்குரிய விஷேட பூஜை வழிபாடுகள் ராகுகாலத்தில் செய்யப்படும் பூஜை அதி உன்னதமானது. இந்தப் பூஜையை பௌர்ணமி அட்டமி, வெள்ளி, செவ்வாய்க் கிழமைகளில் செய்ய வேண்டும். ராகு, கேது கால சர்ப்ப தோஷமுடையவரும் செவ்வாய் தோஷம், மாங்கல்ய தோஷம், உடையவரும், திருமணம் தடைப்படுகின்ற கன்னிப் பெண்களும் ராகுகால நேரத்தில் துர்க்கையை வழிபட்டால் சகல தோஷமும் நீங்கப்பெற்று நல்வாழ்வு கிடைக்கப் பெறுவார்கள்.

| | | |
|---|---|---|
| தேசிக்காய் | - | நமது உடல் |
| அறுத்தல் | | மனதிலுள்ள தீய சிந்தனைகளை அறுத்தல் |
| சாறு | - | களைகளை அகற்றுதல், காம, குரோத, லோப, மோக, மத, மாச்சர்யம் ஆகிய தீய குணங்களை அகற்றுதல். |
| நெய் | - | நற்குணங்களுடன் கூடிய ஆர்வம் |
| திரி | - | ஆணவம், கன்மம், மாயையை முறுக்கி திரியாக்கி சுடர் - ஞானம் என்னும் ஒளியை உண்டாக்குதல். |

ராகு கால நேரத்தில் ராகுகால தேவனின் அதிதேவதையான ஸ்ரீ துர்க்கையை பக்தி சிரத்தையுடன் விரதமிருந்து தியானித்து தூப தீப ஆராதனை செய்து குங்குமத்தால் அஷ்டோத்திர சத நாமம் (108) சொல்லி அர்ச்சனை செய்து வந்தால் சகல தோஷங்களும் நீங்கப்பெற்று நல்வாழ்வு பெறுவார்கள் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகத்தில் தன்னம்பிக்கை இல்லாதவர்கள் என்று யாராவது இருக்கிறார்களா? இல்லையா?

இது என்ன கேள்வி, லட்சியத்தில் தோற்பவர்கள் பலரும் தன்னம்பிக்கை இல்லாததால்தானே வெற்றியை நழுவ விடுகிறார்கள்? என்று உங்களில் பலர் கேட்கலாம்.

தன்னம்பிக்கை இல்லாதவர்கள் என்று யாருமே இந்த உலகத்தில் கிடையாது. ஆச்சரியமாக இருக்கிறதா? ஒரு சின்ன உதாரணம் சொல்கிறேன். ஒவ்வொரு நாளும் இரவு தூங்கப் போகிறீர்களா? அப்போது, தூங்கச் செல்கிற நாம் விழித்து எழுவோமா? மாட்டோமா? என்ற கேள்வி ஒருவருக்கு எழுந்தால், அவர் நிம்மதியாக தூங்குவாரா? நிச்சயம் மாட்டார் அல்லவா? அப்படியானால் ஏதோ ஒரு நம்பிக்கை அவருக்கு இருக்கிறது என்றுதானே அர்த்தம்?

சரி அது வேண்டாம். படித்து முடித்துவிட்டு வேலை தேடுகிறீர்கள். அந்த சமயத்தில் குறிப்பிட்ட ஒரு வேலைக்கு, முன்பின் தெரியாத நிறுவனத்தில் விண்ணப்பிக்கும்போது, அங்கே பணி கிடைக்க வேண்டும் என்றுதானே எதிர்பார்ப்பீர்கள்? அதை எந்த நம்பிக்கையில் செய்கிறீர்கள்? 'என் திறமைக்கு கண்டிப்பாக வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை!' என்று அவசரமாகச் சொல்லாதீர்கள். நான் கேட்பது வேறொரு விஷயத்தை. அதாவது அந்த நிறுவனத்தில் பணி கிடைத்தால், எந்தமாதிரியான பொறுப்புகளைத் தருவார்கள்? அவற்றை எப்படிச் செய்வது? நம்மால் அதையெல்லாம் செய்ய முடியுமா? முடியாதா? அனுபவம் பெறும்வரை உடன் இருப்பவர்கள் ஆலோசனை சொல்வார்களா, மாட்டார்களா? பணிச் சுமையை நம்மீதே திணிப்பார்களா? இப்படியெல்லாம் எதையாவது யோசிப்பீர்களா? நிச்சயம் மாட்டீர்கள். ஏனென்றால், வேலை கிடைத்து விட்டால், அங்கே சென்று பணியாற்றும்போது எல்லாம் சாதகமாகவே அமையும். அனைத்தையும் சரியாக செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கை ஏற்கனவே உங்களுக்குள் ஆழமாகப் பதிந்திருக்கும். இப்படிப்பட்ட நம்பிக்கைகள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்குமே ஏதாவது ஒருவிதத்தில் நிச்சயம் இருக்கும்.

அந்த நம்பிக்கை ஆழமாக மனதில் பதிந்திருந்தால், வேர்விட்டு வளரும். மேலோட்டமாகப் பதிந்திருந்தால், சந்தேகம் என்கிற புயல் அடிக்கும் சமயத்தில் ஆழ்மனதிலிருந்து விழுந்துவிடும். சந்தேகம் என்கிற புயல் மனதில் வீசாமல் தடுப்பது எப்படி என்று தெரிந்து கொண்டாலே, தன்னம்பிக்கைச் செடியை உறுதியாக வளர்க்கலாம்.

சந்தேகம் என்ற புயலைத் தடுப்பதற்கான வழிகளும் முதலாவது, எந்த ஒன்றையும் தெளிவாகத் தெரிந்து கொள்வதுதான். நீச்சலும் தெரியும், படகும் இருக்கிறது. சாதாரண ஏரி, குளம் இவற்றில் பலமுறை படகு செலுத்தி, நீச்சலடித்து இருக்கிறீர்கள். அந்த அனுபவத்தை மட்டும் வைத்துக் கொண்டு, கடலுக்குள் படகு விடலாமா? நீச்சல் அடிக்கலாமா? என்றால் நிச்சயம் முடியாது. அதற்கு கடலில் அலைகள், ஆழம், வேகம், நீரின் அழுத்தம் என்று ஏராளமான விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும். அதன்பிறகு அனுபவம் மிக்கவர்கள் வழிகாட்டல் வேண்டும். எல்லாவற்றையும் தெளிவாகத் தெரிந்து கொண்ட பிறகுதான், தன்னம்பிக்கை என்ற துடுப்பு உங்களுக்குக் கிடைக்கும். அதன்பிறகே நீங்கள் கடலுக்குள் இறங்க வேண்டும்.

இங்கே கடலைப்பற்றி தெரிந்து கொள்வதைப் போன்றதுதான் எந்த லட்சியமும். முதலில் உங்கள் லட்சியம் என்ன என்பதில் உறுதியாக இருங்கள். அது, ஆழ்மனதில் தன்னம்பிக்கைக்கு விதைபோடுவது போன்றது. லட்சியத்தில் ஜெயித்தபிறகு எப்படிச் செயல்பட வேண்டும் என்பதை முன்கூட்டியே திட்டமிடுங்கள். இது தன்னம்பிக்கைச் செடிக்கு தண்ணீர் விடுவது போலானது.

லட்சியப் பாதையில் எந்தெந்த மாதிரியெல்லாம் தடைகள் வரலாம், வந்தால் சமாளிப்பது எப்படி என்பதை உங்களால் முடிந்தவரை முன்கூட்டியே திட்டமிட்டு வையுங்கள். இது தன்னம்பிக்கைக்கு எதிரியான எதிரமறை எண்ணம் என்ற களையை எடுப்பதற்கு சமமானது.


எந்த ஒரு விஷயத்தையும் மற்றவர் எப்படிச் செய்தார் என்பதோடு ஒப்பிட்டு உங்களால் முடியுமா? முடியாதா? என்று தீர்மானிக்காமல், குறிப்பிட்ட செயலை நீங்கள் எப்படிச் செய்வீர்கள் என்று மனதிற்குள் திட்டமிட்டு செயல்படுத்துங்கள். இது தன்னம்பிக்கைச் செடிக்கு உரம் இடுவது போன்றது.

தன்னம்பிக்கைக்கு முதல் எதிரி சந்தேகம் என்று சொன்னேன் அல்லவா? சந்தேகம் தோன்ற முதன்மையான காரணம், எதிர்மறை எண்ணம்தான். ஒரு செயலை நீங்கள் தொடங்கும்போதே, அதை நிச்சயம் செய்து முடிக்க இயலும் என்று நம்புங்கள். அப்படி இல்லாமல் அதில் தோற்றவர்களைப்பற்றி யோசித்துக் கொண்டு இருக்காதீர்கள்.

விறகு வெட்டிகள் இரண்டுபேர் காட்டில் விறகுவெட்டிக் கொண்டிருந்தார்கள். ஒருவன் தினமும் நிறைய விறகு சேகரித்தான். அடுத்தவனால் எவ்வளவோ முயன்றும் முதலாமவனில் பாதியளவுகூட சேகரிக்க முடியவில்லை.

தினம்தினம் இப்படியே நடந்தது. ஒருநாள் இரண்டாமவன் மற்றவனிடம், "நண்பா, நாம் இருவரும் ஒரே நேரத்தில்தான் இங்கே வருகிறோம். ஒரே அளவு நேரம்தான் விறகுகளை வெட்டுகிறோம். இருவரும் ஒரே அளவு நேரம் ஓய்வெடுக்கிறோம். அப்புறம் எப்படி உன்னால் மட்டும் இவ்வளவு விறகு வெட்ட முடிகிறது?" என்று கேட்டான்.

"நீ சொன்னது எல்லாம் சரிதான். ஆனால், ஓய்வெடுக்கும் சமயத்தில் நான் கோடரியைக் கூர்தீட்டிக் கொள்கிறேன். நீ அப்படிச் செய்வதில்லை! அதுதான் காரணம்!" பதில் சொன்னான், முதலாமவன். அப்படித்தான். எல்லோருக்குள்ளும் நம்பிக்கை எனும் விதை ஊன்றப்பட்டு இருக்கிறது. லட்சியப்பாதையில் செல்லும் வழியில் ஓய்வு கிடைக்கும் சமயத்தில் எல்லாம், அதனோடு உள்ள களைகளை எடுத்து, நீர்விட்டு, உரமிட்டு யார் வளர்க்கிறார் களோ அவர்களே பலனைப் பெறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரத்தின் ஒவ்வொரு நாளும் நல்ல நாளே.

அவரவர் தேவைக்கேற்ப குறிப்பிட்ட கிழமையில் விரதமிருந்து பலன் பெறலாம் என்பது ஐதிகம். எந்தக்கிழமை என்ன விரதம் இருப்பது சிறப்பு?

**ஞாயிற்றுக் கிழமை விரதம்:**
புத்திர பாக்கியம் பெற விரும்புவோர் அனுசரிக்க வேண்டிய விரத தினம். அதிகாலையில் எழுந்து நீராடி, சூரியன் உதயமாகும்போது வணங்க வேண்டும். சிவன் கோயிலுக்குச் சென்று, செந்தாமரை மலர்களால் அர்ச்சனை செய்து, வெண் பொங்கல் நிவேதனம் செய்ய வேண்டும். ஏழைகளுக்கு இயன்ற அளவு கோதுமையை தானமாகத் தர வேண்டும்.

**திங்கட்கிழமை விரதம்:**
அதிகாலையில் நீராடி, மஞ்சள் நிற ஆடை அணிந்து, சிவன் கோயிலுக்குச் சென்று சிவபெருமானையும், பார்வதி தேவியையும் செவ்வரளி மலர்களால் அர்ச்சித்து, சர்க்கரைப் பொங்கல் நிவேதித்து வழிபட வேண்டும். மாலையில் விஷ்ணு கோவிலுக்குச் சென்று, துளசியால் அர்ச்சனை செய்து பக்தியோடு வணங்க வேண்டும். இவ் விரதம் மேற்கொள்வதால், கணவன், மனைவியிடையே ஒற்றுமை நிலவும்.

**செவ்வாய்க்கிழமை விரதம்:**
அதிகாலையில் நீராடி, சிவப்பு நிற ஆடைகளை அணிந்து, அம்பிகையின் ஆலயத்துக்குச் சென்று செம்பக மலர்களால் அர்ச்சனை செய்து, செந்நிறக்கனிகளை நிவேதனம் செய்து பூஜிக்க வேண்டும். ஏழைகளுக்கு துவரை தானியத்தை தானமாக வழங்க வேண்டும். செவ்வாய் தோஷமுள்ள பெண்கள் காலையில் அம்மனையும், மாலையில் முருகனையும் வழிபட்டால் தோஷம் நீங்கும்.

**புதன்கிழமை விரதம்:**
மகாவிஷ்ணுவின் அருளைப் பெற மேற்கொள்ளப்படும் விரதமிது. அதிகாலையில் நீராடி, பச்சை நிற ஆடை அணிந்து, பெருமாளுக்கு வெண்காந்தள் மாலை சூட்ட வேண்டும். பச்சைப் பயறு கலந்த சர்க்கரைப் பொங்கல், பழம், பொரி, கடலை இவற்றை நிவேதித்து ஆராதனை செய்ய வேண்டும். இதனால், தனம், கல்வி, ஞானம் பெருகும்.

**வியாழக்கிழமை விரதம்:**
அதிகாலையில் தட்சிணாமூர்த்தியை வழிபட்டு, கொண்டைக் கடலை நிவேதித்து பிரார்த்திக்க வேண்டும். நவகிரக வியாழ பகவானையும் வழிபட வேண்டும். இதனால் குடும்ப வாழ்வில் நிம்மதியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

**வெள்ளிக்கிழமை விரதம்:**
வெளிர் நீலநிற ஆடை உடுத்தி, இஷ்ட தெய்வத்தை வணங்க வேண்டும். அம்மனுக்கு வெண்தாமரை மலர்களால் அர்ச்சனை செய்து பொரி, கடலை, பழம், தேங்காய் ஆகியவற்றை நிவேதனம் செய்து வணங்க வேண்டும். இவ்விரதம் மேற்கொள்வதால், வாழ்க்கையில் செல்வச் செழிப்பு ஏற்படும்.

**சனிக்கிழமை விரதம்:**
சனிக்கிழமை அதிகாலையில் நீராடி, பட்டு வஸ்திரம் அணிந்து வடக்கு நோக்கி அமர்ந்து சனீசுவர பகவானை தியானிக்க வேண்டும். பகலில் எள்ளு சாதமும், தயிர் சாதமும் மட்டுமே சாப்பிட வேண்டும். மாலையில் எள்ளை துணியில் கட்டி, நல்லெண்ணெய் தீபம் ஏற்ற வேண்டும். இவ்விரதமிருப்பதால், ஆரோக்யமான இன்ப வாழ்வு அமையும்.

## தினமும் ஒரு விரதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்த்தமுள்ள இந்துமதம்

## மனிதாபிமானம்

'சக்தியும் சிவனும், அர்த்தநாரீஸ்வரர் கோலத்தில் பாதியாக இருக்கிறார்களே, அவர்களது மீதிப் பாதி எங்கே போயிற்று' என்று விநாயகப் பெருமானை யாரோ கேட்டார்களாம். அதற்கு விநாயகர், 'சிவத்தின் பாதிதான் உலகத்தில் ஆண்களாகவும், சக்தியின் பாதிதான் உலகத்தில் பெண்களாகவும் அவதரிக்கிறார்கள்' என்றாராம்.

இப்படி ஒரு கதை நான் படித்தேன்.

'தெய்வம் மனுஷ ரூபயனா' என்பது வடமொழி சுலோகம்.
ஒவ்வொரு மனிதனும் பரமனின் அணுவில் தோன்றியவனே!
ஒவ்வொரு பெண்ணும் சக்தியின் அணுவில் பிறந்தவளே!
அதனாலேதான், பிறக்கும்போது குழந்தை வஞ்சகம், சூது, கள்ளம், கபடு அறியாததாக இருக்கிறது.
தெய்வீக அணுவின் அடையாளச் சின்னமே குழந்தை. ஒவ்வொரு குழந்தையும் தெய்வமாகவே அவதரிக்கிறது! பிறகு ஏன், சில குழந்தைகள் திருடர்களாகவும், சில குழந்தைகள் அறிஞர்களாகவும் வளர்கின்றன. இறைவன் உலகத்தில் உணர்ச்சிக்களத்தை உருவாக்க விரும்புகிறான். உலகத்தை இயக்க விரும்புகிறான். எல்லாக் குழந்தைகளும் பிறந்த போது இருந்தது போலவே வளரும் போதும் இருந்துவிட்டால், உலக வாழ்க்கைக்கு அர்த்தம் இல்லாமற் போய்விடும். மோதல்கள் இல்லை என்றால், உண்மை என்ற ஒன்று அறியப்படாமற் போய்விடும். 'நிழலருமை வெய்யிலிலே நின்றறிமின்' என்றார்கள். நிழலை உணர வெயில் தேவை. மழையை உணர வரட்சி தேவை. மனிதாபிமானத்தை உணர மிருகத்தனம் தேவை. தெய்வீகத்தை உணர மனிதர்கள் தேவை.

உமையும் மகேஸ்வரனும் படைத்த ஆண் பெண்கள் மூன்று வகையாக உருப்பெறுகிறார்கள். மிருகம், மனிதன், தெய்வம்.

கேவலமான உணர்வுக்கும், உயர்ந்த உணர்வுக்கும் நடுவே சராசரி மனிதன் நிற்கிறான். மிருகத்தைப் பார்க்கும்போது, மனிதாபிமானத்தின் மீது பற்று வருகிறது.

மனிதனைப் பார்க்கும்போது, தெய்வம் தேவைப்படுகிறது. எல்லோருமே தெய்வங்களாகிவிட்டால், தெய்வத் தத்துவம் செத்துப்போகும். எல்லோருமே மிருகங்களாகிவிட்டால், தெய்வமே பயனற்றுப் போகும்.

நடுவே நிற்கும் மனிதனே, உலக இயக்கத்தின் பிதாவாகிறான். அவனைப் பார்த்தே தெய்வங்களும், மிருகங்களும் உணரப்படுகின்றன. அதனால்தான் மிருகத்திற்கும் தெய்வத்திற்கும் நடுவே உள்ள மனிதனிடம் ஒரு அபிமானத்தை வளர்க்க இந்துமதம் முயற்சி எடுத்தது.

இதன் பெயரே மனிதாபிமானம்!
இதிகாசங்களில் வருகிறார்கள் மனிதர்கள்தான். ராமன் என்ற மனிதன் தன் நடத்தையால் தெய்வமானான். இராவணன் என்ற மனிதன் தன் நடத்தையால் மிருகமானான். பாண்டவர்கள் தெய்வமானார்கள். கௌரவர்கள் மிருகமானார்கள்.

மனிதனுக்கு மனிதன் அபிமானத்தை வளர்த்தால் மனிதன் உள்ளத்திற்குள்ளேயே தெய்வம் தோன்றி விடுகிறது. மனத்தைக் 'கோயில்' என்கிறார்கள், அதில் அமர்த்தப்படும் தெய்வமே மனிதாபிமானம்.

**-கவிஞர் கண்ணதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகா கற்றுக்கொள்ளுங்கள்

## மஹா முத்ரா



மஹா என்றால் பெரிய அல்லது உயர்ந்த. முத்ரா என்றால் மூடுதல். இந்த ஆசனத்தில் உடலில் மேல்பகுதியும் கீழ்ப்பகுதியும் மூடப்படுகின்றன.

* தரையில் உட்கார்ந்து கால்களை நீட்டவும்.
* இடது முழங்காலை வளைத்து வலது தொடைக்கு அருகே கொண்டு வர வேண்டும். இடது காலும் வலது காலும் 90 டிகிரி கோணத்தில் இருக்க வேண்டும்.
* கைகளை முன்னால் நீட்டி இரண்டு கைவிரல்களாலும் வலது கால் கட்டை விரலை கெட்டியாகப் பிடிக்கவும்.
* தலையை வளைத்து மார்பை தாடை தொடும்படி வரவும்
* முதுகை நேராக வைக்கவும்.
* மூச்சை முழுக்க இழுக்கவும். வயிற்றுப்பகுதியைச் சுருக்கி உள்ளுக்குள் நன்றாக இழுக்கவும்.
* சிறிது நேரம் கழித்து ரிலாக்ஸ் ஆகி மூச்சை வெளிவிட்டு மறுபடியும் இழுக்கவும். மேற்சொன்னபடி வயிற்றுப் பகுதியைத் தீவிரமாக இறுக்கவும். இந்நிலையில் ஒன்றிலிருந்து மூன்று நிமிடம் வரை இருக்க வேண்டும்.
* ரிலாக்ஸ் ஆகி அடுத்த பக்கமும் இதே போல் செய்யவும்.

**பலன்கள்:**

வயிற்றுப்பகுதி உறுப்புகள், சிறுநீரகங்கள், அட்ரினல் சுரப்பிகள் பயிற்சி பெறுகின்றன. கருப்பைப் பிதுக்கம் (Prolapsed womb) உள்ள பெரியவர்களுக்கு கர்ப்பப்பை இருக்க வேண்டிய இடத்துக்கு வருகிறது. புராஸ்டேட் சுரப்பி விரிவடைந்த பிரச்சனை உள்ள ஆண்களுக்கும் இந்த ஆசனம் பலன் கொடுக்கும்.


தொடரும்

உண்மையின் பாதையில் செல்பவனுக்கு, உபதேசம் தேவையில்லை. எல்லா நற்குணங்களும் அவனை தேடி வரும்.

வேரிலிருந்து மரமும், அதிலிருந்து கிளைகளும் வருவது போல, அடக்கத்திலிருந்து தர்மமும், அதிலிருந்து நற்பண்புகளும் வருகின்றன.

பாடசாலை மாணவ, மாணவிகளுக்கான ஆன்மிக கேள்வி-பதில் போட்டி!

PETER STORES
FASHIONABLE HOUSE FOR QUALITY TEXTILES
201, Galle Road, Wellawatte.
Tel : 2586066



பழைய வழக்கத்தில் கோலங்களின் மீது வைக்கும் பூ எது?

* செம்பருத்தி பூ
* தாமரை பூ
* பரங்கிப்பூ

1st Dec-17th Dec
Call Monday-Friday
From 9am - 5pm

Call Now & Win School Uniform

FLEX Publications - 0778 335 552

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூச்சரம்





## தண்ணீர்

குடிக்க தண்ணீர் கொடுப்பதன் காரணம் முன்பெல்லாம் யார் வீட்டிற்கு வந்தாலும் குடிக்க தண்ணீர் கொடுக்க சொல்வார்கள் நமது முன்னோர்கள். புதிதாக வருபவர் தெரிந்தவராக இருந்தாலும், குடிக்க தண்ணீர் கொடுத்த பின்பே மற்ற விஷயங்கள் பேசுவது மற்றும் அவருக்கு சாப்பிட ஏதாவது கொடுப்பது போன்ற நடைமுறை இருந்தது.

இவ்வாறு வருபவர்களுக்கு முதலில் தண்ணீர் கொடுப்பதற்கு மிகச் சிறந்த காரணங்கள் உள்ளது. தண்ணீருக்கு மனிதர்களின் மனநிலையை மாற்றும் அற்புத சக்தி இருக்கிறது

ஒரு மனிதன் கோப தாபத்தையும், வெறுப்புணர்ச்சியையும் மாற்றும் ஆற்றல் தண்ணீருக்கு உள்ளது. ஏதாவது சண்டை சச்சரவு வரும்போது ஒருவரையொருவர் ஏச்சுப் பேச்சு நடத்தும் போது அவர்களை விலக்க வருபவர் முதல்ல தண்ணி குடிப்பா அப்புறம் பேசலாம்" என்று கூறுவார். சண்டையிடும் நபர் தண்ணீர் குடித்ததும் தனது பேச்சில் ஒரு வித சாந்தம் வெளிப்படும். இதன் அடிப்படையில்தான் வீட்டிற்கு வருபவர்களுக்கு தண்ணீர் கொடுக்கும் பழக்கத்தை நமது முன்னோர் உருவாக்கி வைத்தனர் வீட்டிற்கு வருபவரின் மனநிலை எதுவாக இருந்தாலும் சரி தண்ணீரை குடித்தால் இந்த கெட்ட தாக்கத்தின் பாதிப்பு இல்லத்தை பாதிக்காது.



## சிங்கம்

காட்டில் வாழும் சிங்கம் ஒரு போதும் மற்ற விலங்குகளிடம் போய் நான் ஒரு சிங்கம் என்னை மதியுங்கள் என்று கேட்பதில்லை. அது தன் இயல்பில் தனது கம்பீரத்தில் தனது வலிமையில் தான் யார் எனக் காட்டிக் கொள்கிறது. சிங்கம் மதிக்கப்படுவதற்குக் காரணம் அது தனித்து செயல்படுவதே ஆகும்.



## சிரிப்பு

சார்லி சாப்ளின் ஒருமுறை பலரும் நிறைந்த சபையில் ஒரு ஜோக் சொன்னார்.. சபையே சிரிப்பாய் அதிர்ந்தது. கொஞ்ச நேரம் கழித்து அதே ஜோக்கை மறுபடியும் கூற அங்கொன்றும் இங்கொன்றும் மட்டுமே சிரித்தனர். நான்காம் முறை கூற சபையில் நிசப்தம் நில வியது..! இப்போது சார்லி சாப்ளின் கேட்டாராம்,ஒரே ஜோக்கிற்கு மறுபடியும் மறுபடியும் சிரிக்காத "நாம் ஏன் ஒரே கவலையை நினைத்து மறுபடி மறுபடி அழுகிறோம்" என்று..!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# WINDOW DECOR
TEXTILES

- Curtaining
- Furnishing
- Bed Linen

We provide you with a personalized service of undertaking orders.

**Hotline: 0112 590 455**

#246, Galle Road, Wellawatte, Colombo 6. (Opposite to Laughfs Supermarket)

Tel: 0112 506968 | Mob: 0777 321 958

E: windowdecor123@gmail.com W: www.windowdecorlk.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# PRASANNA

## MONEY EXCHANGE (PVT) LTD








No. 57, Galle Road, Colombo 06.

**Tel : 2 591 420, 2 591 421**

**Mobile: 077 948 4211 / 077 406 5484**

Fax : 2 504108

Email : prasannaexchange@gmail.com

Money changer Permit No. ECD/MC/0058 A

***Parking Available***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Study, Work & Live in CANADA



## Admission Interviews

By Founder Donatus Doss of Canadian College

CANADIAN COLLEGE FOR HIGHER STUDIES

விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி

### Available Courses

- IT Programmes
- Business Programes
- Supply Chain & Logistics Management

Date : 12th December 2018

Time : 10.00am to 2.00pm

Venue : 4, IBC Road, Colombo 6.

Call : 0777 761 346

# Study in EUROPE

Switzerland

Spain

**Without IELTS**

Intake: Feb. 2019

# Study in SINGAPORE

- Lowest Tuition Fee
- No IELTS
- No Bank Balance
- Min. Qualification O/L

**Learn & Earn**

Rs. 90,000 per month

During the internship

**Visa in 14 Days**

விசாவின் பின் பணம் செலுத்தும் வசதி

# Study in AUSTRALIA

Intake: January 2019

## வெள்ளவத்தையில் சகல நாடுகளுக்குமான

## ONLINE VISA APPLICATION

USA, CANADA, UK, DENMARK, NORWAY, SWISS, FRANCE, GERMANY, AUSTRALIA.

* Rejected Visa * Special Occasions * Family & Friends Visit * Business * Tourist * Student

flex Institute

Step Towards a Bright Future

**Hotline: 0777-761346**

4, IBC Road, Colombo 6. Tel: 011 2364157

E-mail: flexinstitute04@gmail.com

Web: www.flexinstitute.lk Facebook: Flex Institute

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமதேவர்

-யோகா

பண்டரிபுரத்தில் தாமா செட்டி என்பவர் தையற்கடை வைத்து நடத்தி வந்தார். அவர் பண்டரிநாதனாகிய விட்டலரிடம் மாறாத பக்தி பூண்டவர்.
அவர் தினமும் விட்டலர் ஆலயத்துக்குச் சென்று தம் மனைவி கோனே தயாரித்த உணவை நிவேதனம் செய்துவிட்டு வருவார். அதன் பிறகே அவர்கள் உணவருந்துவார்கள். அவர்களுக்கு ஒரே மகன் நாமதேவன்.





ஒரு சமயம் தாமா செட்டி வெளியூர் போக வேண்டியிருந்தது. அப்போது அவர், பாண்டுரங்கனுக்கு அமுது படைப்பது தடைப்படக் கூடாது என்று நினைத்தார்.





தாமா செட்டி ஊருக்குப் போய்விட்டார் கோனே தன் மகன் நாமதேவனிடம் அமுது தயாரித்து அனுப்பினாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முத்திரை சாஸ்திரம்

## ஹார்ட் அட்டாக்கிலிருந்து மீட்கும்
## அபான வாயு முத்திரை

ஆள்காட்டி விரல் கட்டைவிரலின் அடியிலும், நடுவிரல் நுனியும் மோதிர விரல் நுனியும் கட்டை விரலின் நுனியைத் தொட்டபடி இருப்பதும்தான் அபான வாயு முத்திரை!

இந்த முத்திரையில் ஆள்காட்டி விரல் காற்றைக் குறிக்கிறது. நடுவிரல் ஆகாயத்தையும், மோதிர விரல் மண்ணையும் குறிக்கிறது. கட்டை விரலானது நெருப்பைக் குறிக்கிறது. இப்படி முத்திரை வைத்துக்கொள்ளும்போது ஆகாயம், மண் என்ற மூலப்பொருட்களின் சக்தி அதிகரிக்கிறது. காற்று, நெருப்பு ஆகிய மூலப்பொருட்களின் சக்தி குறைகிறது.

இதய பாதிப்புகளுக்கு மிகப்பெரிய சமய சஞ்சீவனியான இந்த முத்திரைக்கு மனிதர்களை மரணத்தின் பிடியிலிருந்தே மீட்டு வரக்கூடிய சக்தி உண்டு. அதனால்தான் இது, 'மிருத் சஞ்சீவனி முத்ரா' என்றும் அழைக்கப்படுகிறது. இதய பாதிப்பு ஏற்பட்டவர்கள் இம்முத்திரையை வைத்துக் கொள்ளலாம். இதில் ஆகாயத்தின் சக்தி அதிகரிப்பதால் இதய ரத்தக் குழாய்களின் அடைப்புகள் நீங்குகின்றன. நச்சுப் பொருட்கள் வெளியேற்றப்படுகின்றன. ஆகாயம் என்பது பரந்த வெளி. இதன் சக்தி அதிகமாகும்போது, நெருப்பு, காற்று, நீர் போன்ற மற்ற மூலகங்களும் வேலை செய்ய இடமளிக்கிறது.

உடலில் வெற்றிடத்தின் பரப்பளவு அதிகமாகும் போது மற்ற உறுப்புகளின் திறனும் அதிகரிக்கிறது. மண்ணின் சக்தி அதிகமாவதால் உடல் வலிமை அதிகமாகிறது. வாயுவின் சக்தி குறைவதால் மனம் உடல் அமைதி அடைகின்றன.

அபான வாயு முத்திரையின் பயன்கள்:

* இதயத்தில் 'கரோனரி ஆர்ட்டரி' யில் உள்ள அடைப்புகள் நீங்கி 'அஞ்சைனா' வலி (நெஞ்சுவலி) குறைகிறது.

* இதயத்தின் அதிகபடியான துடிப்பைக் குறைக்கிறது.

* ஆகாயத்தின் சக்தி அதிகரிப்பதால் இதயத்தின் ரத்தக்குழாய்கள் விரிவடைந்து உயர் ரத்த அழுத்தம் சீராகிறது.


* தலைவலி, பல் வலி, வயிற்று வலி, முதுகு வலி, மூட்டு வலி, குதிகால் வலி போன்ற பல்வேறு வலிகளை இந்த முத்திரை குணப்படுத்தும்.

* சிறுநீர் அடைப்பு நீங்கி, சிறுநீர் தடையில்லாமல் வெளியேற இது உதவு கிறது.

* வியர்வைத் துவாரங்களில் உள்ள அடைப்புகளும் நீங்கி வியர்வை நன்றாக வெளி வருகிறது.

* பெருங்குடலில் ஆங்காங்கே வாயு தங்கு வதால், மலம் வெளிவர முடியாமல் மலச்சிக்கல் உண்டாகிறது. இந்த முத்திரை வாயுவைக் குறைத்து மலச்சிக்கலைத் தீர்க்கிறது. மலச்சிக்கல் தீர்வதால் ஆசனவாய் பிரச்சனைகளான மூலம், பவுத்திரம் போன்ற நோய்களும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து மறைகின்றன.

* 'ஹார்ட் அட்டாக்' எனப்படும் மாரடைப்பு ஏற்படும்போது வைத்துக் கொள்ளக்கூடிய மிகச் சிறந்த முத்திரை இது. 'ஹார்ட் அட்டாக்' வந்தவுடன் இம்முத்திரையை வைத்துக் கொண்டால் மரணத்தின் பிடியிலிருந்து மீண்டு வரலாம்.




தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷீரடி சாய்பாபா





அன்புக் குழந்தையே! பொறுக்க முடியாத அவதியும் அதையொட்டி உன் மனதில் எழுகின்ற கோணல் சிந்தனைகளும் உயிரை மாய்த்துக்கொள்ள நினைக்கும் எண்ணமும் என்னை மனவருத்தமடைய செய்கின்றன. உனது துக்க குப்பைகளை மூட்டைகட்டி தூர போட்டுவிடு எனது பாதங்களை பற்றிக்கொள். நான் அனைவருக்கும் கருணைமயமான அன்னை என்பதையும் ஒரே ஒரு முறை கூவி அழைத்தாலும் ஓடி வந்து அணைத்து உச்சிமுகரும் தாய் என்பதையும் மறந்து விடாதே.

உனக்கு என்ன தேவை என்பதை நான் முற்றிலும் நினைவில் வைத்திருக்கிறேன். உன்னை துன்பச் சேற்றில் மூழ்கிவிட ஒருக்காலும் சம்மதிக்க மாட்டேன். உனது துக்கம் நிச்சயமாகவே மகிழ்ச்சியாக மாறும் உனது வாழ்க்கை சீர்படும் காலம் விரைவில் வரும். இதற்கு முன்னால் நீ கடந்துவந்த கடினமான பாதைகளை சற்று நினைத்துப்பார் அதிலெல்லாம் உன்னைத் தூக்கி சுமந்து காப்பாற்றி வந்தேன். இனியும் அப்படியே உன்னை. காப்பாற்றுவேன். உனக்குச் சோ தனையாக தெரிகிற இந்த காலத்தை மனதில் வைத்துக் கொள்ளாதே. எனது அற்புதங்கள் இனி உன் வாழ்வில் நிகழ்வதற்காக ஏற்பட்டுள்ள ஒரு வழிதான் இந்த சோதனைகள். வாழ்க்கையில் சலிப்பும் வெறுப்பும் கொள்ளா தே. மனம் புண்ணாகி போனதே என வருந்தாதே. இதோ என் மென்மையான கரங்களால் உன்னை வருடிக்கொண்டு உன் பக்கத்தில் தான் நான் உனக்காக இருக்கிறேன். மிக விரைவில் உன்னை பொன்னாக்கும் நாள் வந்துகொண்டிரு க்கிறது. என் பார்வை என்றும் உன் மீதே அதனால் எல்லாம் நல்லதே நடக்கிறது. ஒரு கஷ்டமான நிலைமையைச் சந்திக்கும் போது மனம் உடைந்து போகவேண்டாம். பொறுமை யுடன் என்ன நடக்கிறது என்பதைக் கவனித்த வண்ணம் இருங்கள். ஏனெனில், என்னுடைய பக்தர்களை எப்படியாவது காப்பாற்றுவதே என்னுடைய கடமையாகும். தீவிர நம்பிக்கையும் பொறுமையும் உடையவர்கள், எனக்கு மிகவும் நெருக்கமாகவே இருப்பார்கள். எல்லாச் சுமைகளையும் என்னிடம் தந்து விட்டு தைரியமாக போய்க்கொண்டேயிரு. வருத்த த்தை விட்டு பொறுமையாக, உனக்கான இலக்கை நோக்கி போய்கொண்டே இரு. உனக்குத் துணையாக நான் என்றும் எங்கும் இருப்பேன்.


நீ நடக்கும் பாதையில் முட்கள் இருந்தால் நானே முன் சென்று, முன்பாகவே களைந்துவிடுவேன்! எதையும் பொருட்படுத்தா மல் உன் இலக்கை நோக்கி போய்க்கொண்டே இரு. நீ போகும் பாதையில் மிக மோசமான மிருகங்கள் வரலாம் மோசமான மனிதர்கள் வரலாம். எதைக்கண்டும் அஞ்சாதே! தைரியமாக உன் இலக்கை நோக்கி போய்க்கொண்டே இரு. நான் அவர்களைத் தூக்கி வீசி பந்தாடுவேன். சாது மிரண்டால் காடு கொள்ளாது என்பதை நீ அவர்களுக்குக் காட்டும் தருணம் வந்துவிட்டது, உன் இலக்கை நோக்கி போய் கொண்டே இரு, எல்லாம் நான் பார்த்துக் கொள்வேன் வெற்றி நிச்சயம்.


*திருமதி. சாய்சஷிலா - சிங்கப்பூர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மார்கழி ஸ்பெஷல் கோலங்கள்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பிரச்சினைகளைக் கண்டு பயப்படாதீர்கள்!

**உங்களுக்குத் தரப்படுவதை பெற்றுக்கொள்ள நீங்கள் தயாராக இருக்கிறீர்களா?**

மாதக் கடைசி... செலவுக்கே மல்லுக்கட்டும் உங்களுக்கு ஒரு கோடி ரூபாய் தருகிறார் ஒருவர். நீங்கள் உடனடியாக அதை வாங்கிக் கொள்வீர்களா, மாட்டீர்களா?

பலரும் விழிவிரிய, 'கண்டிப்பாக வாங்கிக் கொள்வோம்!' என்று சொன்னாலும் நிஜத்தில் அப்படித் தரப்பட்டால், வாங்கிக் கொள்வதற்குப் பலரும் தயங்குவார்கள் என்பதுதான் நிஜம்.

ஏன் தெரியுமா? அவ்வளவு பணம் வரும்போது என்னென்ன பிரச்சினைகளையும் உடன் கொண்டு வருமோ, அதையெல்லாம் எப்படி சமாளிப்பது என்றுதான்.

உங்களுக்குத் தெரியுமா? எந்த விதமான உயர்வாக இருந்தாலும் அதில் ஏதாவது ஒரு கஷ்டமான விஷயம் ஒளிந்துகொண்டுதான் இருக்கும். சாமர்த்தியமாக அதனைச் சமாளிப்பவர் தான் வெற்றிபெற முடியும்.

ஒரு உதாரணம் சொல்கிறேன்.

அலுவலகம் ஒன்றில் சாதாரண குமாஸ்தாவாக பணிபுரிகிறார் ஒருவர். தனக்கு மேலுள்ள அதிகாரிகளும், அலுவலர்களும் தன்னை வேலை வாங்கும்போதெல்லாம் நமக்கும் இவர்களைப் போல உயர்வான பதவி கிடைக்காதா என்று மனதுக்குள் ஏங்குவார். அவரது ஏக்கம் தீரும் நாள் வந்தது. கம்பெனியின் முதலாளி அவரை அழைத்து, "நாளை முதல் நீ இந்த அலுவலகத்தின் மேனேஜர்...!" என்று சொல்லி பதவியும் பொறுப்பும் தருகிறார். சந்தோஷமாக அந்தப் பொறுப்பினை ஏற்க வேண்டிய குமாஸ்தா தயங்குகிறார். உரிமையாளர் காரணம் கேட்க, "வேண்டாம் சார்.. எனக்கு ரொம்ப பயமா இருக்கு... அவ்வளவு பெரிய பொறுப்பை என்னால சரியா செய்ய முடியுமான்னு தெரியலை..!" என்று தவிக்கிறார்.

கொஞ்சம் யோசித்துப் பாருங்கள், பெரிதாக ஏதாவது கிடைக்காதா என்று ஏங்குவதும், அப்படிக் கிடைத்துவிட்டால் அதனை ஏற்கத் தயங்குவதும் உங்களில் பலருக்கும் இருக்கிறதா? இல்லையா?

இப்படி ஒரு பயம் வரக் காரணம் என்ன தெரியுமா? உங்கள் ஆழ்மனம் குறுகியதாக இருப்பதுதான்.

உங்களுக்குத் தெரியுமா? எதையும் ஏற்கத் தயாராக இருப்பவர்கள், பிரச்னைகளை எதிர்கொண்டு ஜெயிக்க முடியும் என்று நம்புபவர்கள் தான் வாழ்வில் உயரத்திற்குச் செல்கிறார்கள்.

இது நம்மால் முடியுமா? அதைச் செய்ய இயலுமா? என்று தயங்குபவர்கள் ஒருபோதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி பெறுவதில்லை.

மான் ஒன்றினால் சிங்கத்தை எதிர்கொள்ள முடியுமா? என்று உங்களிடம் கேட்டால் என்ன சொல்வீர்கள்? முடியவே முடியாது என்றுதானே? ஆனால், மான் ஒன்று சிங்கத்தை ஓடஓட விரட்டிய கதை உங்களுக்குத் தெரியுமா?

அடர்த்தியான பெரிய காடு அது. விலங்குகள், பறவைகள், பாம்புகள், பூச்சிகள் என்று ஏராளமான உயிரினங்கள் இருந்தன அங்கே. அவற்றுள் அழகான பெண்மான் ஒன்றும் இருந்தது. அதிலும் குறிப்பாக அது தாய்மை அடைந்திருந்தது. ஒருநாள் இரவு நேரம். மழை வேகமாகத் தூறிக் கொண்டிருந்தது. சிங்கம் ஒன்றின் குகை அருகே சென்று கொண்டிருந்த அதற்கு, அந்த நேரம்பார்த்து பிரசவ வேதனை ஏற்பட்டது.

குட்டிகள் பிறக்கும்போதே மழையில் நனைந்தால் அவற்றுக்கு உடல்நல பாதிப்பு நேரிடலாம். என்ன செய்வது? தயங்கித் தவித்த மான், வேறுவழியில்லாமல் மெதுவாக குகைக்குள் எட்டிப் பாரத்தது.

அதன் அதிர்ஷ்டம், சிங்கம் எங்கோ வெளியே சென்றிருந்தது. அவசர அவசரமாக உள்ளே சென்ற மான், அழகான இரு குட்டிகளை ஈன்றது. அசதியில் தூங்கிய மான் விழித்த நேரத்தில் விடியல் வெளிச்சம் குகைக்குள் பரவத் தொடங்கியிருந்தது. அந்த ஒளியில் சிங்கத்தின் நிழல் தெரிய, ஆபத்தை உணர்ந்தது மான்.

சிங்கம் குகை வாசலுக்கு வந்துவிட்டது. உள்ளே நுழைந்துவிட்டால் அவ்வளவுதான். சட்டென சுதாரித்துக் கொண்ட மான், தன் குட்டிகளை எழுப்பியது. “சிங்கத்தின் மாமிசம் வேண்டும்..!” என்று உரத்த குரலில் கேட்டு அழச் சொன்னது. சிங்கத்தையே பார்த்திராத குட்டிகள், அம்மா சொன்ன படியே அழுதன.

அவற்றை சமாதானம் செய்வதுபோல் மான் பேசியது. “அழாதீர்கள் குழந்தைகளே.. இந்த குகைக்குச் சொந்தமான சிங்கம் எப்படியும் இங்கே வந்துவிடும். அதற்கு நாம் உள்ளே இருப்பது தெரியாது. குகைக்குள் நுழைந்ததும் அதனை உங்களுக்கு இரையாக்கி விடுகிறேன்..!” மான் சொன்னது சிங்கத்தின் காதில் விழுந்தது. தன்னைவிடப் பெரிய விலங்கு எதோ இருக்கிறது. அதனிடம் சிக்கிவிடக் கூடாது என்று பயந்து ஓடியது.

மான் நிம்மதியாகப் பெருமூச்சு விட ஆரம்பித்தபோது, சிங்கம் ஓடுவதைப் பார்த்தது ஒரு நரி. பிரசவிப்பதற்காக மான் குகைக்குள் நுழைந்ததைப் பார்த்திருந்த அது, குகைக்குள் மான்தான் இருக்கிறது என்று சிங்கத்திடம் சொன்னது.

அரைகுறையாக அதனை நம்பிய சிங்கம், தன் வாலுடன் நரியின் வாலை சேர்த்துக் கட்டிக் கொண்டு மறுபடியும் குகை வாசலுக்கு வந்தது. இப்போதும் அதைப் பார்த்துவிட்ட மான், “குழந்தைகளே.. உங்கள் பசி தீரப் போகிறது... நரி மாமன், சொன்னபடியே ஒரு சிங்கத்தை வாலில் கட்டி இழுத்து வந்துவிட்டார்..!” என்று உரத்த குரலில் சொன்னது. அவ்வளவுதான். உயிர் பிழைத்தால் போதும் என்று சிங்கம் ஓட, அதன் இழுப்புக்கு ஈடுதர முடியாத நரி இறந்து போனது.

குட்டிகள் வளரும் வரை நிம்மதியாக அதே குகையில் இருந்தது மான். இந்தக் கதை சொல்வது என்ன தெரியுமா? பிரச்னை எவ்வளவு பெரிதாக இருந்தாலும் பயப்படாமல் எதிர்கொள்பவர்களே வெற்றி பெறுகிறார்கள் என்பதைத்தான்.


**பிரச்சினைகளை எதிர்கொள்பவர்களே வெல்கிறார்கள்!**

# விக்கிரகம்




**விக்கிரகம் ஸ்ரீ வி + கிரகம் (வி ஸ்ரீ மேலான, கிரகம் ஸ்ரீ உறைவிடம்) அதாவது மேலான உறைவிடம் என்னும் பொழுது இறைவன் சிறப்பாக உறையுமிடமென்று பொருள்படும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org














Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தஞ்சை பெரிய கோவிலை தந்த ராஜ ராஜ சோழன்



பதவியேற்ற நாள் முதல் தொடர்ந்து போரில் ஈடுபட்ட சோழமன்னர் ராஜராஜருக்கு சலிப்பு வந்தது. அவருக்குள் இருந்த சிவபக்தி வேறுவிதமாக சிந்தித்தது. சந்திர, சூரியர் உள்ள வரை உலகில் புகழ் நிலைக்க திருப்பணி செய்ய விரும்பியது.

ஏழுபனை உயரத்திற்கு பெரிய கோயில் கட்ட முடிவு செய்தார். சாத்தியமில்லை என அனைவரும் மறுத்தனர். கோயில் பணியில் ஈடுபட்டால் நிர்வாகத்தில் குளறுபடி ஏற்படும் என இளவரசர் ராஜேந்திரனும் தயங்கினார்.

இந்நிலையில் ராஜராஜரின் மனதில் 'திருப்பணி செய்வது சிவனின் எண்ணம்: அதனால் அவனே முன்நின்று முடித்து வைப்பான்' என்ற எண்ணம் எழுந்தது. பெருந்தச்சரான குஞ்சரமல்லர் மன்னரின் எண்ணத்தை ஓவியமாக்கினார். அதைப் பார்த்தவர்கள் அதன் பிரம்மாண்டத்தை எண்ணி ஆச்சரியப்பட்டனர். இக்கோயிலால் சோழநாடு மங்காதப் புகழுக்குச் சொந்தமாகும் என மகிழச்சி ஏற்பட்டது. சிற்பிகளும், அடிமைகளும் தஞ்சையில் குவிக்கப்பட்டனர். கல் எடுக்க நார்த்தாமலை தேர்வு செய்யப்பட்டது. கற்களைச் சுமந்துவர காளை மாடுகள், குதிரைகள், யானைகள் வரவழைக்கப்பட்டன. ஏழாண்டுகளில் கோயில் முழுவடிவம் பெற்றது. கோபுரம் பெரிதாகவும், கருவறை விமானம் சிறிதாகவும் கட்டுவது மரபு. ஆனால் இங்கு கோபுரத்தை விட பெரிதாக விமானம் ஏழுபனை உயரத்திற்கு கட்டப்பட்டது. அதாவது 210 அடி. இந்த உயரத்திற்கு கற்களை கொண்டு செல்ல கருவறையைச் சுற்றிலும் மண்ணால் வளைவாக பாதைகள் அமைக்கப்பட்டன.


கட்டடக்கலை அசுரவளர்ச்சி பெற்றுள்ள இக்காலத்திலும் கூட தஞ்சைப் பெரியகோயில் பெரிய அதிசயமாகவே உள்ளது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொழில்நுட்ப வசதி இல்லாத காலத்தில் போக்குவரத்து எப்படி நடந்திருக்கும், யார், என்னென்ன வேலைகள் செய்திருப்பார்கள் என்பதை சிந்தித்தால் தலை சுற்றும். இறுதியில் மாமன்னர் ராஜராஜ சோழரின் திருவடியில் சரணடையும்.

கோயில் கட்டியதும் அதற்காக உழைத்த ஒவ்வொருவரின் பெயரும் கல்வெட்டில் பொறிக்க உத்தரவிட்டார் மன்னர். ஆனால் சாதனை படைத்த அவரோ, 'இக்கோயிலை கட்டியவன் நான் இல்லை, சிவன் தான் கட்டினான்' என தலைக்கனம் இன்றி சிவனை அடிபணிந்தார். இதனால் 'சிவபாத சேகரன்' என பெயர் பெற்றார்.

மக்கள் அவரை ராஜராஜராக எப்போதோ அங்கீகரித்தாலும், சிவன் அங்கீகரித்தது இந்த இடத்தில் தான். காரணம் எல்லாம் எனை ஆளும் சிவன் செயல் என உணர்ந்து பணிவுடன் இருந்தார் அல்லவா... அது போல மாறி விட்டால் நீங்களும் 'ராஜராஜர்' தான்!

**1003-1004 ஆம் ஆண்டு தொடங்கி 1010ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட தஞ்சைப் பெரிய கோயிலின் தற்போதைய வயது 1008 ஆண்டுகள். மந்திர உச்சரிப்பில் 1008 என்பது மிகவும் சக்திவாய்ந்ததாக கருதப்படுகிறது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகாபெரியவரின் நகைச்சுவை

காஞ்சிப் பெரியவர் தம் சீடர் ஒருவரைப் பார்த்து, "சந்தியா வந்தனம் ஆச்சா? சுக்லாம் பரதரம் ஆச்சா?" என்று கேட்டார். சீடரும், 'ஆச்சு' என்று தலையசைத்தார்.

அதற்கு பெரியவர், 'சுக்லாம் பரதரம் சொன்னாயான்னு நான் கேட்கலை... ஆச்சான்னு தான் கேட்டேன்" என்றார்.

சீடர் ஒன்றும் புரியாமல் குழம்பினார்.
பெரியவர் சீடரிடம், "சுக்லாம் பரதரம் சொல்லு பார்ப்போம்" என்றார்.

**"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் பிரசன்ன வதனம் த்யாயேத் சர்வ விக்னோப சாந்தயே"**

என்று சீடர் சொன்னார்.

பெரியவர், "இதற்கு அர்த்தம் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியும்" என்று பதிலளித்த சீடர், "வெள்ளை உள்ளம், யானையின் கருப்பு நிறம், நான்கு கரங்கள், பிரகாசமான முகம், எல்லோரையும் நினைக்கச் செய்யும் உருவம் ஆகியவற்றைக் கொண்ட விநாயகரை நினைத்தால் எல்லா தடைகளும் கவலைகளும் நீங்கும்," என்றார்.

"இதற்கு வேறொரு அர்த்தமும் இருக்கு... அது உனக்குத் தெரியுமா? என்று சொல்லி சிரித்தார்.

"சுக்லம்" என்றால் 'வெள்ளை'... அதாவது பால், "விஷ்ணும்" என்றால் 'கருப்பு' அதாவது 'டிக்காஷன்', "சசிவர்ணம" என்றால் கருப்பும், வெள்ளையும் கலந்தது... அதாவது காபி, "சதுர்புஜம்" என்றால் நான்கு கை. அதாவது மாமியோட இரு கைகளால் காபியைக் கொடுக்க, மாமாவின் இரு கைகள் அதைப் பெற்றுக் கொள்ளும். "த்யாயேத்" என்றால் நினைத்தல். அதாவது இப்படி காபி கொடுப்பதை மனதில் நினைப்பது. 'பிரசன்ன வதனம்' என்றால் 'மலர்ந்த முகம்' அதாவது காபியை மனதில் நினைத்ததும், மாமாவின் முகம் மலர்ந்து விடும். "சர்வ விக்னோப சாந்தயே" என்றால் 'எல்லா கவலையும் நீங்குதல்'. அதாவது காபி குடித்தால் கவலை நீங்கி மனம் சாந்தமாகி விடும்.

"சுக்லாம் பரதரம் ஆச்சா?" என்பதில் 'காப்பி குடிச்சாச்சா' என்பதும் அடங்கியிருக்கிறது என்று தெரிந்து கொண்ட சீடர்கள் தங்களை மறந்து சிரித்தனர்.

காஞ்சிப்புரத்திலுள்ள காஞ்சிப் பெரியவர் 100 அடி ஸ்தூபி மண்டபத்தில் உள்ள சாமவேத பாடசாலை அத்யாபகராக உள்ள சந்திரமவுலி ஸரௌதிகள், இதை அடிக்கடி சொல்லி கவலை தீரச் சிரிப்பார். இவர் சிறு வயது முதல் பெரியவரிடம் சீடராக இருப்பவர் என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவநெறி
## வினா விடை தொகுப்பு – தரம் 8

### திருநாவுக்கரசு நாயனார்.

#### நாவுக்கரசரின் அற்புதங்கள்

**01. நாவுக்கரசர் ஏன் பல்லவ மன்னனால் அழைக்கப்பட்டார்.**

சமண சமயத்தை இகழ்ந்து, சைவ சமயத்தில் நாவுக்கரசர் சேர்ந்து விட்டாரெனச் சமணர்கள் கூறியதால் மன்னனால் அழைக்கப்பட்டார்.

**02. பல்லவ மன்னனின் அழைப்பிற்குப் போக மறுத்த நாவுக்கரசர் பாடிய தேவாரம் என்ன?**

"நாமார்க்கும் குடியல்லோம்..." என்ற திருத்தாண்டகம் பாடிப் போக மறுத்தார்.

**03. நாவுக்கரசர் மீண்டும் ஏன் பல்லவ மன்னனிடம் செல்ல எண்ணினார்?**

நாவுக்கரசரின் திருவடிகளில் மன்னரின் அமைச்சர் பல முறை விழுந்து வரும்படி இரந்து கேட்டதால் மன்னனிடம் சென்றார்.

**04. நாவுக்கரசர் நீற்றறையில் எத்தனை நாள் அடைக்கப்பட்டார்? அப்போது பாடிய தேவாரம் என்ன?**

ஏழு நாட்கள் அடைக்கப்பட்டார். "மாசில் வீணையும் மாலை மதியமும்" என்ற திருப்பதிகமாகும்.

**05. நஞ்சு கலந்த பாற்சோறு ஏன் நாவுக்கரசருக்குக் கொடுக்கப்பட்டது?**

அவரைக் கொல்வதற்காகக் கொடுக்கப்பட்டது.

**06. "சுண்ணவெண் சந்தனச் சாந்தும்..." என்ற தேவாரம் பாடப்பட்ட சந்தர்ப்பம் யாது?**

நீற்றறையில் எரியாது, நஞ்சினால் மடியாது இருந்த நாவுக்கரசரைப் பட்டத்து யானையை விட்டு ஏவிக் கொல்ல முற்பட்ட போது பாடப்பட்டது. யானை அவரைக் கொல்லாது விலகிச் சென்றது.

**07. "சொற்றுணை வேதியன்" என்னும் நமசிவாயத் திருப்பதிகம் பாடப்பட்ட சந்தர்ப்பம் என்ன?**

சமணர்கள் அரசனிடம் சென்று எம்மிடம் கற்ற மந்திர தந்திரங்களால் தருமசேனன் பிழைத்துக் கொண்டான்.

எனவே அவனைக் கல்லில் கட்டி கடலில் போட வேண்டும் எனக் கூறிக் கடலில் இடப்பட்டபோது பாடப்பட்டது.

**08. கல்லிற் கட்டிக் கடலில் நாவுக்கரசர் இடப்பட்ட போது என்ன நிகழ்ந்தது?**

கல் தெப்பமாக மாறி மிதந்தது. அவர் திருப்பாதிரிப்புலியூரைச் சென்றடைந்தார். பல்லவ மன்னன் மன்னிப்புக் கேட்டுச் சைவனானான். சமணப் பள்ளிகளை அகற்றினான். தன்பெயரோடு இணையக் "குணதர வீச்சரம்" என்னும் சிவாலயத்தைத் தாபித்தான்.

**09. திருநாவுக்கரசு சுவாமிகள் செய்த அற்புதங்களைத் தருக?**

- நீற்றறையில் அடைக்கப்பட்டு உயிர் பிழைத்தார். (மாசில் வீணையும்)
- நஞ்சூட்டியபோது இறவாது தப்பினார்.
- பட்டத்து யானையைக் கொண்டு ஏவி அவரைக் கொல்ல முயற்சித்தும் எதுவும் இன்றிக் காப்பாற்றப்பட்டார். ("சுண்ணவெண் சந்தனச் சாந்தும்")
- கல்லில் கட்டிக் கடலில் விடப்பட்டபோது, கல் தெப்பமாக மாறி உயிர் பிழைத்தார். ("சொற்றுணை வேதியன்")
- சூலைநோயைத் தேவாரம் பாடித் தீர்த்தார். ("கூற்றாயினவாறு")
- சூல, இடப இலச்சனைகள் பொறிக்கப்பட்டார். ("பொன்னார் திருவடிக் கொன்றுண்டு")
- பாம்பு கடித்த அப்பூதி அடிகளாரின் மூத்த புத்திரனை உயிர்ப்பித்தார். ("ஒன்று கொலா மவர் சிந்தை")
- மறைத்து வைக்கப்பட்டிருந்த சிவலிங்கத்தை வெளிக் கொணர்ந்தார்.
- சிவபெருமானிடம் பொதிசோறு பெற்றார்.
- இறைவனின் கைலாயத் திருக்கோலத்தை நேரே கண்டு தரிசித்தார்.
- திருவீழிமிழலையில் படிக்காசு பெற்றார்.
- திருமறைக்காட்டுக் கதவு திறக்கச் செய்தார். ("பண்ணினேர் மொழியாள்...")

தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறள் தெளிவு



## கல்வி

**01. கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.**

**பொருள்:** கற்கத் தகுதியான நூல்களைப் பழுதில்லாமல் கற்க வேண்டும். அவ்வாறு கற்றபிறகு கற்ற கல்வியின் தகுதிக்குத் தகுந்தபடி நடக்கவும் வேண்டும்.

**02. எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.**

**பொருள்:** 'எண்' என்று சொல்லப்படுவதும், 'எழுத்து' என்று சொல்லப்படுவதும் ஆகிய இவை இரண்டும் இவ்வுலகில் வாழும் மக்களுக்குக் 'கண்' என்று கூறுவர்.

**03. கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.**

**பொருள்:** 'கண்' உடையவர் என்று உயர்வாகக் கூறப்படுபவர் கற்றவரே, கல்லாதவர் தம் முகத்தில் இரண்டு 'புண்' உடையவர் ஆவர்.

**04. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.**

**பொருள்:** எல்லோரும் மகிழும் வகையில் கூடியிருந்து பழகி 'இனி என்று மீண்டும் கூடுவோம்' என்று வருந்தி நினைக்கும் படியாகப் பிரிதல் புலவரின் தொழிலாகும்.

**05. உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.**

**பொருள்:** செல்வர் முன் உதவி கோரும் எளியவர் பணிந்து நிற்பது போல், ஆசிரியரிடம் பணிந்து நின்று கற்றவரே சிறந்தவர், கல்லாதவர் இழிந்தவர்.

**06. தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு.**

**பொருள்:** மணலில் தோண்டும் கிணற்றில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறும், அதுபோல மாந்தருக்கும் அவரவர் முயன்று கற்பதன் அளவுக்கே அறிவும் ஊறிச் சுரக்கும்.

**07. யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.**

**பொருள்:** கற்றவருக்குத் தன் நாடும் ஊரும் போலவே வேறு எதுவாயினும் நாடாகும், ஊராகும், ஆகையால், ஒருவன் சாகும் வரையில் கல்லாமல் காலங்கழிப்பது ஏன்?

**08. ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து**

**பொருள்:** ஒரு பிறப்பில் தான் கற்ற கல்வி அப்பிறப்பிற்கு மட்டும் அல்லாமல் ஒருவனுக்கு ஏழுபிறப்பிலும் உதவும் தன்மையுடையது ஆகும்.

**09. தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.**

**பொருள்:** தாம் இன்பம் அடைவதற்குக் காரணமான கல்வியால் உலகமும் இன்புறுவதைக் கண்டு, கற்றறிந்த அறிஞர் மேன்மேலும் அக் கல்வியையே விரும்புவர்.

**10. கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.**

**பொருள்:** ஒருவருக்கு 'அழிவில்லாத சிறந்த செல்வம்' என்பது கல்விச் செல்வமே, கல்வி தவிர மற்ற பொருட் செல்வங்கள் எல்லாம் அழியக்கூடியவையாகையால் அவை சிறப்புடைய செல்வம் ஆகா.

தொடரும்

### இடைவெளியை நிரப்புங்கள்!

1. ஆண்டாள் அருளியது

| | | | | |
|---|---|---|---|---|
| தி | | ப் | | வை |

2. கண்ணன் நர்த்தனம்

| | | | |
|---|---|---|---|
| | ளி | | க |

3. தங்கம், வெள்ளி, செம்பு, வெண்கலம், பித்தளை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ப | | ச | | க | |

4. மார்கழி ஸ்பெஷல்

| | | |
|---|---|---|
| | ல | |

5. ஐயப்ப பக்தர்கள் விரதமிருந்து செல்வது


| | | | | |
|---|---|---|---|---|
| ச | | ரி | | லை |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வையகம்!
வாழ்க வளமுடன்!!

# பொருள் ஈட்ட மட்டுமா கல்வி?





இயற்கை வளங்கள் உலகம் முழுவதும் நிரம்ப இருக்கின்றன. கற்கால மனிதனின் அறிவைவிட, மனிதனுடைய அறிவு விஞ்ஞான வளர்ச்சியால் நுட்பத்திலும், திறமையிலும் மேலோங்கியுள்ளது. எனினும் மனித குல வாழ்வில் துன்பங்கள், சிக்கல்கள், பகை, போர், பிணக்கு இவையே நாளுக்கு நாள் பெருகிக் கொண்டேயிருக்கின்றன. நம் முன்னோர்கள் உணர்த்திக் காட்டிய அறநெறி வளராததே இன்றைய பல சிக்கல்களுக்குக் காரணம். "மனிதன் எந்த அளவு அறிவைப் பெருக்குகின்றானோ, அந்த அளவு அற நெஞ்சத்தை வளர்த்துக் கொள்ள வில்லையெனில், அந்த அறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத்தில் போய் முடியும்" என்ற பேறறிஞர் பெட்ரண்டு ரஸ்ஸலின் கூற்று இன்று முழுக்க முழுக்க உண்மையாகிவிட்டது.

அண்மைக் காலத்தில், பொருளை ஈட்டுவதற்கான வல்லமையைத் தரவல்லதே கல்வி என்ற தடம்புரண்ட எண்ணத்தினால், ஒரு தொழில் முறையைப் போதிப்பதற்கு நாம் எடுத்துக் கொள்கிற முயற்சியாகக் கல்வியை மாற்றி விட்டோம். பண்பாடில்லாத மனிதர்களை உருவாக்குகிற தொழிற்சாலைகளாக நமது கல்விச் சாலைகள் மாறி வருகின்றன. எத்தகைய கல்வி நல்ல ஒழுக்கத்தை உருவாக்குமோ, மன வல்லமையை வளர்க்கச் செய்யுமோ, விரிந்த அறிவைத் தருமோ, அத்தகைய கல்வி தான் நமக்குத் தேவை. முழுமையான கல்வி என்பது நுண்ணறிவுப் பயிற்சியோடு மனத்தூய்மையையும், ஆன்மீக நெறிகளையும் கற்பிப்பதாக இருக்க வேண்டும். அந்தக்கல்வி தான் நேர்மை, எளிமை, பொறுமை, உண்மை, அன்பு கொண்ட ஒரு சிறந்த சமுதாயத்தை உருவாக்க முடியும். இதுவே உண்மையான அறவியல் கல்வி.

*தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ சமையல்



# மார்கழி ஸ்பெஷல்

# உளுந்தோரை

## தேவையான பொருட்கள்:

| | | |
|---|---|---|
| உளுந்து | - | அரை கப், |
| அரிசி | - | ஒரு கப், |
| காய்ந்த மிளகாய் | - | 3, |
| மிளகு | - | 4, |
| நெய் | - | ஒரு டேபிள் ஸ்பூன், |
| கறிவேப்பிலை | - | ஒரு டேபிள் ஸ்பூன் |
| வேர்க்கடலை | - | ஒரு டேபிள் ஸ்பூன் |
| கடுகு | - | ஒரு டேபிள் ஸ்பூன் |
| உப்பு | - | தேவையான அளவு. |

## செய்முறை:

அரிசியை உதிர் உதிரான சாதமாக வடித்துக் கொள்ளவும். உளுந்து, காய்ந்த மிளகாய், மிளகு ஆகியவற்றை வெறும் வாணலியில் வறுத்து, பொடித்து வைக்கவும். கடாயில் நெய் விட்டு, கடுகு, வேர்க்கடலை, கறிவேப்பிலை தாளித்து, உளுந்து பொடியையும், சாதத்தையும் சேர்த்து, உப்பு சேர்த்துக் கலந்து இறக்கவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரி...சிரி...சிரி..சிரிப்பு.



"இவ்வளவு டவலை" எடுத்துக்கிட்டு உங்க வீட்டுக்காரம்மா எங்க போறாங்க?"

"டி.வி. சீரியலைப் பார்க்கத்தான்!"



"ரெய்டுல உங்ககிட்ட என்ன கேட்டாங்க தலைவரே?"

"இவ்வளவு ரெண்டாயிரம் ரூபா நோட்டு வெச்சிருக்கீங்களே... எப்படி சில்லறை மாத்துவீங்க?"னு



"சர்வர்! நேத்து போட்ட பரோட்டாவை சூடாக்கி வச்சிருக்கியே நியாயமா?

"டைரக்டர் சார்! நீங்க மட்டும் "ஐம்பது வருஷத்துக்கு முந்துன படத்தை ரீ-மேக் பண்ணி ரிலீஸ் பண்ணலாமா?"



"தன்னைத் தனியா விட்டுட்டு, எல்லோரும் போயிட்டாங்களேன்னு தலைவர் செம கடுப்பில் இருக்கிறார்."

"கட்சியில் இருந்தா?"

"இல்லை...வாட்ஸ்அப் குருப்பில் இருந்து"



"ஏண்டா வீட்டுப்பாடம் செய்துட்டு வரலை?"

"யார் எதைச் சொன்னாலும் அப்படியே செய்யக்கூடாது.. யோசிச்சுத் தான் செய்யனும்னு நீங்கதானே சார் நேத்து பாடம் நடத்தும் போது சொன்னீங்க!"



"டாக்டர்! மூச்சு விட சிரமமா இருக்கு!"

"பயப்படாதீங்க... நிறுத்திடறேன்!"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சாங்கம்

| டிசம்பர் | | கார்த்திகை | | | |
|---|---|---|---|---|---|
| 01 | சனி | 15 | ராகு 9.14 - 10.44<br>சுப 3.14 - 4.44<br>எம 1.44 - 3.14<br>குளி 6.14 - 7.44 | தே.பி: நவமி மா 5.54 பூரம் சித்தம் கா 7.18 உத்தரம் பி.இ 6.03 | |
| 02 | ஞாயிறு | 16 | ராகு 4.45 - 6.15<br>சுப 9.15 - 10.45<br>எம 12.15 - 1.45<br>குளி 3.15 - 4.45 | தே.பி: தசமி பி.ப 4.09 அத்தம் பி.இ 5.10 அமிர்தசித்தம் | |
| 03 | திங்கள் | 17 | ராகு 7.45 - 9.15<br>சுப 12.15 - 1.45<br>எம 10.45 - 12.15<br>குளி 1.45 - 3.15 | தே.பி: ஏகாதசி பி.ப 2.43 சித்திரை பி.இ 4.35 சித்தாமிர்தம் கரிநாள் | ஏகாதசி விரதம் |
| 04 | செவ்வாய் | 18 | ராகு 3.15 - 4.45<br>சுப 10.45 - 12.15<br>எம 9.15 - 10.45<br>குளி 12.15 - 1.45 | தே.பி: துவாதசி பி.ப 1.40 சுவாதி சித்தம் பி.இ 4.27 | பிரதோஷ விரதம் |
| 05 | புதன் | 19 | ராகு 12.16 - 1.46<br>சுப 4.46 - 6.16<br>எம 7.46 - 9.16<br>குளி 10.46 - 12.16 | தே.பி: திரயோதசி பி.ப 1.07 விசாகம் பி.இ 4.48 சித்தாமிர்தம் | |
| 06 | வியாழன் | 20 | ராகு 1.47 - 3.17<br>சுப 7.47 - 9.17<br>எம 6.17 - 7.47<br>குளி 9.17 - 10.47 | தே.பி: சதுர்த்தசி பி.ப 1.02 அனுசம் பி.இ 5.37 சித்தம் | அமாவாசை விரதம் |
| 07 | வெள்ளி | 21 | ராகு 10.47 - 12.17<br>சுப 6.17 - 7.47<br>எம 3.17 - 4.47<br>குளி 7.47 - 9.17 | வ.பி: அமாவாசை பி.ப 1.28 கேட்டை முழுவதும் மரண | |
| 08 | சனி | 22 | ராகு 9.17 - 10.47<br>சுப 3.17 - 4.47<br>எம 1.47 - 3.17<br>குளி 6.17 - 7.47 | வ.பி: பிரதமை பி.ப 2.26 கேட்டை கா 6.58 சித்தம் | |
| 09 | ஞாயிறு | 23 | ராகு 4.48 - 6.18<br>சுப 9.18 - 10.48<br>எம 12.18 - 1.48<br>குளி 3.18 - 4.48 | வ.பி: துதியை பி.ப 3.50 மூலம் மு.ப 8.45 அமிர்தசித்தம் | |
| 10 | திங்கள் | 24 | ராகு 7.49 - 9.19<br>சுப 12.19 - 1.49<br>எம 10.49 - 12.19<br>குளி 1.49 - 3.19 | வ.பி: திருதியை பி.ப 5.38 பூராடம் சித்தம் மு.ப 10.57 | |
| 11 | செவ்வாய் | 25 | ராகு 3.19 - 4.49<br>சுப 10.49 - 12.19<br>எம 9.19 - 10.49<br>குளி 12.19 - 1.49 | வ.பி: சதுர்த்தசி மு.இ 7.39 உத்தராடம் பி.ப 1.22 சித்தம் | சதுர்த்தி விரதம் |
| 12 | புதன் | 26 | ராகு 12.20 - 1.50<br>சுப 4.50 - 6.20<br>எம 7.50 - 9.20<br>குளி 10.50 - 12.20 | வ.பி: பஞ்சமி மு.இ 9.48 திருவோணம் சித்தம் பி.ப 3.57 | |
| 13 | வியாழன் | 27 | ராகு 1.50 - 3.20<br>சுப 7.50 - 9.20<br>எம 6.20 - 7.50<br>குளி 9.20 - 10.50 | வ.பி: ஷஷ்டி மு.இ 11.52 அவிட்டம் சித்தம் மு.இ 6.29 | விநாயகஷஷ்டி விரதம் திருவெம்பாவை பூஜாரம்பம் |
| 14 | வெள்ளி | 28 | ராகு 10.51 - 12.21<br>சுப 6.21 - 7.51<br>எம 3.21 - 4.51<br>குளி 7.51 - 9.21 | வ.பி: ஸப்தமி பி.இ 1.42 சதயம் மு.இ 8.50 சித்தம் | |
| 15 | சனி | 29 | ராகு 9.21 - 10.51<br>சுப 3.21 - 4.51<br>எம 1.51 - 3.21<br>குளி 6.21 - 7.51 | வ.பி: அட்டமி பி.இ 3.14 பூரட்டாதி மரண மு.இ 10.52 | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| டிசம்பர் | | மார்கழி | | | |
|---|---|---|---|---|---|
| 16 | ஞாயிறு | 01 | ராகு 4.52 - 6.22<br>சுப 9.22 -10.52<br>எம 12.22 - 1.52<br>குளி 3.22 - 4.52 | வ.பி: நவமி பி.இ 4.12 உத்தரட்டாதி பி.இ 12.32 அமிர்தம் | |
| 17 | திங்கள் | 02 | ராகு 7.52 - 9.22<br>சுப 12.22 - 1.52<br>எம 10.52 -12.22<br>குளி 1.52 - 3.22 | வ.பி: தசமி பி.இ 4.46 ரேவதி பி.இ 1.42 சித்தம் | |
| 18 | செவ்வாய் | 03 | ராகு 3.23 - 4.53<br>சுப 10.53 -12.23<br>எம 9.23 -10.53<br>குளி 12.23 - 1.53 | வ.பி: ஏகாதசி பி.இ 4.50 அச்சுவினி பி.இ 2.24 அமிர்தசித்தம் | சுவர்க்க வாயிலேகாதசி விரதம் |
| 19 | புதன் | 04 | ராகு 12.23 - 1.53<br>சுப 4.53 - 6.23<br>எம 7.53 - 9.23<br>குளி 10.53 -12.23 | வ.பி: துவாதசி பி.இ 4.21 பரணி பி.இ 2.34 சித்தாமிர்தம் | |
| 20 | வியாழன் | 05 | ராகு 1.54 - 3.24<br>சுப 7.54 - 9.24<br>எம 6.24 - 7.54<br>குளி 9.24 -10.54 | வ.பி: திரயோதசி பி.இ 3.26 கார்த்திகை பி.இ 2.17 மரண | பிரதோஷ விரதம் கார்த்திகை விரதம் |
| 21 | வெள்ளி | 06 | ராகு 10.54 -12.24<br>சுப 6.24 - 7.54<br>எம 3.24 - 4.54<br>குளி 7.54 - 9.24 | வ.பி: சதுர்த்தசி பி.இ 2.05 ரோகிணி மரண பி.இ 1.36 கரிநாள் | |
| 22 | சனி | 07 | ராகு 9.25 -10.55<br>சுப 3.25 - 4.55<br>எம 1.55 - 3.25<br>குளி 6.25 - 7.55 | பூரணை பி.இ 12.23 மிருகசீரிடம் பி.இ 12.35 சித்தம் | பூரணை விரதம் |
| 23 | ஞாயிறு | 08 | ராகு 4.55 - 6.25<br>சுப 9.25 -10.55<br>எம 12.25 - 1.55<br>குளி 3.25 - 4.55 | தே.பி: பிரதமை மு.இ 10.26 திருவாதிரை மு.இ 11.17 சித்தம் | |
| 24 | திங்கள் | 09 | ராகு 7.56 - 9.26<br>சுப 12.26 - 1.56<br>எம 10.56 -12.26<br>குளி 1.56 - 3.26 | தே.பி: துதியை மு.இ 8.18 புநர்பூசம் மு.இ 9.48 அமிர்தசித்தம், கரிநாள் | |
| 25 | செவ்வாய் | 10 | ராகு 3.26 - 4.56<br>சுப 10.56 -12.26<br>எம 9.26 -10.56<br>குளி 12.26 - 1.56 | தே.பி: திருதியை மா 6.01 பூசம் மு.இ 8.13 சித்தம் | சங்கடஹரசதுர்த்தி |
| 26 | புதன் | 11 | ராகு 12.27 - 1.57<br>சுப 4.57 - 6.27<br>எம 7.57 - 9.27<br>குளி 10.57 -12.27 | தே.பி: சதுர்த்தி பி.ப 3.44 ஆயிலியம் மு.இ 6.36 சித்தம், கரிநாள் | |
| 27 | வியாழன் | 12 | ராகு 1.57 - 3.27<br>சுப 7.57 - 9.27<br>எம 6.27 - 7.57<br>குளி 9.27 -10.57 | தே.பி: பஞ்சமி பி.ப 1.27 மகம் பி.ப 5.01 அமிர்தசித்தம் | |
| 28 | வெள்ளி | 13 | ராகு 10.58 -12.28<br>சுப 6.28 - 7.58<br>எம 3.28 - 4.58<br>குளி 7.58 - 9.28 | தே.பி: ஷஷ்டி மு.ப 11.18 பூரம் பி.ப 3.34 சித்தம் | |
| 29 | சனி | 14 | ராகு 9.28 -10.58<br>சுப 3.28 - 4.58<br>எம 1.58 - 3.28<br>குளி 6.28 - 7.58 | தே.பி: ஸ்பதமி மு.ப 9.18 உத்தரம் பி.ப 2.17 மரண | |
| 30 | ஞாயிறு | 15 | ராகு 4.59 - 6.29<br>சுப 9.29 -10.59<br>எம 12.29 - 1.59<br>குளி 3.29 - 4.59 | தே.பி: அட்டமி கா 7.33 நவமி பி.இ 6.09 அத்தம் பி.ப 1.18 அமிர்தசித்தம் | |
| 31 | திங்கள் | 16 | ராகு 7.59 - 9.29<br>சுப 12.29 - 1.59<br>எம 10.59 -12.29<br>குளி 1.59 - 3.29 | தே.பி: தசமி பி.இ 5.10 சித்திரை பி.ப 12.38 சித்தாமிர்ம். | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான விரதங்கள்

(டிசம்பர் - கார்த்திகை/ மார்கழி)



| டிசம்பர் | கார்த்திகை | | |
|---|---|---|---|
| 03 | 17 | திங்கள் | - ஏகாதசி விரதம் |
| 04 | 18 | செவ்வாய் | - பிரதோஷ விரதம் |
| 06 | 20 | வியாழன் | - அமாவாசை விரதம |
| 11 | 25 | செவ்வாய் | - சதுர்த்தி விரதம் |
| 13 | 27 | வியாழன் | - விநாயகஷஷ்டி விரதம் |

| டிசம்பர் | மார்கழி | | |
|---|---|---|---|
| 18 | 03 | செவ்வாய் | - சுவர்க்கவாயிலேகாதசி விரதம் |
| 20 | 05 | வியாழன் | - பிரதோஷ விரதம், கார்த்திகை விரதம் |
| 22 | 07 | சனி | - பூரணை விரதம் |
| 25 | 10 | செவ்வாய் | - சங்கடஹரசதுர்த்தி |




CALL NOW WIN SAREE

JEYECHANDRANS
The Art of Fashion
முகூர்த்தப் பட்டுப்புடவைகளுக்கு ராசியான ஒரே இடம்

Contact:
077 833 5552
Flex Publications
Call Monday - Friday from 9a.m - 5p.m

நவம்பர் மாத
கேள்வி - பதில்
போட்டியில்
**வெற்றியாளர்**
திருமதி. கௌரி சிவபெருமாள்
களனி


அமர்நீதி நாயனார் எங்கே பிறந்தார்?
- சீர்காழி
- பழையாறு
- காஞ்சிபுரம்

JEYECHANDRANS
கேள்வி பதில் போட்டியில்
கேட்கப்படும் கேள்விக்கு சரியான விடையை கூறி
குலுக்கல் முறையில் வெற்றிபெறும் போட்டியாளருக்கு
JEYECHANDRANS TEXTILE
வழங்கும் பட்டுப்புடைவை ஒன்று
பரிசாக வழங்கப்படும்.
(1st December- 17th December)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வர்ணம் தீட்டுங்கள்!



## 10 வித்தியாசங்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தளபதியாரே! நேற்று சாக்கு ஓட்டம் விளையாட்டுப் போட்டியின்போது ஏற்பட்ட தசைப்பிடிப்பின் காரணமாக நான் போர்களத்துக்கு வரமுடியாது போலிருக்கிறது!"



மன்னா! தங்கள் மீது எட்டுத்தொகை பாடவா அல்லது பத்துப்பாட்டு பாடவா?"

குத்துப்பாட்டு தெரியாது என்று சமாளிக்கிறீர்களா?"

# மன்னா ஹாஹ்ஹ...ஹா!



மன்னா! தங்கள் முன்னோர் இமயத்திலிருந்து கல் கொண்டு வந்தனர்!"

எனக்கென்னவோ உள்ளூர் கள் தான் "கிக்"மிக்கதாக உள்ளது அமைச்சரே!



"மன்னா! இனி ஓலை வந்தால், எச்சில் தொட்டு வாசிக்காதீர்கள்!"
"ஏன்!"

"உங்கள் பழக்கத்தை தெரிஞ்ச எதிரி நாட்டு மன்னன். ஓலையில் சயனைடு தடவி அனுப்பபோவதாக ஒற்றர்கள் சொன்னார்கள்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசிபலன்




## திட்டமிட்டு செயலாற்றும் மேஷ ராசி அன்பர்களே!

எவ்விசயங்களிலும் எச்சரிக்கையாக நடக்கவும். புதிய முயற்சியோ, முதலீடோ எதிர்பார்ப்போ எதுவும் தள்ளிப்போடவும். கூட்டு நிலை பினாமி பிறர் பிரச்சினை இதில் எல்லாம் சமயோசிதம் தேவை. இடமாற்றமோ எதிர்பாராத செலவுகள் இருக்கும். குறிப்பாக எந்திரம், நிதி, நீதி, லக்சுரி உப்பளம், உணவு, விடுதி ஆயில் சுரங்கம் பாதுகாப்பு இதில் இருப்பவர்கள் உஷார்.
சாதகமான தேதிகள்: 2, 3, 4, 5, 10, 11, 12, 13, 14, 18, 19, 22, 23, 29, 30, 31 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிரப்பார்ப்பு யாவும் நன்மையே.

## உற்சாகத்துடன் முன்னேறும் ரிஷப ராசி அன்பர்களே!




கவர்ச்சி, காசு, பணம், வருகை, சுபவிசயம் சுகபோகம் எல்லாம் கை கூடி வரும். தன் திறமையை வெளிப்படுத்தி பேஸ்புக், மீடியா, இதில் எல்லாம் தன்னை யார் என்று காட்டுவீர்கள். ஸ்திர சொத்து, வாகனம், ஏதேனும் வாங்க, மீட்க மெருகு ஏற்றுவீர்கள். கலை, அரசியல், ஆன்மீகம் மருத்துவம் லக்சுரி உணவு தானியம் வெண்மை நிற பொருட்கள் ஆதாயமே.
சாதகமான தேதிகள்: 4, 5, 6, 7, 13, 14, 15, 16, 17, 20, 21, 24, 25, 31 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிரப்பார்ப்பு யாவும் நன்மையே.




## திட்டமிட்டு வளர்ச்சி காணும் மிதுனராசி அன்பர்களே!

பலவித பிரச்சினை வந்த போதிலும் அதனை ஈஸியாக டீல் பண்ணுவீர்கள். எதிரிகளை வெல்வீர்கள். பூர்வீகம், புத்திரர்களினால் பாக்கியம் உண்டு. விருத்திக்கான பூஜை வழிபாடு இருக்கும். வரவுகள் உண்டு. பழைய கடன்களை சில பைசல்கள் ஆகும். சுபகாரியம் நன்கு கை கூடி வரும். இன்ஜினியரிங், முகவர்கள், பொருளாதார நிபுணர்கள் ஆராய்ச்சி, மருத்துவம், கல்வி இதில் இருப்பவர்கள் ஏற்றமே.
சாதகமான தேதிகள்: 1, 6, 7, 8, 9, 10, 15, 16, 17, 18, 19, 22, 23, 29, 30 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.

## வாழ்க்கை வாழ்வதற்கே என கருதும் கடகராசி அன்பர்களே!




சில விசயங்களுக்கு உங்கள் முயற்சியின் பேரில் சற்று சாதகமாகும். தன்னிலும் மேற்பட்டவர்களை நன்கு பயன்படுத்தவும் சில விரையம் விட்டுக் கொடுப்பது பலவற்றுக்கு சகாயமே. தாய்மாமன், பெண் வழி சம்பந்தம் வகையினால் சில சிரமம் இதற்கான பயணம் பண செலவு இருக்கும். கடல் வழி, மருத்துவம், பட்டை தீட்டும் தொழில், டிங்கர், பழுது நீக்கும் தொழில், எந்திரம் இதில் இருப்பவர்கள் உஷார்.
சாதகமான தேதிகள்: 4, 5, 8, 9, 10, 11, 12, 18, 19, 20, 21, 24, 25, 26, 31 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.




## துணிவே துணை என முழங்கிடும் சிம்ம ராசி அன்பர்களே!

துணிவு, தூரதேச பயணம் படிப்பு பலவித சகாயத்தை எப்படியும் பெற்றிடுவீர்கள். ஸ்திர சொத்து பாக்கியம் கிட்டும். அரசு, அதிகாரி, முதலாளிகள் சில சகாயம் உண்டு. பணியாட்களின் பயன் அடைவீர்கள். ஆரோக்கியம், சில அதிர்ஷ்டம் எப்படியும் கை கொடுக்கும். சிகப்பு நிற பொருள், வாசனை திரவியம், வனத்துறை, பாதுகாப்பு எரிபொருள், எ்.கு பொருள் இதனால் சகாயமே.
சாதகமான தேதிகள்: 1, 4, 5, 8, 9, 13, 14, 20, 21, 22, 23, 27, 28, 31 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதர்பார்ப்பு யாவும் நன்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசிபலன்




**நண்பர்களை மதித்து நடக்கும் கன்னி ராசி அன்பர்களே!**

முன்பின் யோசித்து எதையும் செய்து எதிர்கால அமைப்பு சில பெறுவீர்கள். ஆண்களுக்கு பெண் மூலம் சில திருப்புமுனைகள் அமையும். சொன்ன சில காரியத்தை சரியாக செய்திடுவீர்கள். சுகமான அமைப்பு பயண அனுபவம் ஷேத்திராடனம் முக்கியஸ்தர்கள் வருகை தொடர்பு பயன் தரும். சரீரம், வாகனம், கல்வி, வங்கி, மீடியா இதன் மூலம் ஆதாயமே.
சாதகமான தேதிகள்: 2, 3, 5, 6, 7, 13, 14, 15, 16, 17, 22, 23, 25, 26, 29, 30 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.

**நல்லதையே சிந்திக்கும் துலாம் ராசி அன்பர்களே!**




முகத்தில் ஒரு தெளிவு தன் விருப்பப்படி ஆடைகள், அணிகலன்கள் ஏதேனும் முக்கிய கடன், பொருள் திருப்புவது தன் குடும்பத்திற்கு என்று அவர்கள் விருப்பப்படி நிறைவு செய்திட முயல்வீர்கள். கூட்டான அமைப்பு பங்காளி, பழைய உறவுகள் தன் பிள்ளைகள் மூலமும் எந்த வகையிலும் பயன் இருக்கும். துணி, உணவு, எண்ணை, எலெக்ட்ரானிக்ஸ், எந்திரம், பணம், கல்வி இதனால் பயன் உண்டு.
சாதகமான தேதிகள்: 1, 4, 5, 6, 7, 8, 9, 15, 16, 17, 18, 19, 24, 25, 26, 27, 28, 31 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.




**நல்லதையே நினைக்கும் விருச்சிய ராசி அன்பர்களே!**

எதிலும் ஜெயமே. எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விடுவீர்கள். விருந்து, வி.ஐ.பி. வருகை, வேடிக்கை, விழாக் கோலம் இருக்கும். புதிய முயற்சி கொண்டு முதலீடு தன் குடும்பம், குழந்தைகள் இணைத்து செய்யும் முயற்சி பயன் தரும். பாரின் தொடர்பு படிப்பு ஏதேனும் பாட்டைம் தொழில் வியாபாரம் நுணுக்கம் அறிதல் கன்சல்டிங், முகவர்கள், எந்திர நிபுணர்கள் இவர்கள் உகந்த காலமே.
சாதகமான தேதிகள்: 1, 2, 3, 6, 7, 10, 11, 18, 19, 20, 21, 27, 28, 29, 30 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.

**நேர்மை குணம் கொண்ட தனுசு ராசி அன்பர்களே!**




சரீர பலம் அதிரஷ்ட வாய்ப்புக்களை உங்கள் திறமையினால் பிறர் உங்களை பேட்டி காணலாம், பரிசு, பாராட்டு இருக்கும். தன் குடும்பத்துடன் நீண்ட தூர பிரயாணம் இருக்கும். தன் மனைவி பிள்ளைகள் விசயத்தில் குடும்ப தலைவன் எதையும் பிரத்தேயகமாக செய்திடக் கூடும். கடன்கள் சில கட்டுவீர்கள். நவநாகரீக பொருட்கள் சில வாங்குவீர்கள். லீகல் அட்வைசர் பத்திரம், பத்திரிக்கை, கல்விதுறை, மொபைல் இதுல ஆதாயம்.
சாதகமான தேதிகள்: 2, 3, 4, 5, 8, 9, 13, 14, 20, 21, 23, 22, 29, 30, 31 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.




**எண்ணத்தைச் செயலாக்கும் மகர ராசி அன்பர்களே!**

மகத்தான வாய்ப்பு கடல் கடந்த பயணம், சில காரியங்களை கச்சிதமாக முடிப்பது உபரி வருமானம் உங்களுக்கு சிலர் பிரஸ்தாபப்படுத்துவது தன்னுடைய முக்கிய விசயங்களை இணைவாக எதையும் செய்வீர்கள். சில ஆசைகள் பூர்த்தியாகும். பிரிந்தவர்கள் இணைவார்கள் காதல் விசயம் கை கூடும். மருத்துவம், ஷிப்பிங், வங்கி, கல்வி, காப்பகம், மீடியா, கலை, அரசியல் இதில் இருப்பவர் ஏற்றமே.
சாதகமான தேதிகள்: 4, 5, 6, 7, 10, 11, 12, 15, 16, 17, 24, 25, 23, 22, 31 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாதத்திற்கான ராசிபலன்




**மனதில் பட்டதை வெளிப்படுத்தும் கும்ப ராசி அன்பர்களே!**

நினைத்ததை எதையும் உடனே செய்துவிட வேண்டும். பேட்டி, பரிசு, பாராட்டு மறுவகையில் உண்டு. கூட்டான அமைப்பு சாதகமே. கொடுக்கல் வாங்கல் நன்மையே தன் ரத்தபந்தங்கள், நண்பர்கள், அதிகாரி, வேலையாட்கள் இவர்களால் சில காரிய முயற்சி எப்படியும் கை கூடும். மரம், வனம், சரீரம், உணவு, விடுதி, காப்பகம், பூமி, மெட்டல், தோல் இதன் ஜீவனம் சகாயமே.
சாதகமான தேதிகள்: 1, 5, 6, 7, 8, 9, 13, 14, 18, 19, 24, 25, 27, 28 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.

**பொறுமையின் இருப்பிடமான மீன ராசி அன்பர்களே!**

பல விசயங்களில் நீங்கள் விட்டு கொடுத்துதான் போக வேண்டும். எதிர்பாராத கடன், செலவு இதன் சூழ்நிலைகள் இருக்கும். சொந்த பந்தங்களினால் சில இடையூறுகள் இருக்கும். மருத்துவ செலவு இருக்கும். தான் ஈடுபட்டு இருக்கும் ஜீவனத்தில் மேலிடம் கீழ் இடத்தில் கவனம் தேவை. கலைத்துறை, கெமிக்கல், தீம்பார்க், காப்பகம், எலெக்ட்ரானிக்ஸ் எந்திரம் உப்பளம் விசயங்கள் இதுல மிக உஷார்.
சாதகமான தேதிகள்: 1, 2, 3, 4, 8, 9, 10, 11, 12, 15, 16, 17, 20, 21, 27, 28, 29, 30 இந்த தேதிகளில் முயற்சி, முதலீடு, எதிர்ப்பார்ப்பு யாவும் நன்மையே.





## திருமண சேவை

விமலன் திருமண சேவை - 011 6477181542

மீன்மகள் திருமண சேவை - 076 6606422

57, விகாரை லேன், வெள்ளவத்தை - 076 6069104

238, அரசடி வீதி, யாழ்ப்பாணம் - 021 2227147

www.thaalee.com - 2523127

www.thirukalyanam.lk - 0777 877717

**குரும்ப சிட்டியூர் வேல்அமுதன்**
8-3-3, Metro Apartment 55th Lane, வெள்ளவத்தை.
011 236 0488

**ராதா கிருஷ்ணா திருமண சேவை**
5E, வில்லியம் சந்தி, தெஹிவளை. 011 552 2084

**மயில்வாகனம் சர்வதேச திருமண சேவை**
22/1, சுபோதாராம வீதி, தெஹிவளை. 076 657 7292

**கனகராஜன்**
19, கல்பொத்த வீதி, கொழும்பு 13.
072 324 4945, 072 524 6419

**குருக்கள் ஜோதிஷம்**
165/6, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 13.
011 243 1982

**சக்தி திருமண சேவை**
30, ரமணி மாவத்தை, நீர்கொழும்பு. 031 223 2130

**HAPPY MARRIAGE SERVICES**
No 57, Sumathrarama Mawatha, Kottahena.
077 530 1437 / 077 677 6630

**SRI LUXMIE MARRIAGE CENTER**
289 2/1, காலி வீதி, கொழும்பு 06. 0114 527 432

## திருமண வைபவங்களுக்கான...

| | |
|---|---|
| விவாக பதிவாளர் | Ms. Chandrani - 071 312 2889 |
| மணவறை | 077 6638393 |
| வாடகை நகைகள் | Joy Glorious - 077 494 9961 |
| திருமண ஒப்பனை | Brintha - 2 593 693 / 077 633 1257 |
| ஜோதிடம் | Nalendra Institute - 077 2951368 |
| ஜோதிடம் | Kurukkal Jothisham - 077 656 7869 |
| ஜோதிடம் | J. Sharma - 258 6373 |
| குருக்கள் | S.S. Kurukkal - 077 8955986 |
| திருமண ஆடைகள் | Little Asia - 011 250 4470 |
| புகைப்படம் / வீடியோ | Chhaya Rabeshan -0777 323 174 |
| மெகந்தி | Mehendi - 0777 667 727 |
| திருமண வாகனம் | Mal-Key Rent a Car - 2 365 365 |
| திருமண சைவ உணவு | Mahen's Catering - 0777 563 620 |
| திருமண சைவ உணவு | Dushi Catering - 077 743 1159 |
| திருமண பரிசுகள் | Visgha - 077 277 4776 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையிலிருந்து சில உணர்ச்சிப்பூர்வமான சம்பவங்கள்**

**கவனத்தின் சக்தி**

சுவாமி விவேகானந்தர் புத்தகங்கள் படிப்பதில் மிகவும் பிரியம் உள்ளவர். ஒருமுறை மீரட்டில் தனது சகோதர சீடர்களுடன் அவர் தங்கியிருந்தார். தனது முறை வரும்பொழுது, சுவாமி விவேகானந்தா நூலகத்திலிருந்து சர்ஜன் லுப்பெக் எழுதிய பல பிரிவுகள் கொண்ட புத்தகங்களைக் கொண்டு வந்து, படித்துவிட்டு மறுநாள் திருப்பிக் கொடுத்து விடுவார். அவர் அவ்வளவு பெரிய புத்தகங்களை படிக்கின்றாரா அல்லது தன் மேல் நல்ல அபிப்ராயம் வரவேண்டும் என்பதற்காக புத்தகங்களை எடுத்துச் செல்கிறாரா என அந்த நூலகருக்குச் சந்தேகம் எழுந்தது. அதற்கு பதிலளிக்கும் வகையில், சுவாமி விவேகானந்தர் அடக்கத்துடன் நூலகரிடம் "ஐயா, மிகவும் கவனமாக புத்தகத்தில் உள்ளவற்றை படித்துவிட்டேன், அதில் தங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின், புத்தகத்திலிருந்து, உங்களுக்கு விருப்பமான வினாக்களை கேட்கலாம்." எனக் கூறினார். அந்த நூலகரும் பல வினாக்களை வினவ, சுவாமி விவேகானந்தர் எல்லா வினாக்களுக்கும் சரியான பதிலை அளித்தார்.

**ஞாபகசக்தியின் சக்தி**

சுவாமி விவேகானந்தர் புத்தகங்கள் படிக்கும் அழகினைக் கண்டு கேத்ரி மன்னன் மிகவும் வியந்து போனார். சுவாமி விவேகானந்தர் சாதாரணமாக ஒரு புத்தகத்தின் பக்கங்களை தொடக்கத்திலிருந்து முடிவு வரை வேகமாகத் திருப்புவார். கேத்ரி மன்னனும், அது எவ்வாறு அவரால் முடிகின்றது என வினவ, சுவாமி விவேகானந்தர் விவரித்தார். ஒரு குழந்தை முதலில் படிக்கத் தொடங்கும் பொழுது, அக்குழந்தை தனது கவனத்தை முதல் எழுத்தின் மீது வைக்கின்றது. மீண்டும் இரண்டு மூன்று முறை கூறிவிட்டு, பிறகு அடுத்த எழுத்திற்குச் சென்று, முழு வார்த்தையும் கூறுகிறது. சிறுகச் சிறுக, அவன் படிக்கும் கலையினில் தேர்ச்சி பெற்றால், அடுத்து அவனது முழுச் சொல்லின் மீது படிகின்றது. மீண்டும் மீண்டும் பயிற்சி செயலினால், அவனால் ஒரு பார்வையினாலேயே முழு வாக்கியத்தினையும் படித்துவிடமுடியும். ஒருங்கிணைத்தல் எனும் சக்தியினை நாம் வளர்த்துக் கொண்டு போனால், ஒருவனால் கண் இமைக்கும் நேரத்தில் ஒரு பக்கத்தையே படித்துவிடமுடியும். தானும் உண்மையாக அதையே செய்ததாகக் கூறினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹைக்கூ கவிதைகள்





## வாழ்க்கை

போகும் போதே
என்னை ரசித்து கொண்டே போ...
திரும்ப வரமாட்டேன்
உனக்காக..




## முன்னேற்றம்

நான் எனும் அகந்தை
மனதை விட்டு வேரோடு
அழிந்தால்தான், முயற்சி எனும்
விதையில் முன்னேற்றம்
எனும் செடிமுளைக்கும்.



## கடிகாரம்

கடிகாரத்திற்கு நேரத்தை
காட்ட மட்டுமே தெரியும்
அதை நல்ல நேரமாகவும்
கெட்ட நேரமாகவும் மாற்ற
மனிதனால் மட்டுமே முடியும்.



## காற்று

மேகங்களில்
பொம்மை செய்து
விளையாடும் குழந்தை! காற்று.



## முயற்சி

முயற்சி என்பது
விதை போல...
அதை விதைத்துக்
கொண்டே இரு...
முளைத்தால் மரம்...
இல்லையென்றால்- அது
மண்ணிற்கு உரம்...



## பணமும் மகிழ்ச்சியும்

பணமும் மகிழ்ச்சியும்
பரம விரோதிகள்
ஒன்றிருக்கும்
இடத்தில் மற்றொன்று
இருப்பதில்லை...



## வெற்றி

நம்பிக்கை என்பது
வெற்றியோடு வரும் ஆனால்,
வெற்றி என்பது...
நம்பிக்கை உடையோரிடமே வரும்...



## சிரிப்பு

சிரிப்பு என்கிற உடையை
உடுத்திக்கொள்
உன்னைப் போல
அழகா யாரும்
இருக்க முடியாது...!



## மனிதநேயம்

நீ யாராய்
வேண்டுமானாலும்
இரு...
ஆனால் எல்லோரிடமும்
மனிதனாய்
இரு...



## நட்பு

உன் நண்பன் வெற்றி
பெறும்போது
"அவன் என் நண்பன்"
என்று கூறி
பெருமை கொள்!
உன் நண்பன் தோல்வி
அடையும்போது
"நான் உன் நண்பன்"
என்று கூறி
அருகில் நில்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-யோகா



# ஜடாயு செய்த போர்

சூர்ப்பணகை இராவணனின் உடன்பிறந்த தங்கை. அவள் ஒருமுறை ராமன், சீதை, இலட்சுமணன் மூவரும் வனாவாசம் மேற்கொண்டிருந்த கானகத்திற்கு வந்தாள்.

இலட்சுமணனின் அழகைக் கண்டு மயங்கிப் போனாள். மணந்தால் அவனை திருமணம் புரிந்து வாழ வேண்டும், என்று எண்ணி, தனது எண்ணத்தை லட்சுமணனிடம் தெரிவித்தாள்.

ஏற்கனவே தனக்குத் திருமணம் நடந்தேறி விட்டது என்றும், இராமனுக்கும், சீதைக்கும் காவலாகத் துணைபுரிவதே, எனது கடமை என்றும் கூறி, சூர்ப்பணகையின் வேண்டுதலுக்கு மறுப்பு தெரிவித்தான், இலட்சுமணன்.

இலட்சுமணனை மீண்டும் மீண்டும் தொந்தரவு செய்தாள், சூர்ப்பணகை. இவள் அரக்ககுலப் பெண் என்பதை அறிந்த இலட்சுமணன் சூர்ப்பணகையின் மூக்கை காயப்படுத்தி அனுப்பினான். அதனால் அவனைப் பழிவாங்க நினைத்த சூர்ப்பணகை, இரத்தம் ஒழுகிய மூக்கோடு தனது அண்ணன் ராவணனின், அரண்மனைக்குச் சென்றாள்.

சீதை என்ற ஓர் பேரழகி, காட்டுப்பகுதியில் இருக்கிறாள் உனக்காக அவளைக் கவர்ந்துவர நினைத்தேன். அவளோடு இருந்த ஒருவன், என்னை காயப்படுத்தி விட்டான்." என்று கூறினாள். 'சீதை பேரழகி' என்று கூறியதால், இராவணனுக்கு ஆசை மயக்கத்தை உருவாக்கியது.

"எனது பொருட்டு சென்ற உனக்கு, வஞ்சத்தால் துன்பப்படுத்தியவர்களை, நாமும் வஞ்சத்தால் துன்பம் செய்வோம்" என்றான், சினத்துடன். மாரீசனை அமைத்து, சீதையை மயக்கும், பொன் மானாக போகச் சொன்னான்.

மாரீசன் பொன்மானாக மாறி, சீதையின் மனதை மயக்கினான். சீதை 'பொன்மானை பிடித்துத் தாருங்கள்' என்று இராமனிடம் கேட்டாள். இராமனும் மானைத் துரத்தி சென்றான்.

இராமன் வெகு நேரமாகி வராததால், இலட்சுமணனைச் சென்று பார்த்துவரச் சொன்னாள். சீதையின் முன்பு மூன்று கோடுகள் இட்டு, இதைத் தாண்டி வரவேண்டாம் என்று அறிவுறுத்திவிட்டுச் சென்றான் இலட்சுமணன். இராவணன் சன்யாசியாக வேடமிட்டுக் கொண்டு, பிச்சை கேட்க வந்தான், சீதையிடம்.

கனிகளையும், தானியங்களையும், பிச்சையாக தருவதற்கு சீதை இலட்சுமணனின் கோட்டைத் தாண்டி வெளியே வந்தாள்.

சீதை கோட்டை தாண்டி வந்தவுடன், நிலத்தைப் பிளந்து கையில் ஏந்தி, சீதையை இலங்காபுரிக்கு எடுத்துச்செல்ல தயாரானான். அப்பொழுது வானத்தில் பறந்தபடி 'ஜடாயு' என்ற வயதான பெரும் கழுகு ஒன்று அங்கே வந்தது.

சீதாதேவியை இராவணன் தூக்கிச் செல்வதை அறிந்து அவனோடு பேரிட்டது. "ஜடாயுவே வீணாக என்னோடு சண்டையிடுகிறாய்.... எனது விமானத்திற்கு வழிவிட்டு விலகிச் சென்றுவிடு" என்று இராவணன், கழுகினை எச்சரித்தான்.

"எல்லோராலும் வணங்கத்தக்க, சீதாதேவியை, தவறான எண்ணத்திற்காக கவர்ந்து செல்வதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இராமனின் சேவகனாய் இருக்கும் வரை அனுமதிக்க மாட்டேன்." என்று கூறி, தடுத்து நின்றது ஜடாயு.

இராவணன் ஜடாயுவின் வார்த்தைகளைக் கேட்டும், "தன்னை ஒரு பறவை தாக்கி தடுத்து நிறுத்துவதா" என்ற எண்ணத்தாலும், சினம் பெருகி வாளை கைகளில் எடுத்தான். ஜடாயுவின் சிறகுகளை வெட்டினான். இரத்தம் ஆறுபோல் பெருக்கெடுத்து ஓடியது.


இராவணன் தனது புஷ்பக விமானத்தை, வானில் பறக்கச் செய்து, இலங்காபுரி சென்றான். சீதையை அசோகவனம் அமைத்து, சிறையில் வைத்தான்.

இராமனும், இலட்சுமணனும் அடிபட்டு இரத்த வெள்ளத்தில் இருந்த, ஜடாயுவை கண்டார்கள்.

"சீதையை இராவணன் தூக்கிச் சென்று விட்டான்" என்று நடந்தவற்றை, ராமனிடம் கூறி ஜடாயு உயிரை விட்டது.

### கதையின் கருத்து

எஜமானனுக்கும், குருவிற்கும், கடவுளுக்கும் உண்மையான விசுவாசியாக இருக்க வேண்டும்.



# சுபத்திரை திருமணம்

பார்த்தன், தனஞ்செயன், பற்குணன், கிரீடி, விசயன், சுவேதவாகனன் எனப் பல பெயர்களை உடையவன் அர்ச்சுனன். ஒரு காலத்தில் இந்திரப்பிரஸ்தம் என்னும் தன் நகரத்தை விட்டுத் தீர்த்த யாத்திரைக்குச் சென்றான்.

பல நதிகளிலும் நீராடி மகிழ்ந்தான். இறுதியில் துவாரகையை அடைந்தான். கண்ணனின் தங்கையாகிய சுபத்திரையின் பேரழகைப்பற்றிக் கேள்விப்பட்டு அவள் மேல் பெரும் காதல் கொண்டான்.

பெற்றோரும், உறவினர்களும் அவளை துரியோதனனுக்கு மணம் முடிக்க நினைத்திருந்தார்கள். அதற்கு முன் அவளை மணந்துகொள்ள அர்ச்சுனன் விரும்பினான். காவி ஆடை உடுத்தி, தண்டமும் கமண்டலமும் வைத்துக்கொண்டான். ஒரு பெரிய தவசி போல் வேடம் இட்டுக் கொண்டான். ஒரு மலைச்சாரலில் தங்கி கண்ணனை நினைத்தான். அவரும் வந்தார். உண்மையை அறிந்தார்.

பலராமன் முதல் அவர் மரபினர் அனைவரும் அர்ச்சுனனை முனிவர் என்று நினைத்துப் பணிந்தார்கள். அவருக்குப் பணிவிடை செய்து வரும்படி சுபத்திரையை அனுப்பி வைத்தனர். விரும்பியது கிடைத்தது என்று அர்ச்சுனன் பெருமகிழ்ச்சி அடைந்தான்.

வெகு சீக்கிரமே, தவத்தில் இருப்பவர் அர்ச்சுனன்தான் என்று சுபத்திரை அறிந்தாள். இயல்பாகவே சுபத்திரை, அர்ச்சுனன் மீது ஆசை கொண்டிருந்தாள். ஒரு நாள், அர்ச்சுனன் அவளை அழைத்துக் கொண்டு மறைந்தான்.

இதனால் பலராமன் முதலிய அனைவரும் அர்ச்சுனனை மிகவும் இகழ்ந்தார்கள். மனம் நொந்தார்கள். ஆனால், துரியோதனனின் உண்மைக் குணம் வெளிப்பட்டபின் சுபத்திரை, அர்ச்சுனனை மணந்ததற்காக மகிழ்ந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறிக்கோளை அடையும் தகுதி

துறவி ஒருவரிடம் அரசர், "சுவாமி.. எனக்கு மந்திர உபதேசம் செய்ய வேண்டும்" என்றார்.
"அதற்கெல்லாம் தகுதி வேண்டுமே"
"என்ன தகுதி?"
"சொன்னால் உனக்கு புரியாது"
"இப்போது உபதேசம் செய்ய முடியுமா முடியாதா?" என்றார் அரசர்.
மறுத்தார் துறவி. அரண்மனைக்கு திரும்பிய அரசர் அமைச்சரிடம், " உடனடியாக நான் உபதேசம் பெற்றாக வேண்டும்" என ஆவேசித்தார்.


பண்டிதர் ஒருவர் மூலம் மன்னர் உபதேசம் பெற ஏற்பாடு செய்தார் அமைச்சர். அதற்கு துறவியும் வரவழைக்கப்பட்டார். "தகுதி இல்லை என மறுத்தீர்களே.. நீங்கள் இல்லாவிட்டால் உபதேசம் பெற முடியாதா?" என கர்ஜித்தார் அரசர். புன்னகைத்த துறவி, "சரி... தங்களை சோதிக்க விரும்புகிறேன். நான் சொல்வதைச் செய்வீர்களா?" தலையசைத்தார் அரசர் "இப்போது சிம்மாசனத்தை விட்டு கொஞ்ச நேரம் இறங்கி வாருங்கள்" என்றார்.
அரை மனதுடன் கீழிறங்க, வேகமாக படியேறிய துறவி அதில் அமர்ந்தார்.

அதிர்ச்சியுடன் அரசர், "துறவியே... என்ன செய்கிறீர்கள்?" "நான் சொல்வதை செய்வதாக சம்மதித்தீர்களே" அமைதி காத்தார் அரசர். "இவரை கைது செய்யுங்கள்" என்று மன்னரைக் காட்டியபடி உத்தரவிட்டார் துறவி. வீரர்கள் திகைத்தனர். அப்போது அரசர் ஆவேசமுடன், "வீரர்களே... இந்த மதிகெட்ட துறவியைக் கைது செய்யுங்கள்" என்றதும் அவரைச் சூழ்ந்தனர். 'என்ன அரசே... நான் சொல்லாததை எல்லாம் செய்கிறீர்களே...' என்றார் துறவி. வீரர்களும் விலகிச்சென்றனர்.

"இப்போது என்ன தான் சொல்கிறீர்கள்?" என்றார் அரசர். "நடந்ததை கவனித்தீர்களா அரசே.. நாம் இருவர் சொன்னதும் ஒரே விஷயம் தான் என்றாலும், நான் சிம்மாசனத்தில் அமர்ந்து சொன்னதை யாரும் பொருட்படுத்தவில்லை. ஆனால் நீங்கள் கீழே நின்று சொன்னாலும் மதிக்கின்றனர்" மன்னனுக்குள் பொறி தட்டியது. துறவியை உற்று கவனித்தார். "என்ன சொல்கிறோம் என்பதை விட யார் சொல்கிறார்கள் என்பதே முக்கியம். குழப்பமாக இருக்கிறதா, உபதேசம் செய்யும் தகுதி எனக்கு இருந்தாலும் அதை பெறும் தகுதி உம்மிடம் இல்லை, யாரோ ஒரு பண்டிதர் மூலம் எதையோ தெரிந்து கொள்வது உபதேசம் ஆகாது" தவறை உணர்ந்த அரசர் துறவியை வணங்கினார்.

குறிக்கோளை அடையும் தகுதியை வளர்த்துக் கொண்டால் கடவுள் அருளால் விருப்பம் நிறைவேறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காமாட்சியின் கருணை

அஸ்தினாபுரத்தில் தனேஷ்வரம் என்னும் பகுதிக்கு அருகே 'அனுஜை' கிராமத்தில் இருந்த செல்வந்தர் அச்சுதர். அவர் தனேஷ்வரத்தில் அருள்புரியும் காமாட்சி கோயிலுக்கு தினமும் வருவார். ஒருநாள் இரவு வழிபாட்டுக்கு வந்த அச்சுதர் மண்டபத்தில் தூங்கி விட்டார். கனவில் தோன்றிய காமாட்சி, "அச்சுதா! நீ இருக்கும் கிராமத்தில் எனக்கு கோயில் எழுப்பு. நான் அங்கு குடியிருக்க விரும்புகிறேன்." என சொல்லி மறைந்தாள்.

"தாயே... உன்னைத் தரிசிக்க தனேஸ்வரம் வரும் எனக்கு, என் ஊரில் கோயில் கட்ட வேண்டும் எனத் தோன்றவில்லையே!" என எண்ணியபடி வீட்டுக்கு வந்தார். காமாட்சியின் உத்தரவை மனைவி நீலாட்சியிடம் தெரிவித்து மகிழ்ந்தார். கோயில் திருப்பணி விரைந்து முடிக்கப்பட்டு கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது. ஆனால் தங்களுக்கு குழந்தைப்பேறு இல்லையே என வருந்தினாள் நீலாட்சி. விஷயம் அறிந்த அச்சுதர், "அடியார்களின் வயிறு குளிர உணவும், இயன்ற அளவு பணமும் தானம் கொடு. உன் வயிறு குளிர பிள்ளை செல்வம் வாய்க்கும்" என்றார். நீலாட்சியும் அதை உடனே செயல்படுத்தினாள். வயிறார சாப்பிட்ட அடியார்கள் வாழ்த்திச் சென்றனர். நல்லவர்களின் வாழ்த்துக்கு உடனே பலன் கிடைத்தது. கருவுற்ற நீலாட்சிக்கு அழகான பெண் குழந்தை பிறந்தது. 'ஞானம்' எனப் பெயரிட்டு வளர்த்தனர்.

அடியாருக்கு அன்னமிடும் தர்மத்தை நீலாட்சி தொடர்ந்து செய்தாள். நல்லவர்கள் சிலர் இருந்தால் கெட்டவர் பலர் அல்லவா இருக்கிறார்கள். அவர்களும் தானத்தில் பங்கேற்று பணம் பறித்தனர். தீயவர்களுக்கு நன்மை செய்தால் என்னாகும்? ஓட்டை விழுந்த பலூனில் உள்ள காற்று வெளியேறுவது போல அச்சுதரின் செல்வம் குறைந்தது. குடும்பம் வறுமையில் உழன்றது. அப்போது குழந்தை ஞானத்திற்கு வயது எட்டு. காசில்லாதவனை உலகம் பொருட்படுத்துவதில்லையே. அச்சுதரை உறவினர் ஒதுக்கினர். மூன்று நாட்களாக மூவரும் பட்டினியால் வாடினர்.

மகளின் பசியைப் போக்க எண்ணிய அச்சுதர், விவசாயிகள் நெல் அடிக்கும் களத்து மேட்டுக்குப் போனார். சிதறக் கிடக்கும் நெல்மணிகளை எடுத்து வந்து, "நீலாட்சி.. இதை வடித்து உப்பும் தண்ணீரும் விட்டு கஞ்சியாக்கு, அதற்குள் நான் காமாட்சியம்மனை தரிசித்து வருகிறேன்" என்று கிளம்பிச் சென்றார். அங்கு கோயில் வாசலில் "அப்பா... அப்பா...!" எனக் குரல் கேட்கவே திரும்பி பார்த்தார். மகள் ஞானம் நின்றிருந்தாள். "அப்பா! உங்க பின்னாலே தான் வந்தேன். ஆனா என்னால நடக்க முடியல, பசி காதை அடைக்குது, வெயிலும் கொளுத்துது" என சொல்லும் போதே அச்சுதர் இடைமறித்தார்.

"பசிக்கிற போது இப்படி நீ வரலாமா? உடனே வீட்டுக்குப் போ. அம்மா உணவு தருவாள்" என்றார். "வேண்டாம் அப்பா! எனக்கு நடக்க தெம்பு இல்ல இங்கேயே இருக்கேன்" என மறுத்தாள். "தோள்ல வச்சு தூக்கிட்டு போறேன்" என்றார் அச்சுதர். "வெயில் கொளுத்தறது, பசிக்கிறது, இப்பவே சாதம் வேணும்" என சொல்லி அழுதாள். அப்படியே கோயில் மண்டபத்தில் படுத்து விட்டாள். மகளின் நிலையைக் கண்ட அச்சுதர் கண்ணீருடன் "இங்கேயே இரு. அப்பா வீட்டுக்குப் போய் உணவுடன் வருகிறேன்" என சொல்லி கிளம்பினார். வீட்டில் நீலாட்சி களைப்பால் கண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயர்ந்திருந்தாள். எழுப்ப மனமில்லாத அச்சுதர், சாதம், தண்ணீரை தானே கையில் எடுத்துக் கொண்டு கோயிலுக்கு வந்தார். மகளை எழுப்பி ஊட்டினார். சப்புக் கொட்டியபடி ஞானம், "அப்பா! சாதம் பிரமாதம்" என சொல்லி சாப்பிட்டாள்.

"பசி அதிகமானால் உப்பும், தண்ணீரும் கூட பிரமாதமாகி விடும் போல" என மனதில் நினைத்துக் கொண்டார். "அப்பா! இன்னும் எனக்கு பசிக்கிறது. வீட்டில் இன்னும் சாப்பாடு இருக்கு. அதையும் சாப்பிட்டால் தான் உங்களுடன் வருவேன்" என பிடிவாதம் செய்தாள்.

காலியான பாத்திரத்துடன் வீட்டுக்கு வந்த அச்சுதர் மனைவியிடம் "நீ வைத்திருந்த உணவை கோயில் மண்டபத்தில் இருக்கும் ஞானம் சாப்பிட்டு விட்டாள். இன்னும் உணவு இருக்காமே... அதையும் அவள் கேட்கிறாள். உடனே நான் போகணும்" என்றார். திகைப்புடன் நீலாட்சி, "சுவாமி.... என்ன சொல்கிறீர்கள்? குழந்தையாவது! மண்டபத்தில் இருப்பதாவது!" என சொல்லி கணவரை இழுத்துச் சென்றாள். கிழிந்த பாயில் ஞானம் சோர்வுடன் படுத்திருந்தாள். மகளைக் கண்ட அச்சுதர் திடுக்கிட்டார். "அப்பா! பசிக்கிறது!" என அவளின் தீனக்குரல் காதில் விழுந்தது. அச்சுதர் கோயில் மண்டபத்திற்கு ஓடினார். நீலாட்சியும் பின்தொடர்ந்தாள்.


மண்டபத்தில் யாருமில்லை. மகளின் வடிவில் வந்தவள் அன்னை காமாட்சி என்னும் உண்மை புரிந்தது. "தாயே! என் கையால் உணவு உண்டாயா? என்ன பாக்கியம் செய்தேன்!" என்று சொல்லி அழுதார். "அச்சுதா... மூன்று நாளாக கோயிலில் நைவேத்யம் செய்யாததால் பட்டினி கிடந்தேன். இன்று உன் கையால் உணவை ஏற்று மகிழ்ந்தேன். மீண்டும் நீ செல்வந்தனாக வாழும் பேறு பெறுவாய்" என குரல் ஒலித்தது. காமாட்சியின் கருணையை எண்ணிய அச்சுதரும், நீலாட்சியும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

AFTER YOUR O/L OR A/L
Call: 0777-555026
LEARN LOGO DESIGN
MAGAZINE LAYOUTS
VISITING CARD DESIGN
BANNER DESIGN
CREATIVE WORKS
LEAFLET DESIGN
WEDDING ALBUM DESIGN
Learn CREATIVE Graphic DESIGNING COURSE @ flex INSTITUTE
4, IBC Road, Wellawatte.
படித்து முடித்தபின் வேலைவாய்ப்பு
மாதம் ரூபா. 25,000/-க்கு மேல் சம்பாதிக்கும் வாய்ப்பு!
~~Rs. 7,500~~ Rs. 4,000
DURATION 1 MONTH Till Dece. 20th only

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமதி. கௌரி சிவபெருமாள்
55/5 C1, கெமுனு மாவத்தை,
களனி.




திருமதி. சுபிதா பிரசன்ன
வோகன் எஸ்டேட், திக்கல டிவிஷன்,
மத்துகம.

# நவம்பர் மாத கேள்வி -பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

Flex Graphic நிர்வாக இயக்குனர் திரு. P.விஜய் மற்றும்
Flex அருள் ஆசிரியர் திரு. கே. யோகேந்திரன் அவர்களால் வெற்றிபெற்றவர்களுக்கு
பரிசில்கள் வழங்கப்பட்டது




**அன்பு வாசகர்களே!**

ஆன்மிகம் சம்பந்தமான சிறந்த
ஆக்கங்களை எமக்கு அனுப்பி வைக்கவும்.
நீங்கள் அனுப்பி வைக்கும்
ஆக்கங்கள் எமது இதழுக்கு பிரசுரிக்க
ஏற்றதாயின் பிரசுரிப்போம்
என்பதை கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

**ஆக்கங்கள் அனுப்பவேண்டிய முகவரி:**

**Flex Publications**
04 1/1, IBC Road, Colombo 06.
Email:flexgraphicads@gmail.com

**Flex** அருள் **JAYECHANDRANS** கேள்வி - பதில் போட்டி - தொலைபேசி மூலம்
கேள்விக்கான விடையை கூறி அல்லது முகப்புத்தகத்தில் பதிவு செய்து வெற்றி பெறுங்கள்.

**ஜனவரி மாதத்திற்கான** விளம்பரங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது

*Flex Publications*
**0777 555 026**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதுவரை வந்த இதழ்கள்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







| காலம் | இலங்கை | அவுஸ்திரேலியா | இலண்டன் | ஐரோப்பிய நாடுகள் | கனடா |
|---|---|---|---|---|---|
| 6 மாதங்கள் | ரூபா 550/= | இலங்கை ரூபா 3500/= AUSTRALIAN DOLLARS AUD 30 | இலங்கை ரூபா 3500/= UK POUND 18 | இலங்கை ரூபா 3000/= EURO 18 | இலங்கை ரூபா 3500/= CANADIAN DOLLARS 31 |
| 1 வருடம் | ரூபா 1100/= | இலங்கை ரூபா 7000/= AUSTRALIAN DOLLARS AUD 60 | இலங்கை ரூபா 7000/= UK POUND 36 | இலங்கை ரூபா 6000/= EURO 36 | இலங்கை ரூபா 7000/= CANADIAN DOLLARS 62 |

**More Details:** P Jegan- Director
Flex Graphic, 04, IBC Road, Wellawatte, Colombo 06, Sri Lanka.
**Tel: 0094 777 555 026 / Email: flexgraphicads@gmail.com**

**ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்**
123, காலி வீதி, கொழும்பு 04. 0773002238

**கந்தையா அன் கம்பனி**
357, காலி வீதி, கொழும்பு 04. 2590346
(அருள்மிகு ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம் அருகில்)

**ஸ்ரீ மயூராபதி கோவில்**
17A, மயூரா பிளேஸ், கொழும்பு 05. 2500840

**ஸ்ரீ ஐஸ்வர்யலக்ஸ்மி திருக்கோவில்**
ரொக்ஸி கார்டன், வெள்ளவத்தை. 2360525

**ஸ்ரீ வெங்கடேஸ்வரர் விஷ்ணு கோவில்**
100, கோவில் வீதி, கொழும்பு 15. 0771739094

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
காலி வீதி, வெள்ளவத்தை 4515775

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
202, செட்டியார் தெரு, கொழும்பு 11. 2422321

**World Communication**
298, காலி வீதி, வெள்ளவத்தை. 2504236

**Ever Green's Grocery**
**198, Galle Road, Wellawatte 0112 360 790**

**Jeevan Stores**
**No. 31/1, Rohini Road, Wellawatte. Tel. 011- 2586 570.**

**Flex அருள் இதழினை விற்பனை செய்யும் விற்பனை விநியோகஸ்தர்களுக்கு**

# மனப்பூர்வமான நன்றிகள்!

# கிடைக்கும் இடங்கள்

**Joy Glorious**
NO, 199, காலி வீதி, வெள்ளவத்தை. 0774949961

**Valentrina**
24A, Hampden Lane, Wellawatte. 075 246 7315

**Windsor Bookshop**
372, காலி வீதி, வெள்ளவத்தை. 2589081

**Amma Food City**
331, செட்டியார் தெரு, கொழும்பு 11. 0777410472

**Maha Net**
206/B, காலி வீதி, வெள்ளவத்தை. 0773375374

**Shankar Book Shop**
240, காலி வீதி, வெள்ளவத்தை. 2559251

**Ahulakers**
253, காலி வீதி, வெள்ளவத்தை. 2362742

**New Red Rose**
இல.308C காலி வீதி வெள்ளவத்தை. கொழும்பு 06

**Flex Publications**
4, IBC Road, வெள்ளவத்தை. 0777555026

**ஆஞ்சநேயர் கோவில்**
தெஹிவளை- 0768 599 253

அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
131, கியூ வீதி, கொழும்பு 02. 0778947830

**இவ் இதழினை விற்பதற்கான விற்பனை விநியோகஸ்தர்கள் எம்மோடு தொடர்பு கொள்ளவும். Tel: 0777 614 186**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Kurinchi Home**
**(PRIVATE) LIMITED**




**சொகுசு தொடர்மாடிமனை**
**நாள் வாடகைக்கு!**

www.kurinchihome.com/rent

0777 044501

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SPECIAL DISCOUNTS FOR ALL YOUR NEWSPAPER ADS

SAVE MONEY & TIME

Our Services

• Designing Paper Advertisements • Brochures • Catalogues • Annual Reports • Souvenirs • Logos • Letter Heads • Posters • Leaflets • Hoardings • Digital Printing • Screen Printing • Offset Printing • Pennants • Digital Name Boards • Light Boxes and many more...

## OUTDOOR WORKS

• Digital Name Boards • Sticker Boards • Light Box • X Banner Printing • San Blast • Glass Sticker Pasting






1 ONE DAY SERVICE

Large Format
**DIGITAL PRINTING**



flex GRAPHIC
THE LEADING DIGITAL HOUSE FOR ADVERTISING

No. 4, IBC Road, Wellawatte. Tel: 0112 364 157
E-mail: flexgra@sltnet.lk Web: www.flexgraphic.lk
**Call: 0777-761346, 0777 555026**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒவ்வொருவர் வீட்டிலும் இருக்கவேண்டிய
# ஸ்ரீமத் பாகவதம்

**288 வண்ணப்படங்கள், 18000 ஸ்லோகங்கள், 12 காண்டங்கள், 18 புத்தகங்களாக "ஸ்ரீமத்பாகவதம்" புராணங்களுள் மகுடம் போன்றது.**

வேதங்கள் கற்பக விருகக்ஷமென்றால் அதில் பழுத்த பழத்தின் ரசம் ஸ்ரீமத் பாகவதம், பாவங்களையும், மரணமெனும் அச்சத்தையும் போக்கி பகவானிடத்து கொண்டுசெல்லும் பக்தியை ஞானவைராக்கியத்துடன் வளர்க்கும் ஸ்ரீமத் பாகவதம். கடவுள் பற்றிய நூல்கள் பல இருப்பினும் கடவுளால் நேரடியாக மொழிந்தருளப்பட்டது பகவத்கீதை. இப் பொக்கிஷங்கள் உலகெங்கும் கிருஷ்ணபக்தியை பரப்புவதை நோக்காக கொண்டு வெற்றி கண்ட ஸ்ரீல பிரபுபாதாவின் மொழிபெயர்ப்பு பொருளுரையுடன் எழுதப்பட்டுள்ளது. இப் புத்தகங்கள் பக்திவேதாந்த நூல் வெளியீட்டு மையத்தினால் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

உலகெங்கும் பல பல்கலைக்கழகங்களில் பாடமாக்கப்பட்ட இப் பாகவதம் தற்போது தமிழிலும் இலங்கையில் கிடைக்கப் பெற்றுள்ளது. படைத்தல், காத்தல், அழித்தல் உட்பட பல உயர் விஞ்ஞான அறிவை அதிகாரபூர்வமாக கொண்டது. இந் நூல்களை வாங்கி படித்து உங்கள் வாழ்கையை பயனுடையதாக செய்யுங்கள். இவ் அரும் பெரும் பொக்கிஷத்தை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.






**SRI SRI RADHA KRISHNA TEMPLE**

**INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS**

ISKCON

Founder Acharya His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada



**No.188, New Chetty Street, Colombo 13, Sri Lanka. Tel : 2433325**
**Fax : 2471099 Email : iskcon@slt.lk www.iskcon.lk**



# கோகுலம்



ISKCON

**Founder Acharya:**
**His Divine Grace**
**A.C. Bhaktivedanta Swami Prabhupada**

வத்தளை, மாபோல, இல. 607A, நீர்கொழும்பு வீதியில் இயங்கும் பக்திவேதாந்த சிறுவர் இல்லம் "கோகுலம்" சிறுவர்களுக்கு அன்பும் அரவணைப்பும் நல்வாழ்வும் அளிக்கும் கருணை இல்லமாக இயங்கி வருகின்றது. இவர்களுக்கு சிறந்த கல்வியையும், நற்பழக்க வழக்கங்களையும் கற்பிக்கக்கூடிய வகையில் இந்த இல்லத்துடன் இணைந்த பாடசாலையும் இங்கு உண்டு. இவர்களின் நல்வாழ்வுக்கான சேவையில் தாங்களும் இணைந்து கொண்டு தங்களால் இயன்ற உதவிகளை வழங்கி இறைவன் அருளைப் பெற வேண்டுகின்றோம்.

***Help These Children For their better Future!***

தற்போதைய சூழ்நிலையில் அவர்களைப் பராமரிக்க ஒரு நாளைக்கு ரூ. **35,000/-** செலவாகின்றது.

## கருணை இல்லமாக இயங்கும். பக்திவேதாந்த சிறுவர் இல்லம்



**www.gokulam.com**

தங்களின் அல்லது தங்கள் பிள்ளைச் செல்வங்களின் பிறந்த தினம், தங்களின் திருமண நாள், உறவினர்களின் ஞாபகார்த்தம் போன்ற எந்த தினங்களிலும் நன்கொடைகளை வழங்கி இச் சிறார்களுக்கு உதவலாம்.

**BHAKTIVEDANTA CHILDREN'S HOME GOKULAM** No. 607A, Negombo Road, Mabola, Wattala. Tel - Office : 011 2433325 Home : 011 2948398

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹரே கிருஷ்ணா
கொழும்பு கொட்டாஞ்சேனை , புதுச்செட்டித்தெரு இல: 188

# ஸ்ரீஸ்ரீ ராதாகிருஷ்ண ஆலய கட்டிட வேலைகள் நிறைவடையும் நிலையில்



இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள ஸ்தபதியும் கட்டிட வேலையாட்களும் ஆலய வேலைகளை பூர்த்தி செய்வதில் முழுமூச்சுடன் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இவ்வருட இறுதிக்குள் பிரதான வேலைகள் நிறைவடைந்துவிடும்.



பகவான் எழுந்தருளும் மூலஸ்தானத்தின் ஸ்தூபி வேலைகள் தற்போது நடைபெற்று வருவதால் அதற்குத் தேவையான சிமெந்து, கல், மணல்போன்ற கட்டிடவேலை பொருட்கள் எதனையும் வழங்கி பக்தர்கள் பகவான் அருளைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆலயம் என்பது பூமியில் சொர்க்கம் போன்று திகழவேண்டுமென்பதும் அது மக்களுக்கு சகல ஆன்மிகக் கல்வியையும், கலாசார தேவைகளையும் பூரணமாக வழங்க வேண்டுமென்பதும் சமூகத்தில் அமைதியையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்த வேண்டுமென்னும் சுவாமி பிரபுபாதாவின் நோக்கத்தின்படியே இவ்வாலயம் உருவாகிக் கொண்டிருக்கிறது.

ஆலய திருப்பணியில் இணைந்துகொள்ள விரும்புபவர்களுக்கு இது ஒரு நல்ல வாய்ப்பு என்பதால் அனைவரும் முன்வந்து தம் பங்களிப்பை நல்குமாறு பக்தர்கள் அழைப்புவிடுக்கின்றனர்.



# SRI SRI RADHA KRISHNA TEMPLE

## INTERNATIONAL SOCIETY FOR KRISHNA CONSCIOUSNESS

Founder Acharya His Divine Grace A.C. Bhaktivedanta Swami Prabhupada

ஹட்டன் நெஷனல் வங்கியில் அல்லது கொமார்ஷல் வங்கியில் பணத்தை வைப்புச்செய்யலாம்.

Commercial Bank, Kotahena
A/C Name : ISKCON Temple Fund
A/C No. : 1120017042

Hatton National Bank, Kothena
A/C Name : ISKCON
A/C No : 207010000891

No.188, New Chetty Street, Colombo 13, Sri Lanka.
Tel : 2433325 Fax : 2471[illegible] Email : iskcon@slt.lk www.iskcon.lk

ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org